24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 24
விலை: 30

சுடர் 34 | கதிர் 118 | பங்குனி 11ஆம் நாள் | திங்கட்கிழமை | 25 மார்ச் 2019 | வள்ளுவர் ஆண்டு 2050

- வெளிநாட்டு நீதிபதிகள் நுழையமுடியாது
- பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றுக்கு கொண்டு செல்லவே முடியாது
- தமிழ்க் கூட்டமைப்பு அரசமைப்பை மீறுகின்றது

# கலப்பு நீதிமன்றப் பொறிமுறை குறித்து இனிமேல் எவரும் வாய்திறக்க முடியாது

## சீறுகின்றார் அரச தலைவர் மைத்திரிபால



கொழும்பு, மார்ச் 25

வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு விசாரணைப் பொறிமுறையை ஜெனிவா மாநாட்டில் வைத்தே இலங்கைக் குழு நிராகரித்துவிட்டது. இலங்கையின் நிலைப்பாட்டை அயலுறவுத்துறை அமைச்சர் திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டார். வெளிநாட்டு நீதிபதிகள் இங்கு நுழைவதற்கு ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். கலப்பு நீதிமன்றப் பொறிமுறை தொடர்பில் இங்கு இனிமேல் எவரும் பேசவே முடியாது. இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்தார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன. >> 19

## எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் வவுனியாவில் 26 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 25
மன்னார் தவிர்ந்த வடக்கின் ஏனைய மாவட்டங்களில் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. நடப்பாண்டின் முதல் காலாண்டில் வவுனியாவில் 26பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.
எலிகள் அல்லது >> 19

ரணில் அரசு பதவியில் நீடிக்க

## தமிழ்க் கூட்டமைப்பு இனி ஆதரவு வழங்க முடியுமா?

ரெலோவின் செயலர் கேள்வி

யாழ்ப்பாணம், மார்ச் 25
உலக அரங்கில் தான் ஒப்புக் கொண்ட பொறுப்புக்களை அப்பட்டமாக நிராகரிக்கின்ற இலங்கை அரசுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனிமேலும் ஆதரவு >> 19

## தமிழர்களை வைத்து அரசியல் நடத்தும் தமிழ் அரசியல்வாதிகள்

சாடுகிறார் மைத்திரிபால

கொழும்பு. மார்ச் 25
தமிழ் மக்களின் வலிகளையும், வேதனைகளையும் வைத்து தமிழ் அரசியல்வாதிகள், அரசியல் நடத்துவதாக அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். >> 19

## சுழற்சி முறை மின்தடைக்கான அட்டவணை வெளியிடப்பட்டது

கொழும்பு, மார்ச் 25
நாடளாவிய ரீதியில் இன்று முதல் சுழற்சி முறையில் மின்சாரம் துண்டிக்கப்படும் என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.
இன்று காலை 8.30 மணி முதல் இரவு 9.30 மணி வரையில் பல்வேறு பகுதிகளில் பல்வேறு நேரங்களில் மின்சாரம் துண்டிக்கப்படவுள்ளது.
காலை 8.30 மணி முதல் 11.30 மணி வரை. >> 19

## இந்திய மீனவர்கள் 11 பேர் நெடுந்தீவில் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 25
எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட் >> 19

புதுக்குடியிருப்பில்

## கசிப்பு உற்பத்தியை கட்டுப்படுத்த முயற்சி

மாற்றுத் தொழில் வழங்க பொலிஸார் நடவடிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட >> 19

## இந்திய மீனவரை விரட்டினர் இலங்கைக் கடற்படையினர்

*பல லட்சம் மதிப்பிலான மீன்பிடி சாதனங்கள் சேதம் என்று இந்திய மீனவர்கள் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், மார்ச் 25
கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக >> 19

## ஊடக படுகொலைக்கு ரணில் அரசு உடந்தை

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஒரு பிடிபிடித்தார் சரவணபவன் எம்.பி

'2015ஆம் ஆண்டில் போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரிக்க வெளிநாட்டு நீதிபதிகள், வழக்குத் தொடுநர்களை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றப் பொறிமுறை ஒன்றை உருவாக்க இணங்கிவிட்டு அதனைச் செய்யமாட்டோம் என்று பின்வாங்கியதுடன் அதன் மூலம் நாட்டின் சுயாதீனம் பாதுகாக்கப்பட்டது என்று சொன்னவர்கள்தானே இந்த அரச தரப்பினர்! இத்தகையவர்களிடம் இருந்து நீதி எதிர்பார்ப்பது நாட்டு மக்களின் முட்டாள்தனமான செயலாகத்தான் இருக்கும். இவ்வாறு சபையில் காட்டமாகக் கருத்து வெளியிட்டார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன். (விரிவு பக்:2)

கேதீச்சர ஆலய அலங்கார வளைவு உடைப்புச் சம்பவம்

## பங்குத் தந்தை உள்ளிட்ட 10பேர் நேற்று சரணடைவு

பிணையில் உடனேயே விடுதலை >> 19

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# இன்னும் ஏன் இந்த ஆட்சிக்கு ஆதரவு?

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு எமது அரசு இணை அனுசரணை வழங்கியதால் அந்தத் தீர்மானங்களில் உள்ள அனைத்துப் பரிந்துரைகளையும் நாம் ஏற்பதாக எவரும் பொருள்கொள்ளக்கூடாது. நாட்டின் இறையாண்மையைப் பாதிக்காத பரிந்துரைகளை மட்டுமே நாம்நடைமுறைப்படுத்துவோம். எந்தக்காரணம்கொண்டும் நாம் கலப்பு நீதிமன்றப் பொறிமுறையை ஏற்கமாட்டோம்.

இவ்வாறு திருவாய் மலர்ந்திருக்கும் திருவாளர் வேறு யாருமல்லர், சாட்சாத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவே!

தமிழ்த் தலைவர்களின் முதுகில் குத்தி அவர்களை மீண்டும் ஒரு தடவை ஏமாற்றிவிட்ட இந்தச் சிங்களத் தலைவர்களின் குணத்தைக் குறிகாட்ட இதைவிடவும் வேறு உதாரணம் வேண்டுமா என்று தெரியவில்லை.

தலைமை அமைச்சரைப் பொறுத்தவரையில் 2015ஆம் ஆண்டில் ஏற்புடையதாக இருந்த போர்க் குற்றங்களை விசாரிப்பதற்கானகலப்புநீதிமன்றப்பொறிமுறை,அதன்பின் ஓரிரு வருடங்களில் இலங்கைக்குப் பொருத்தமற்றதாக மாறியது. இப்போது அது முற்றிலும் ஏற்க முடியாததாக மாறிவிட்டது.

ரணிலைப் பொறுத்தவரையிலோ சிங்களத் தலைவர்களைப் பொறுத்தவரையிலோ இதுவொன்றும் புதியவிடயமல்ல. ஏனெனில்வரலாறுமுழுவதும்இவர்கள்தமிழர்கள்விடயத்தில் இம்மி பிசகாமல் இப்படியேதான் நடந்து வருகிறார்கள். ஆனால், தமிழர்களுக்குத் தீர்வைத் தருவதில் ரணில் விக்கிரமசிங்க உறுதியாக நிற்கிறார், போர்க் குற்றங்கள் உள்ளிட்ட விடயங்களில் அவர் நேர்மையான அணுகுமுறையைக் கைக்கொள்பவராக இருக்கிறார் என்று எண்ணி, அவரோடு ஒத்திசைந்து, அவருக்காகப் போராடி, அவரது ஆட்சியைத் தக்க வைப்பதற்குப் பாடுபட்ட தமிழ்த் தலைவர்களுக்குச்சிலவேளைகளில்இது ஆச்சரியமூட்டுவதாக இருக்கலாம்,கவலையளிப்பதாகஇருக்கலாம்,சினத்தைக்கூட ஏற்படுத்தலாம். ஆனால், தமிழ் மக்களுக்குப் பழகிப் போய்விட்டதொன்றுசிங்களத்தலைவர்களின்இந்தக்குணம்.

அவர்களைப் பொறுத்தவரையில் ஆட்சி அதிகாரத்தைப் பிடிப்பதற்கும் அதனைத் தக்க வைத்துக் கொள்வதற்கும் மட்டும்தான் தமிழர்களின் ஆதரவு தேவை. அந்தத் தேவை முடிந்ததும் கறிவேப்பிலை மாதிரி தூக்கித் தூரப் போட்டுவிடுவார்கள். இப்போது ரணில் விக்கிரமசிங்கவும் அதைத்தான் செய்திருக்கிறார்.

அவர் மட்டுமல்லர், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும்கூட அதைத்தான்செய்திருக்கிறார். அவரும்கூட கலப்புநீதிமன்றப்பொறிமுறையைஏற்கமுடியாதுஎன்கிறார் திட்டவட்டமாக.

ஆகக் குறைந்தது கலப்பு நீதிமன்றப் பொறிமுறையாவது வேண்டும்என்றுவலியுறுத்தும்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு அரசமைப்பை மதித்து நடக்கவேண்டும் என்றும் இரு தலைவர்களும் வலியுறுத்துகிறார்கள். அதாவது கலப்பு நீதிமன்றத்தைக் கோருவது இலங்கையை இறைமையையும் அரசமைப்பையும் மீறுகின்ற செயல் என்று பொருள்கொள்கிறார்கள்.

ஆகமொத்தத்தில்தமிழர்கள்விடயத்தில்ஐக்கியதேசியக்கட்சி என்றால் என்ன சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்றால் என்ன மைத்திரிபாலசிறிசேனஎன்றால்என்ன,ரணில்விக்கிரமசிங்க என்றால் என்ன எந்தவித வித்தியாசமும் அற்ற ஒரே அரசியல் கொள்கையின் வழித்தோன்றல்களே!

இப்போது கேள்வி என்னவென்றால், இவ்வாறு தமிழ் மக்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் இந்தச் சிங்களத் தலைவர்கள் தூக்கி எறிந்துவிட்ட பின்னரும் தற்போதைய ஆட்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறது என்பதுதான்!

புதிய அரசமைப்பு வராது, கலப்பு நீதிமன்றம் வராது, காணி விடுவிப்பு இனி முன்னேறுவதற்கு வழியில்லை, அரசியல் கைதிகள் விடுதலை இல்லையென்றே ஆகிவிட்டது. இவையெல்லாவற்றுக்குப்பின்னரும்கூட்டமைப்புஏன்இந்த ஆட்சிக்குஆதரவளிக்கின்றது? எப்போதுவேண்டுமானாலும் இந்த ஆட்சியைக் கவிழ்க்க முடியும் என்பதுதான் தம்மிடம் உள்ள துருப்புச் சீட்டு என்று முன்னதாக விளக்கம் சொல்லியிருந்தது கூட்டமைப்பு, இப்போது அந்தத் துரும்பு ஒரு செல்லாக்காசு என்பது வெளிப்பட்ட பின்னரும் அதை வைத்திருப்பதில் என்ன பயன்?

# ஊடக படுகொலைக்கு ரணில் அரசு உடந்தை

## நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் ஒரு பிடிபிடித்தார் சரவணபவன் எம்.பி

'2015ஆம் ஆண்டில் போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரிக்க வெளிநாட்டு நீதிபதிகள், வழக்குத் தொடுநர்களை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றப் பொறிமுறை ஒன்றை உருவாக்க இணங்கிவிட்டு 2018ஆம் ஆண்டு அதனைச் செய்யமாட்டோம் என்று பின்வாங்கியதுடன் அதன் மூலம் நாட்டின் சுயாதீனம் பாதுகாக்கப்பட்டது என்று சொன்னவர்கள்தானே இந்த அரச தரப்பினர்! இத்தகையவர்களிடம் இருந்து நீதி எதிர்பார்ப்பது ஒருவேளை இந்த நாட்டு மக்களின் முட்டாள்தனமான செயலாகத்தான் இருக்கும் இவ்வாறு சபையில் காட்டமாகக் கருத்து வெளியிட்டார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற வரவு - செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சரவணபவன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார். அவர் சபையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:



'இந்தச் சபையின் வருடாந்த நிதி அறிக்கையின் மீது நடக்கும் விவாதங்களின் போது ஊடகத் துறை விவாதங்களில் கடந்த 9 ஆண்டுகளாகத் தவறாமல் உரையாற்றி வருகின்றேன். அதிலும் குறிப்பாகக் கடந்த நான்கு வருடங்களாக, அதாவது இந்த ஆட்சியில் நிதி அறிக்கையின் ஊடக அமைச்சு தொடர்பான விவாதத்தில் தவறாமல் கலந்துகொள்கின்றேன். ஒரு ஊடக நிறுவனத்தை தலைமை தாங்குபவன் என்ற அடிப்படையிலும் ஊடகவியலாளர்களுடன் நெருங்கிப் பழகுபவன் என்ற அடிப்படையிலும் இந்த வாய்ப்பைத் தவறவிடக்கூடாது என்று நினைப்பவன் நான்.

ஆனால், இப்பொழுது உங்கள் முன் பேசுகின்ற இந்த நேரத்தில், இவ்வாறு இந்த உயரிய சபையில் உரையாற்றுவதால் பயன் ஏதாவது உண்டா என்கிற அங்கலாய்ப்பு எழுகிறது. இதுபோன்ற பெரும்பான்மைப் பிடிவாத அரசுகளின் சபைகளில் ஏனைய இனங்களுக்கும் மதங்களுக்கும் மக்களுக்கும் நீதி கிடைக்கப்போவதில்லை என்கிற ஆணித்தரமான உண்மை பெரும் பாரமாக என் ஆன்மாவை அழுத்துகின்றது. கவலை கொள்ள வைக்கின்றது. அதேநேரத்தில் எமது உணர்வுகளையும் ஆதங்கங்களையும் பதிவு செய்து வைப்பதற்கு இதைவிட வேறு வழியுமில்லை என்பதனால் இந்த உரையை இங்கே ஆற்றவேண்டியவனாக இருக்கின்றேன்.

### ஊடகத்துறை தொடர்பில் இரு ஆட்சிகளும் ஒன்றே

ஊடகங்கள் மற்றும் ஊடகத்துறை சார்ந்து என்னைப் பொறுத்தவரையில், மகிந்த ராஜபக்ச ஆட்சிக்கும் தற்போதைய ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கும் இடையில் எந்தவேறுபாடும் இல்லை என்பதே கடந்த 4 ஆண்டுளில் கண்ட முடிவு. மகிந்தவின் ஆட்சியில் நடந்த ஊடக அடக்குமுறையும் ஊடகவியலாளர்கள் படுகொலையும் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதலும் இந்த ஆட்சியில் இல்லையே என்று நீங்கள் வரிந்துகட்டிக் கொண்டு வரலாம்.

ஆனால், அன்றைய ஆட்சியாளர்கள் தமது செயல்கள் மூலம் ஏற்படுத்திவிட்டுப் போன அச்சம், பயம், சுயதணிக்கை என்பவற்றை முற்றாக நீக்கிவிடக்கூடிய சூழலை ஏற்படுத்தத் தவறியதன் மூலம் அல்லது அத்தகைய சூழலை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு இருந்தும் அதனை முற்றாகப் புறக்கணித்ததன் மூலம் குற்றவாளிகளைத் தப்பவிட்டு அச்சத்தையும் சுயதணிக்கையையும் தொடரச் செய்ததன் மூலம் மகிந்த அரசுக்கும் ரணில் அரசுக்கும் பெரிய வேறுபாடுகள் ஏதும் இருப்பதாக எனக்குப்படவில்லை. மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் குற்றவாளிகளைத் தப்பவிடும் போக்கு (999) குறித்தும் பன்னாட்டு அளவில் பெருமெடுப்பில் பேசப்பட்டது. இத்தகைய போக்கை மனித உரிமை அமைப்புக்கள் கடுமையாகக் கண்டித்தன. ஆட்சி மாற்றத்தின் போதும் இன்றைய ஆட்சியாளர்களால் அதிகளவில் பேசப்பட்டவிடயமாகவும் இது இருந்தது.

'ஆனால், ஆட்சியைப் பிடித்த கடந்த 4 ஆண்டுகளில் நீங்கள் என்ன செய்தீர்கள்? ஊடகவியலாளர்களைப் படுகொலை செய்த, ஊடக நிறுவனங்க ளைத் தாக்கிச் சேதப்படுத்திய ஒரேயொரு குற்றவாளியையாவது கண்டுபிடித்தீர்களா? அதற்கான உண்மையான முயற்சிகளாகவது எடுக்கப்பட்டதா?

### ஊடகப்படுகொலை தொடர்பான விசாரணைகள் எதுவும் இல்லை!

கொல்லப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்பான விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்று நான் கடந்த 4 ஆண்டுகளாக இந்தச் சபையில் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றேன். கண்துடைப்பாக லசந்த விக்கிரமதுங்க மற்றும் பிரகீத் எக்னெலிகொட ஆகியோரின் வழக்குகளை மட்டும் விசாரிக்காதீர்கள் தமிழ் ஊடகவியலாளர்களான நிமலராஜன்,- சிவராம், நடேசன், 'உதயன்' பத்திரிகையின் ஊடகப் பணியாளர்கள் ஆகியோரின் கொலைகள் குறித்தும் விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்று மீண்டும் மீண்டும் கதறியிருக்கிறோம்.

ஆனால், ஆட்சியாளர்களாகிய நீங்கள் அதற்குக் கொஞ்சமாவது செவிசாய்திருக்கிறீர்களா? கண்துடைப்புக்காகக்கூட உங்களால் ஒரு தமிழ் ஊடகவியலாளரின் கொலை குறித்த விசாரணையை நடத்த முடியவில்லை என்றால் நீங்கள் கொலையாளிகளுக் உடந்தையானவர்கள், கொலைகாரக் கொள்கையை ஏற்றுக்கொண்டவர்கள் என்றுதானே அர்த்தம்.

பெரும் பன்னாட்டுத் தொடர்புடைய போதைப் பொருள் வர்த்தகர்களை, அரசியல்வாதிகளின் செல்லப்பிள்ளைகளாக விளங்கிய பாதாள உலகக் குழுவினரை நாட்டின் அரச தலைவரைக் கொலைசெய்யச் சதி செய்தவர்கள் எனக் கருதப்



**ஊடகவியலாளர்களைக் கொன்றவர்களையும் ஊடக நிறுவனங்களைத் தாக்கியவர்களையும் நீதியின் முன் நிறுத்துவோம் என்று கூறித்தான் அதிகாரத்தைக் கைப்பற்றியது இந்த ஆட்சி. ஆனால், லசந்தவின் கொலை விசாரணைக்கும் எக்னொலிகொடவின் மறைவு தொடர்பான விசாரணைக்கும் நடந்திருப்பது என்ன? குறைந்தபட்சம் சிங்கள ஊடகவியலாளர்களுக்காவது நீதி வழங்கப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. அதனால்தான் மகிந்த ஆட்சிக்கும் ரணில் ஆட்சிக்கும் இடையில் எந்தவொரு வித்தியாசமும் இல்லை என்கிறேன்.**

படுபவர்களையெல்லாம் இந்த நாட்டின் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்து வைத்துள்ளனர்.
இப்படியான ஆற்றல் கொண்டவர்களால் ஏன் ஊடகங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் எதிரான வன்முறைகளில் ஈடுபட்டவர்களைக் கைதுசெய்ய முடியவில்லை? அது முடியாம லில்லை. அதற்கான அரசியல் விருப்பு இல்லை என்பதாலேயே இந்த நிலமை.

**2015 ஆட்சிமாற்றத்தால் ஏமாற்றமே எஞ்சியது**

2015ஆம் ஆட்சி மாற்றத்துடன் இந்த நிலைமைகள் அனைத்தும் மாறும் என்று எதிர்பார்த்தோம். அது சாதாரண எதிர்பார்ப்பல்ல. மிகப் பெரும் எதிர்பார்ப்பு. ஏனெனில் 'ஊடக சுதந்திரம்' என்பதும் ஊடக அடக்குமுறைகளுக்கும் ஊடகவியலாளர்க ளுக்கும் எதிரான தாக்குதல்களுக்கும் நீதி வழங்கப்படும் என்பதும் ஆட்சி மாற்றத்துக்கான முக்கிய தேவைகளில் ஒன்றாக முன்வை க்கப்பட்டது.
எனவே, பெரு மாற்றம் ஒன்று நிகழும் என்கிற எதிர்பார்ப்பு இந்த உலகத்திற்கு இருந்தது போன்றே தமிழ், முஸ்லிம் மக்களுக்கும் குறைந்தபட்சம் குறிப் பிட்ட எண்ணிக்கையிலான ஊடகவியலாளர்களுக்கும் இருந்தது. துரதிர்ஸ்டவசமாக அந்த எதிர்பார்ப்புகள் அனைத்தும் பொய்யாகிப் போய், சிங்களத் தலைவர்கள் ஏமாற்றிவிடுவார்கள் என்று உறுதியாக நம்பிய ஊடகவியலாளர்கள் சிலரின் கூற்றே இன்று மெய்ப்பட்டு நிற்கின்றது.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை ரணில் விக்கிரம சிங்க இணைந்த புதிய ஆட்சி பதவிக்கு வரும்போது 'சுதந்திரமான ஊடகத்துறை' என்பதை முன்மொழிந்தி ருந்தார்கள். சுதந்திரமான ஊடகத்துறை என்பது வெறுமனே ஊடகங்கள் மீதான பௌதிக வன்முறைகளை நிகழ்த்தாமல் விடுவதை மட்டும் குறிப்ப தல்ல. அதையும் தாண்டி சமூகத்திற்கும், மக்களுக்கும் தேவையான தகவல்களைக் கட்டுப்பாடற்ற விதத்தில் கொடுப்பதையே குறிக்கும்.
ஊடகவியலாளர்களைக் கொன்றவர்களும் ஊடக நிறுவனங்களைத் தாக்கியவர்களும் சமூகத்தில் இன்றும் சுதந்திரமாக நடமாடிவரும் நிலையில், அச்சமின்றி, சுயதணிக்கை இன்றி, தகவல்களை வெளியிடும் சுதந்திரம் ஊடகவியலாளர்களுக்கு இருக்கின்றது என்று இந்த ஆட்சி எதிர்பார்க்கிறதா?
நான் தமிழ் ஊடகவியலாளர்களின் நிலைமை பற்றி மட்டும் இங்கு பேசவில்லை. சிங்கள ஊடகவியலாளர்களையும் உள்ளடக்கிய ஒட்டுமொத்த ஊடகவியலாளர்களின் நிலமை பற்றியும்தான் பேசிக்கொண்டிருக்கின் ன்.
**ஊடகவியலாளர்களைக் கொன்றவர்களையும் ஊடக நிறுவனங்களைத் தாக்கியவர்களையும் நீதியின் முன் நிறுத்துவோம் என்று கூறித்தான் அதிகாரத்தைக் கைப்பற்றியது இந்த ஆட்சி. ஆனால், லசந்தவின் கொலை விசாரணைக்கும் எக்னொலிகொடவின் மறைவு தொடர்பான விசாரணைக்கும் நடந்திருப்பது என்ன? குறைந்தபட்சம் சிங்கள ஊடகவியலாளர்களுக்காவது நீதி வழங்கப்பட்டிருக்கிறதா என்றால், இல்லை. அதனால்தான் மகிந்த ஆட்சிக்கும் ரணில் ஆட்சிக்கும் இடையில் எந்தவொரு வித்தியாசமும் இல்லை என்கிறேன்.**

**சிறுபான்மை மக்களுக்கு விடிவென்பது இல்லையா**

புதிய அரசமைப்பு உள்ளிட்ட சிறுபான்மை மக்களின் பிரச்சினைக ளுக்குத் தீர்வு காணும் விடயங்களி லும்கூட இதேதான் நடந்தது. நடந்துகொண்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கும் பாதிக்கப்பட்ட ஊடக நிறுவனங்களுக்கும் நீதி வழங்க முடியாத ஆட்சியாளர்கள் ஊடகங்களாலும் அவற்றின் செய்தி அறிக்கையிடலாலும் தாம் பாதிக்கப்பட்டிருக்கின்றோம் என்று கூச்சலிட்டு அவற்றைக் கறுப்பு ஊடகங்கள் என்று வெறுப்பைக் காறி உமிழ்வதில் என்ன நியாயம் இருக்கின்றது? எமது தரப்பிலிருந்தும் சிலர் ஊடகங்களுக்கு எதிரான இத்தகைய மென் தாக்குதலுக்கு ஆதரவு தருகின்றார்கள் என்பதும் கவலைக்குரியது.
உயிர் அச்சுறுத்தல் ஊடகப் பணியாளர்கள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் இல்லாமல் போய்விட்டதென்பது ஓர் ஆரோக்கியமான விடயம்தான். ஆனால் அரசியல் ரீதியான, அதிகாரபூர்வமான கண்ணுக்குத் தெரியாத ஓர் ஒடுக்குமுறை வலை ஊடகங்க்ள் மீது விரிக்கப்படுகின்றன என்பதை நான் இங்கு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். ஊடகத் சுதந்திரத்தைப் பிழையான வழிகளில் பயன்படுத்தக்கூடாது என்ற குரலுடன் ஊடகங்கள் மீதான ஒரு வித அச்சுறுத்தல் விடுக்கப்படு கின்றது. எல்லா ஊடகவியலாளர்களும் நடுநிலை நின்று நேர்மையாகச் செயற்படுகின்றனர் என நான் கூறவர வில்லை. சில உள்நோக்கங்களுடன் சில தரப்பினரை இலக்குவைத்து செயற்படும் ஊடகவியலாளர்கள் உள்ளனர் என்பதை நான் ஏற்றுக் கொள்கின்றேன்.
அப்படியானவர்களின் வார்த்தைகளை வார்த்தைகளால் மோதுங்கள், கருத்துக்களை கருத்துக்களால் மோதுங்கள். பொய்களை உண்மைகளால் மோதுங்கள். அதைவிடுத்து தங்கள் வார்த்தைகளை விளங்கிக் கொள்ளமாட்டாதவர்கள் என்றோ திரிபுபடுத்து கிறார்கள் என்றோ வசைபாடுவதும் ஒரு விதமான ஒடுக்குமுறைதான். அதிலும் அதிகார அரசியல்வாதிகளின் இத்தகைய மிரட்டல்களும் ஒருவித வன்முறைதான்.
தெற்கைச் சேர்ந்த சிங்கள ஊடகவியலாளர்களுக்கு நேர்ந்த கொடுமைகளுக்கே நீதி கிடைக்கவில்லை என்றால் இந்த நாட்டில் தமிழர் உள்ளிட்ட சிறுபான்மை இன ஊடகவியலாளர்களின் நிலைமையைச் சொல்லித்தான் தெரியவேண்டும் என்பதில்லை. மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் சிங்கள ஊடகவியலாளர்களையும்விட ஒப்பீட்டளவில் தமிழ் ஊடகவியலாளர்களே அதிகம் கொல்லப்பட்டும் பாதிக்கப்பட்டும் இருக்கிறார்கள்.
அதிலும் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழ் ஊடகவியலாளர்களே அதிகம் பாதிக்கப்பட்டார்கள். நிமலராஜன், தராக்கி சிவராம், நடேசன், சுகிர்தரா ஜன், உதயன் பத்திரிகை ஊழியர்கள் இருவர் என்று கொல்லப்பட்ட தமிழர்களின் பட்டியல் நீள்மானது. மேலும் பலர் கடத்தப்பட்டிருக்கிறார்கள், தாக்கப்பட்டிருக்கிறார்கள், அச்சுறுத்தப்பட்டிருக்கிறார்கள், உயிரைக் காத்துக்கொள்வதற்காக வெளிநாடுகளுக்குத் தப்பியோட நிர்ப்பந்திக்கப்பட்டி ருக்கிறார்கள். இன்னும் பலர் தமது தொழிலில் இருந்து ஒதுங்கி தமக்குப் பிடிக்காத வாழ்க்கை ஒன்றை வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் ஒருவருக்குக்கூட இந்த ஆட்சியிலும் நீதி கிடைக்கவில்லை.

**படையினரைக் காப்பாற்றத்தான் இந்த ஆட்சி மௌனிக்கிறதா!**

2001ஆம் ஆண்டிலிருந்து 2013ஆம் ஆண்டு வரையில் வடக்கில் இருந்து வெளியாகும் 'உதயன்' பத்திரிகை நிறுவனமும் அதன் ஆசிரியர்கள், பணியாளர்களும் 30 தாக்குதல்கள், மிரட்டல்கள், அச்சுறுத்தல்களை எதிர்கொண்டிருக்கிறார்கள். இவற்றில் 5 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர். மேலும் இருவர் மீது கொலை முயற்சி நடந்திருக்கிறது. உதயனின் ஆசிரியர் ஒருவர் பட்டப்பகலில் கடத்தப்பட்டிருக்கிறார்.
பின்னர் அவரது கடத்தல் கைது என்று மாற்றப்பட்டிருக்கிறது. இந்தச் சம்பவங்கள் பலவற்றிலும் அரச படைகளுக்கும் ஒட்டுப் படைகளுக்கும் நேரடியான தொடர்பு இருக்கின்றது என்று தொடர்ந்து குற்றஞ்சாட்டிவரு கின்றோம். இரண்டு ஆசிரியர்கள் அரச படையினரால் நேரடியாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள். ஒருவேளை, தமது படையினரைக் காப்பாற்றுவதற்காகத்தான் இந்தச் சம்பவங்களில் ஒன்றைக்கூட இந்த ஆட்சியும் விசாரணைக்கு எடுக்காமல் இருக்கிறதோ தெரியாது.
லசந்த, எக்னொலிகொட போன்றோரின் வழக்குகளை மீள் விசாரணைக்கு எடுத்துக்கொண்டதுகூட பன்னாட்டுச் சமூகத்தைச் சமாளிக்கத்தானே தவிர உண்மையான நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்காக அல்ல என்பது இப்போது வெளிச்சமாகிவிட்டது. 2017 டிசெம்பர் மாதம் கொழும்பு தாஜ்சமுத்திரா நட்சத்திர விடுதியில் ஒரு பன்னாட்டு மாநாடு நடத்தினார்கள்.
அரசின் ஆதரவு, அனுசரணையுடன் இந்த மாநாடு நடத்தப்பட்டது. பத்திரிகையாளர்களுக்கு எதிரான குற்றங்களைப் புரிந்தோரைத் தண்டிக்காது தப்பவிடும் போக்கை முடிவுறுத்தி சட்டத்தின் ஆட்சியை நிலை நிறுத்து வதன் மூலம் வெளிநாட்டுச் சுதந்தி ரத்துக்கான பிராந்திய கூட்டுறவை வலுப்படுத்துவது என்கிற தலைப்பில் இந்த மாநாடு நடந்தது. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் நிதி அமைச்சர் மங்கள சமரவீர உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் பலரும் இந்த மாநட்டில் கலந்துகொண்டிருந்தனர். அதற்குப் பின்னர்கூட ஊடகவியலாளர் கொலைகள் தொடர்பில் ஒரு குற்ற வாளிகூடக் கைது செய்யப்படவில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது.
உண்மையில் இந்த ஆட்சியாளர்கள் நாட்டு மக்களை ஏமாற்றிவிட்டார்கள். அவர்களுக்கு உண்மையை எதிர்கொள்வதற்கான திராணி கிடையாது. முதுகெலும்பற்றவர்கள். 2015ஆம் ஆண்டில் போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரிக்க வெளிநாட்டு நீதிபதிகள், வழக்குத்தொடுநர்களை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றப் பொறிமுறை ஒன்றை உருவாக்க இணங்கிவிட்டு 2018ஆம் ஆண்டு அதனைச் செய்யமாட்டோம் என்று பின்வாங்கியதுடன் அதன் மூலம் நாட்டின் சுயாதீனம் பாதுகாக்கப்பட்டது என்று சொன்னவர்கள்தானே இவர்கள்! இத்தகையவர்களிடம் இருந்து நீதி எதிர்பார்ப்பது ஒருவேளை இந்த நாட்டு மக்களின் முட்டாள்தனமான செயலாகத்தான் இருக்கும்.

**ஆட்சியாளர்கள் மீதான நம்பிக்கையை இழந்துள்ளனர் தமிழ் ஊடகவியலாளர்கள்**

மகிந்த ஆட்சிக் காலத்தில் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பில் ஒரு திட்டம் அரசால் அறிவிக்கப்பட்டது. அதற்கு வடக்கு, கிழக்கில் இருந்து ஒரு தமிழ் ஊடகவியலாளர்கூட விண்ணப்பிக்கவில்லை என்பதில் இருந்தே இந்த ஆட்சியின் மீது அவர்கள் கொண்டிருக்கக்கூடிய நம்பிக்கை புலப்பட வில்லையா?
வடக்கு, கிழக்கில் உள்ள ஊடகவியலாளர்கள்தான் அதிகளவில் பாதிக்கப்பட்டவர்கள். ஆனாலும், அவர்கள் இழப்பீட்டுக்காக விண்ணப்பிக்க விரும்ப வில்லை. இந்த இழப்பீட்டுக்கான மதிப்பீடுகள்கூட கேலிக்குரியவையாகவே இருக்கின்றன. வடக்கு, கிழக்கில் ஊடகவியலாளர்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டதற்கு பொலிஸார், படையினர் மற்றும் அவர்களோடு சேர்ந்தியங்கிய தமிழ் ஒட்டுக்குழுக்கள் மீதே குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன.
இத்தகைய நிலையில் தமிழ் ஊடகவியலாளர்கள் தாம் அச்சுறுத்தப்பட்டது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறையிட்டிருந்தால்தான் இழப்பீடு பெறமுடியும் என்கிறார் ஊடக அமைச்சின் மேலதிக செயலாளர். உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறை அதுதானாம். அச்சுறுத்தல், அடக்குமுறைகள் குறித்தெல்லாம் ஆதாரங்கள் இருந்தால்தான் இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ளலாமாம். இதைவிடச் சுத்த கோமாளித்தனம் வேறு ஏதும் இருக்கமுடியாது.
**ஊடக அமைச்சர் இதன் மீது கவனம் செலுத்த வேண்டும். மகிந்த ஆட்சிக் காலத்தில் வடக்கு, கிழக்கு ஊடகவியலாளர்களுக்கு ஒரு கொலைக் களமாகவே இருந்தது. இதனால் ஊடகவியலாளர்கள் பலரும் உயிரைக் காத்துக் கொள்ள தமது பணியை விட்டு ஒதுங்கவேண்டியவர்களாக இருந்தார்கள். மேலும் பலர் தற்காலிகமாகவேனும் ஒதுங்கியிருந்தார்கள். அவர்களையெல்லாம் உனக்கு அச்சுறுத்தல் இருந்ததற்கு ஆதாரம் கொண்டுவா என்று கேட்பது நியாயமானது அல்ல.**
எனவே, தமிழ் ஊடகவியலாளர்களைப் பொறுத்தவரையில் கொழும்பிலிருந்துகொண்டு ஆட்சி நடத்தும் அதிகாரிகளின் அணுகுமுறை சரியானதாக இருக்கமுடியாது. வடக்கு, கிழக்கின் புவியியல் மற்றும் அரசியல் நிலவரங்களைத் தெரிந்த புரிந்த அதிகாரிகளை உள்ளடக்கியதாக இந்த மதிப்பீட்டுக் குழுக்கள் இருந்தால்மட்டுமே இழப்பீட்டு விடயம் வெற்றிகரமானதாக அமையமுடியும் என்பதையும் ஊடக அமைச்சருக்கு இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்' - என்றார்.


# சேவைநலன் பாராட்டு


அகவை அறுபதை நிறைவுசெய்து
இன்று (25-03-2019) திங்கட்கிழமை
சேவையிலிருந்து ஓய்வுபெறும்
எமது ஆசிரியர்
திருமதி **விக்கினேஸ்வரி மணிவண்ணன்**
(Primary Trained ,BED,SLTS 2- I)
அவர்கள் தனது ஓய்வுக்காலத்தில் புகழோடும்.
மகிழ்வோடும் எல்லாநலன்களும் பெற்றுவாழ
அகமகிழ்ந்துவாழ்த்துகின்றோம்.
Congratulations
**சேவையாளர் சங்கம்**
**யா/சாவகச்சேரி மகளிர்கல்லூரி**



## மரண அறிவித்தல்

### பொன்னையா கிருஷ்ணகுமார்

(Venkadesvaran Construction)



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், நாவற்குழி மற்றும் இல.70, அத்தியடி புதுவீதியை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா கிருஷ்ணகுமார் 23.03.2019 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லமுத்தர் - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான விஸ்வநாதர் - பொன்னம்மா தம்பதிகளின் பெறாமகனும், செல்வராணியின் பாசமிகு கணவரும், அபிராமி (Trainee, ATC) மதுராங்கன் (மாணவன்- யாழ். இந்துக் கல்லூரி, உயிரியல் A/L 2019) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷ்ணாம்பாள் (UK), இரஞ்சிதமலர் (கனடா), தேவகி (கொழும்பு), ஜெயக்குமார் (கனடா) ஜெயந்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், யோகராசா மற்றும் செல்வ விநாயகபிரகாசம் (ஓய்வுநிலை RME), யமுனா (கனடா), மோகன் (ஆசிரியர், யா/வேம்படி மகளீர் உயர்தர பாடசாலை), சதானந்தமூர்த்தி (ஓய்வுநிலை HNB அலுவலர்), சதாசிவமூர்த்தி (பொறியியல் உதவியாளர், கமநல சேவைத் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2019)திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் கோம்பயன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**70, அத்தியடி புதுவீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CS/24255)(11,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் திருமதி
### கமலாம்பிகை கோபாலபிள்ளை

(வேலணை வடக்கு)

**திதி : (25.03.2019) பஞ்சமி**

தோற்றம் 23.07.1924 — மறைவு 05.04.2018


*அம்மா என்னும் சொல்லுக்கு இலக்கணம் நீ !*
*ஆதரவுக்கரம் தந்து காத்தவள் நீ !*
*இரக்கத்தின் உறைவிடமாய் இருந்தவள் நீ !*
*ஈடிணையில்லா இன்பம் தந்தவள் நீ !*
*உயர்ந்த உள்ளம் கொண்டவள் நீ !*
*ஊனினை உருக்கி எமை வளர்த்தவள் நீ !*
*எம்மை அன்பால் ஆட்சி செய்தவள் நீ !*
*ஏக்கம் தவிர்த்து வாழ வைத்தவள் நீ !*
*ஐயம் இட்டு உண்டு வாழ்ந்தவள் நீ !*
*ஒருமையுடன் இறை திருவடி இணைந்தவள் நீ !*
*ஓங்காரம் எனும் பொருளை உவந்தவள் நீ !*
*ஔவியம் பேசேல் என்றவள் நீ !*

**உன் ஆத்மா சாந்தி பெற இலத்தைவனத்தானை இறைஞ்சி நிற்கும்**
**என்றும் உமை மறவாத**

**இல.41, கலட்டி லேன்,**
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**
**மற்றும் குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



தோற்றம் 03 . 06 . 1940 — இறப்பு 22 . 03 . 2019

### செல்லத்துரை யோகரட்ணம்

129/3, கடற்கரை வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இல.38 யமுனா வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை யோகரட்ணம் 22.03.2019 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி செல்லத்துரை - விக்டோரியா தங்கலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - ஆரோக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் புஸ்பத்தின் அன்புக் கணவரும் கிறிஸ்ரபெலா(ரமி), ஸ்ராலின் ஜெறிக்கோ, கொலின்ஸ்ருபினன், லெனன்ஸ் கரோலின், அனிற்றோகிரட் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் அன்ரனிராஜ்(பிரதம தபாலகம்), சுகந்தி, சூட்டி, கஸ்தூரி, ரஜினி ஆகியோரின் மாமனாரும் புஸ்பராசா(பீட்டர் போல்), அன்னராசா, மணிலா, வேவி, ராணி, கமலா ஆகியோரின் அன்புச் சகோதரனும் யெகூ(றசாத்), சலோமி, சரோன், சாம், சாருகா, செகான், அத்தாலியா, இம்மானுவேலா, எப்சிபா,லேவி, ஓசியா, ஸ்ரைபான், தனுஷ்டி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் நாளை (26.03.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக வசந்தபுரத்தில் அமைந்துள்ள அப்போஸ்தல திருச்சபை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**38, யமுனா வீதி,**
**நல்லூர்.**

(CS-24256)(14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 904 0898/ 077 834 0848**

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 10 . 07 . 1964 — மறைவு 23 . 02 . 2019

### அமரர் பாலசிங்கம் ஸ்ரீபாதன்

**(பிரபல புகையிலை வியாபாரியும் ஹரணி ஹாட்வெயார் உரிமையாளரும்)**

கடந்த 23.02.2019 சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் பாலசிங்கம் ஸ்ரீபாதன் அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (25.03.2019) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அன்றையதினம் தாங்களும் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னார் நோய்வாய்ப்பட்டு இருந்தவேளையில் வைத்தியம் மேற்கொண்ட யாழ்.போதனா வைத்தியசாலை, கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் தனியார் வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**197A, பொற்பதி வீதி,**
**கோண்டாவில்.**

(CS/24250) (11.17)

**குடும்பத்தினர்.**


உலகின் முதன்மையான பிரித்தானிய பல்கலைக்கழகங்களின்
பட்டக்கல்விகளை யாழ்மண்ணில் IIS வழங்குகின்றது...
UGC APPROVED
UNIVERSITY of GREENWICH
BA (Hons)
Business & Management
Business & Marketing
MBA
Master of Business Administration
Leeds Trinity University
BSc (Hons)
Computing
Computer Systems & Networking
Admissions open for April Intake... Call us on : 021 222 8060
IIS CITY CAMPUS
200, Sivan Pannai Road , Jaffna
info@iis.cdu.lk | www.iis.cdu.lk
PIBT
Hotline:
071 777 4666
021 4900 900
Why should you select IIS ?
• IIS set high standards for teaching quality.
• The lecture panel consist of eminent academic and industry experts.
• Bank loan facilities and easy payment schemes.
• Industrial placement at leading companies.


SOLAR சிஸ்டம்ஸ்
செலவை ஏற்படுத்திய மின்சாரம் வருமானத்தைப் பெற்றுத் தரும்
மின் கட்டணம் இல்லை
E Green Lanka
MICRO PC SYSTEMS
25 YEARS WARRANTY
2kW SYSTEM 350,000/= 240 Units
3kW SYSTEM 470,000/= 360 Units
5kW SYSTEM 750,000/= 600 Units
8kW SYSTEM 1,080,000/= 950 Units
12kW SYSTEM 1,480,000/= 1465 Units
22kW SYSTEM 2,200,000/= 2640 Units
33kW SYSTEM 3,300,000/= 3960 Units
44kW SYSTEM 4,400,000/= 5280 Units
மின்சார தடை இல்லை No Power-Cut
விவசாயிகளுக்கான மின்சாரம்
1hp முதல் 60hp வரை
SOLAR STREET GARDEN LIGHTS
3W 4W 5W 6W 15W 30W
44 kW CEB இனால் வருமானம் ரூ.116,160 (5280 x 22/-) ரூ.44 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 68,600/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 47,560/-.
33 kW CEB இனால் வருமானம் ரூ. 87,120 (3960 x 22/-) ரூ. 33 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 51,450/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 35,670/-
22 kW CEB இனால் வருமானம் ரூ. 58,080 (2640 x 22/-) ரூ. 22 இலட்சம் கடன் தொகைக்கான தவணைக் கட்டணம் 34,300/- ஆகவே 1 மாதத்திற்கான மொத்த வருமானம் 23,780/-
LECO Approved
சூரியகல மின் உற்பத்தி திட்டம்
ADB
• கடன் வட்டிவீதம் – 8% வருடத்திற்கு
கொழும்பு - 077 3963281/ 077 3963283 / 071 0356062
யாழ்ப்பாணம் - 077 3963280 / 0777 425973 / 0777 425974 / 077 3963284 / 077 3039536
வவுனியா - 0777 425974 / 0777 763071 / 077 3963273
மட்டக்களப்பு - 071 0356069 / 071 8963280 / 071 6963274 / 077 3963281
வங்கிகளினூடான வட்டி 8% முதல்
மொத்த விற்பனையாளர்கள் தொடர்பு கொள்ளவும் : 0773 076409 / 071 9963275 | E-mail: mail@micropcsystems.com | Web: www.solarpowerlk.com
No.115C, W.A. Silva Mawatha, Colombo 06. Tel: 011 4000686 | No.218, Hospital Road, Jaffna. Tel: 021 2225893 | No.668, 2nd Cross Street, Vavuniya. Tel: 024 2221969 | No.115-5C, New Kalmunai Road, Kalladi, Batticaloa. Tel: 011 5640650

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-05, பழையபூங்கா வீதி, ஆதன இல 31/29 என்ற இலக்கத்தைக்கொண்ட ஆதனம் நீக்கிலாப்பிள்ளை இராசம்மா என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை 622,5ஆம் யூனிற் இவரிக்குட்டியூர், வவுனியா அலோசியஸ் பெண் திரேசம்மாவும், இல.115/5 ,ஆலடி வீதி, தோணிக்கல், வவுனியா யோசேப் மெசியோவும் இல.52/2, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம், யோசேப் அல்பிரட்டும், எல்சியாவத்தை, நாரம்பல சரஸ் பிறேமரத்தினா பெண் லூர்த்தம்மாவும், இல70/3 பழைய பூங்கா வீதி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம் யோசேப் மகள் சகாயம்மாவும் அண்ணாமலை வீதி, சுதுமலை தெற்கு, மானிப்பாய் டோசன் யூலியஸ் ஆதர் பெண் மேரி திரேசாவும், 70/3 பழைய பூங்கா வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம் குணரத்தினம் தவராஜாவும் பெண் அந்தோனியம்மாவும் பிரசித்த நொத்தாரிசு திருமதி. ச.இளங்கோவன் முகதாவில் 2016.05.03 ஆம் திகதியிட்டு 12425 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதியில் அவ்வுறுதியில் குறிப்பிடப்பட்ட ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு வொ.யுவக்கீம்பிள்ளை முன்பாக 1913.01.08 ஆம் திகதிய 4521 இலக்கத்தில் தங்கள் பேத்தியார் காலஞ்சென்ற சவரிமுத்து சுவாம்பிள்ளை பெண் மரியைப்பிள்ளை பேரில் முடிந்த சீதன உறுதியால் மாதாவழி முதுசமும் ஆட்சியுமென வெளிப் படுத்தி தவராசா அமிர்ராஜிற்கு நன் கொடையாக வழங்கியுள்ளார்.பின்னர் இதே நொத்தாரிசு முகதாவில் 2016.09.27 ஆம் திகதியிட்டு 12988 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய பிரிவிடுதல் உறுதியை தவராஜா அமிர்ராஜ் 1ஆம் புறமாகவும் . ஜோசப் மகள் சகாயம்மா 2ஆம் புறமாகவும் நிறைவேற்றி இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் தவராஜா அமிர்ராஜ்க்கு உரிய ஆதனமாக பிரிவிடல் செய்யப்பட்டுள்ளது.

அதன் பின்னர் இதே நொத்தாரிசு முகதாவில் 2017.12.24ஆம் திகதியிட்டு 14632 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்திய உறுதியில் "அத்தியடியிற் புலம்" நிலப்பரப்பு 4 குளி 09.34 விஸ்தீரணமுடைய ஆதனத்தில் சொரியலாய் நிலப்பரப்பு ½ தனது பேத்தியார் காலஞ்சென்ற சவரிமுத்து சுவாம்பிள்ளை பெண் மரியைப்பிள்ளை பேரில் முடிந்த சீதன உறுதிப்படி சொந்தக் காரியாக இருந்தார் என்றும் ஆனால் நிலப்பரப்பு ½ உள்ளிட்ட முழு ஆதனத்தையும் ஆண்டனுபவித்து வாழ்ந்து வந்தார் என்றும் குறித்த முழு ஆதனத்திலும் குறித்த மரியைப் பிள்ளை இறக்க அவவின் பிள்ளைகள் அனைவரும் ஆண்டனுபவித்து வந்தனர் என்றும் பின்னர் அனைவரும் திருமணமாகி வெளியேற தனது பெற்றோரும் தனது பெரிய தாயார் ஜோசப் மகள் சகாயம்மாவும் முழு ஆதனத்தையும் ஆண்டனுபவித்து வந்தனர் என்றும் தனது பெற்றோருக்கு பெரிய தாயாருக்கு எதிராக யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதென்றும், வழக்குத்தள்ளுபடி செய்யப்பட்ட பின்னர் தனது பெற்றோர்கள் தொடர்ந்து குடியிருந்து வந்தனர் என்றும் குறித்த ஆதனத்தில் தானும் தனது உரிமை வழி முன்னோர்களும் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக ஆட்சி செய்து வந்துள்ளனர் எனவும் வெளிப்படுத்தி யாழ்ப்பாணம், கொய்யாத்தோட்டம்.பழைய பூங்கா வீதி, இல 70/3 ஐச் சேர்ந்த தவராசா அமிர்ராஜ் வெளிப்படுத்தல் உறுதி நிறைவேற்றியுள்ளார்.

ஆதன விபரம்:- வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டிக்குளி இறை "ஆத்தியடியிற்புலம்" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் K.பரமேஸ்வரன் அவர்களின் வரைபட இலக்கம் 1472D/2013/2016.08.20 இல் துண்டு-1 எனக் காட்டப்பட்ட நில.பர 1 குளி 14.86 ஆகும். இதற்கு எல்லை.

**கிழக்கு:- குறித்த படத்தில் 10 அடி அகலப் பாதையின் முகப்பும் ஜோசப் மகள் சகாயம்மாவின் ஆதனமும். தவராசா பெண் அந்தோனியம்மாவின் ஆதனமும்**
**வடக்கு:- யோசப் ஜோர்ச் இனதும் வின்ஸ்ரன் ஐமிற்றாவினதும் ஆதனம்.**
**மேற்கு:-வாய்க்கால்.**
**தெற்கு:-பொனிப்பஸ்க்கும் றூபனுக்குமுரிய ஆதனம்.**

தற்போது இவ்வாதனம் தவராசா அமிர்ராஜ் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள்உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் . உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது தவராசா அமிர்ராஜ் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(இம்மானுவல் ஆனல்ட்)**
**முதல்வர்**
**மாநகரசபை.**

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-22, காரைக்காட்டு ஒழுங்கை, ஆதன இல 9A என்ற இலக்கத்தைக்கொண்ட ஆதனம் S.சுந்தரம், K.பொன்னையா என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை இலக்கம் 18, நந்தவாசம் சொர்ணவடலி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலைச் சேர்ந்த செல்லத்துரை விக்கினேஸ்வரனும் பெண் திலகவதியும், சிறிகாந்தன் கபிலனும் நடராசா நகுலேஸ்வரனும் பெண் நிவேதாவும் பிரசித்த நொத்தாரிசு மா.தியாகராசா முகதாவில் 11.03.2001 ஆம் திகதிய 4079ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதியில் இவ்வாதனம் 1919.01.24 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு க.சு.வீரவாகு முகதாவில் 10100ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்திய அறுதி உறுதியின்படி தங்களில் 2ஆம் பெயரின் தந்தையும் , 3ஆம்,4ஆம் பெயர்வழிக்காரர்களின் பேரனுமாகிய காலஞ்சென்ற செல்லம் சுந்தரம் வழி 2ம் பெயரை வந்தடைந்த தந்தைவழி முதுசமும் 3ஆம் 4ஆம் பெயர்வழிக்காரர்களின் மாதா வழி முதுசமும் தங்கு தடையற்ற ஆட்சியுமானதாகும் என வெளிப்படுத்தி இலக்கம் 9, காரைக்காட்டு ஒழுங்கை வண்ணார்பண்ணையைச் சேர்ந்த கனகரட்ணம் சுதந்திரராசாவிற்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

ஆதன விபரம்: வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடமேற்கிறை "இராசா வளவு" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் N.நகுலேசபிள்ளை அவர்களின் வரைபட இலக்கம் 69/1986.11.10 இல் துண்டு-1 எனக் காட்டப்பட்ட நில.பர.1 குளி 06 ஆகும். இதற்கு எல்லை.

**கிழக்கு:- காரைக்காட்டு ஒழுங்கை**
**வடக்கு:- இராசையா நாகராசாவின் ஆதனம்.**
**மேற்கு:- மயில்வாகனம் கோபாலகிருஷ்ணனின் ஆதனம்.**
**தெற்கு:- குறித்த 69ஆம் இலக்கப்படத்தில் 2ஆம் துண்டாகிய வல்லிபுரம் துரைராசாவிற்கும் பெண் பரமேஸ்வரியினதும் ஆதனம்.**

தற்போது முத்தையா கனகரட்ணம் சுதந்திரராசா இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது முத்தையா கனகரட்ணம் சுதந்திரராசா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப் பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள் கிறேன்.

**(இம்மானுவல் ஆனல்ட்)**
**முதல்வர்**
**மாநகரசபை.**

## மரண அறிவித்தல்

### கந்தையா நடராசா



கோப்பாய் மத்தி, அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடராசா 22.03.2019 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2019) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் உரும்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அம்மன் கோயிலடி,**
**கோப்பாய் மத்தி.**


(CS/24258)(11,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## நீங்கா நினைவுகளில்

**10 ஆம் ஆண்டு** | **28 ஆம் ஆண்டு**

**அன்னை மடியில்**
**30.08.1930**



**ஆண்டவன் அடியில்**
**25.03.2008**

**சிவனாய்**
**01.01.1939**



**சிவமாய்**
**12.04.1991**

**அமரர் முருகேசு துரைராஜா**
**திதி: சதுர்த்தி**

**அமரர் கோணேஸ்வரி துரைராஜா**
**திதி: திரயோதசி**

**எங்கள் வாழ்க்கையில் ஒளிவீசச் செய்த அன்புப் பெற்றோரே!**

எத்தனை கோடி சொந்தங்கள் இருந்தாலும் அவை உங்கள் இடத்தை நிரப்பாது நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து பல ஆண்டுகள் ஆனாலும் உங்களை எம் இதயக் கமலம் கொண்டு தினம் தினம் பூசிக்கின்றோம்.

**என்றும் நீங்கள் எம்முடனே!**
**ஓம் சாந்தி ! ஓம்சாந்தி !! ஓம் சாந்தி!!!**

கண்ணீர் மல்கும் நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
95, சிவன் பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.

ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com
021 492 7471, 021 492 7472

## கோழிப்பண்ணைக்கு ஆண்கள் தேவை

கோழிப்பண்ணையில் வேலை செய்வதற்கு இரவும் பகலும் தங்கி நின்று பணிபுரிய ஆண்கள் தேவை.
குறிப்பு: மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் உள்ளவர் வேணும். (CS 24259)(14:17)

**077 271 8149**

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் பிரபல கல்வி நிறுவனத்தில் உள்ள சிற்றுண்டிச் சாலைக்கு பெண் ஊழியர் தேவை. (IN 9722)(14,17)

**077 791 7611**

## Classes

**ஆங்கிலம் மற்றும் தமிழ்மொழி மூலம்**
**(English and Tamil Medium)**
**A/L (2019, 2020,2021)**
**இரசாயனவியல்** (Chemistry),
**பௌதீகவியல்** (Physics), **உயிரியல்** (Biology)
தரம் 6 - O/L வரை விஞ்ஞானம். கணிதம்
ICT மற்றும் ஆங்கிலம் என்பன தனியாக அல்லது குழுவாக வீட்டில் வந்து கற்பிக்கப்படும். (CS24249)(11,17)

**076 290 9288**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 25.02.2019
சிவபதமடைந்த எங்கள்
குடும்பத்தலைவர்

**அமரர்**
**ஐயாத்துரை**
**விநாயகமூர்த்தி**

**(A.V.M ஸ்ரூடியோ,**
**A.V.M's மெடிக்கல்,**
**A.V.M Construction**
**ஆகியவற்றின் உரிமையாளர்)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (25.03.2019) திங்கட்கிழமை காலை 7.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 27.03.2019 புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*குறிப்பு : இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

**புகையிரத நிலைய வீதி,**
**கொடிகாமம்.**

குடும்பத்தினர்.
(CS 23742)(14.17) **077 785 4792/ 071 598 5893**

## அத்வ சுத்த ஆன்ம ஈடேற்ற கிரியை

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் - வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப்படும்.*



கடந்த 24.02.2019 சுவாதி நட்சத்திரத்தன்று இறைவன் திருவருள்கூடிய
சுபவேளையில் ஆன்ம ஈடேற்றம் பெற்ற

**எமது ஆலய தர்மகர்த்தா அருள்வாக்குச் சித்தர்**

### தவத்திரு இரா. தர்மகுலசிங்கம் சுவாமிகள்

அவர்களின் அத்வ சுத்த ஆன்ம ஈடேற்ற கிரியை நாளை (26.03.2019) செவ்வாய்க்கிழமை எமது ஆலயத்தில் காலை 6.00 மணி தொடக்கம் ஆரம்பமாகி சமாதியில் சிவலிங்கப் பிரதிஷ்டையும் அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூஜையும் நடைபெறும்.


அனைவரும் ஆசாரசீலர்களாக கலந்து கொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.)

**தர்மகர்த்தா சபை**
**ஸ்ரீமகாகாளி அம்பாள் சங்கர நாராயணன் தேவஸ்தானம்**
**கோவில்பற்று தம்பகாமம், பளை**
**முல்லையடி, பளை.**

## மரண அறிவித்தல்கள்

### இராமலிங்கம் ஜெயபாலன்



**தோற்றம்** 08.06.1958 **மறைவு** 24.03.2019

சூறாவத்தை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் அங்களப்பாய், இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் ஜெயபாலன் நேற்று (24.03.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - இராசமணி தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற இலங்கநாதன் மற்றும் இராசேஸ்வரி தம்பதிகளின் மருமகனும் கலாராணியின் அன்புக் கணவரும் டிலானிகா (கனடா), ராகுலன், ஆதித்தியா (இராமநாதன் நுண்கலைப்பீடம், 3ஆம் வருடம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் இலட்சகிரியின் (கனடா) மாமனாரும் ஆதவன், அச்சுதன் (கனடா) ஆகியோரின் பேரனும் தரும்புத்திரி, காலஞ்சென்ற தியாகராஜா (ஜேர்மனி) மற்றும் மல்லிகாதேவி, காலஞ்சென்ற கணசாலிங்கம், கருணாந்தி கொழும்பு), காலஞ்சென்ற தயாபரன் இராசமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான பிரபாகரன், கலைச் செல்வி மற்றும் கலையரசி, தயாகரன் (ஆசிரியர் - யா/ இணுவில் மத்திய கல்லூரி), கலைமதி (ஜேர்மனி), இலங்கேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2019) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

### திருமதி சிவசோதி அருளையா



காரைநகர் அல்வின் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசோதி அருளையா நேற்று (24.03.2019) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு - அன்னம்மா தம்பதியினரின் பாசமிகு மகளும் அருளையாவின் அன்பு மனைவியும் பரஞ்சோதி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் நகுலேஸ்வரன், காலஞ்சென்ற அருளேஸ்வரன் மற்றும் கலாராணி, லதாராணி, குலனேஸ்வரன், விஜயராணி, பத்மராணி ஆகியோரின் அன்புத்தாயாரும் அருளானந்தம், நகுலேந்திரன், பிரதீபன், இராஜகோபால், சுசீலா, கௌரி ஆகியோரின் மாமியாரும் பிரகாஷ், பிரவீனா, சாருகா, பிரசன்னா, சாருஜன், அனுசாந், தமிழினி, திலக் ஷன், சங்கவி, டனுசன், டிலக் ஷனா, ஒசாத்மன், தஸ்மிரா, ஜெனனி, ஜதுர்சிகா, கம்சிகா, சிந்துஜா, சாருஜா, நிஷாந், பிரியதர்சினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2019) திங்கட் கிழமை கோண்டாவில் கலட்டி வீதியில் அமைந்துள்ள அவரது கடைசி மகளுடைய இல்லத்தில் மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் புனித சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### இளையதம்பி கந்தையா செல்வராசா

**(வேலணை கிழக்கு, 1ஆம் வட்டாரம், தாழிபுலம்)**



மலர்வு 23.11.1940 உதிர்வு 24.03.2019

வேலணை கிழக்கு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இந்தியா, சென்னை, K. K. நகரை தற்காலிக வசிப்பிடமாகவும் தற்பொழுது இல. 86, யாழ். அரசடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி, கந்தையா செல்வராசா நேற்று (24.03.2019) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தனுஸ்கோடி சண்முகம் - பூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும் புஸ்பலக்ஷ்மியின் பாசமிகு கணவரும் அபர்ணா (ஜமுனா - கனடா), பிரார்த்தனா (ரூபா - பிரான்ஸ்), நர்த்தனா (லக்ஷி) ஆகியோரின் அன்புத் தந்தையும் இன்பாரதன் - AJR கனடா), மகிந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான நாகராசா (முன்னாள் ஆசிரியர் - வேலணை மத்திய கல்லூரி), தியாகராசா(Electric Lions), தங்கராசா (E.K.T. Rice Mill), யோகராசா, லீலாவதி மற்றும் தவமணிதேவி (U.S.A.), லலிதாதேவி (வேலணை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற திவ்விய சிரோன்மணி, இராசலக்ஷ்மி, சிவபாலசிங்கம், ஸ்ரீதரன் மற்றும் லக்ஷ்மி (கொழும்பு), அலிஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி, நடராசா, தருமபுத்திரன் மற்றும் தனலக்ஸ்மி (கனடா), அமரசிங்கம் (கிளிநொச்சி), சரஸ்வதி (கனடா), மகேந்திரன் (கனடா), செல்வநாயகம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் அதிரா, காலஞ்சென்ற பவின் மற்றும் ஜெனிகா, சகான் (கனடா), நித்திலன், பிரித்திகா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (27.03.2019) புதன் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இல. 86, யாழ். அரசடி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இன்பா 0014 164 554 672 (கனடா),**
**அபர்ணா 0016 474 084 537 (கனடா),**
**மகிந்தன் 0033 665 453 462 (பிரான்ஸ்),**
**பிரார்த்தனா 076 775 1115 (இலங்கை),**
**நர்த்தனா 077 547 6774 (இலங்கை)** (CS 23791/15/18)

**தகவல்: குடும்பத்தினர்.**



இது புதுசு



ஆண்களும் பெண்களும் உடற்பயிற்சி செய்யக் கூடிய கருவி அறிமுகமாகியுள்ளது. இது ஆயிரத்து 650 ரூபாவக்கு விற்பனை செய்யப்படுகின்றன.








தினமும்
பசும்பால்
அருந்தினால்
உடல் மிகவும்
வலிமை பெறும்
அப்படியானால் பூனை ஏன்
இன்னும் வலிமை பெறவில்லை
தினமும் நீண்ட தூரம் நடந்தால் உடல்
எடை குறைந்து அழகாக இருக்கும்
அப்படியென்றால் யானை ஏன் எடை
குறையவில்லை
தினமும் 2 மணி நேரம நீச்சலடித்தால்
உடல் மெலிந்து ஸ்லிம்மாகும்
அப்படியென்றால திமிங்கிலம் ஏன்
ஸ்லிம் ஆகவில்லை
தினமும் சூரிய உதயத்திற்கு முன்பே
எழுந்தால் சகல செல்வங்களும்
தேடிவரும் அப்படியென்றால்
நியூஸ்பேப்பர் போடுபவர் BMW காரில்
அல்லவா சுற்றவேண்டும். எனவே
நீங்கள் அதிகமாக யோசித்து
மண்டையை பிச்சுக்காம தினமும் எப்படி
இருக்கிறீர்களோ அப்படியே இருங்கள்
அதுதான் நல்லது... காலை வணக்கம்..

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் மாவட்ட காணிப்பதிவக காணி மேலதிக மாவட்டப்பதிவாளர் **திருமதி குணாஜினி சதீஸ்குமார்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி திகாம்பரேஸ்வரி கோபாலகிருஷ்ணன்**

அவர்கள் 21.03.2019 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது குடும்பத்தினருக்கு மாவட்ட செயலகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யாழ்.மாவட்ட செயலக நலன்புரிக்கழகம்.**


SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் ▶ 945
சீட்டிழுப்பு திகதி ▶ 2019.03.23 சனிக்கிழமை

Q 23 29 49 67

ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 24.03.2019 | 2484 | ஊதா |

தனுசு

வெற்றி இலக்கங்கள் 03 05 19 37

செவ்வாய்க் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 390, 240/=

26.03.2019ம் திகதி செவ்வாய்க் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA

சீட்டிழுப்பு வாரம்: 423
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.03.24

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 118,242,498/-

ஆங்கில எழுத்து மற்றும் இலக்கங்கள்

A 03 18 35 69

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 564
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.03.24

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,623,615/-

வெற்றி இலக்கங்கள் 10 43 46 68 ஆங்கில எழுத்து W

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778


## தங்க ஆபரணங்கள் ஏல விற்பனை

இலங்கை மத்திய வங்கியில் பதிவுசெய்யப்பட்ட ஏசியா எசெட் பினான்ஸ் பி.எல்.சி கடன் ஒழுங்கமைப்பின் கீழ் குறிப்பிடும் கிளைகளில் 2018/10/31 க்கு முன் தங்க கடனுக்காக வைக்கப்பட்ட நகைகளும் 60 நாட்களுக்கு மேல் மீட்கப்படாத தவணை கடந்த தங்க நகைகளும் 85 வது சட்டத்தின் நிபந்தனைகள் பிரகாரம் கீழ் குறிப்பிடும் கிளைகளின் பொது ஏலத்தின் மூலம் விற்பனைசெய்யப்படும்.

| ஏலம் நடக்கும் கிளைகள் | ஏல விற்பனை திகதியும் நேரமும் | முகவரி |
|---|---|---|
| யாழ்ப்பாணம், பருத்தித்துறை, கிளிநொச்சி மற்றும் சாவகச்சேரி | 5 - ஏப்ரல்- 2019 பி.ப 2.00. | இல: 56/22, ஸ்டேண்லி வீதி, யாழ்ப்பாணம். |
| மட்டக்களப்பு, செங்கலடி | 26 - ஏப்ரல்- 2019 பி.ப 12.00. | இல,187, திருகோணமலை வீதி மட்டக்களப்பு |

கவனத்திட்க்கு :- ஏல விட்பனைக்கு நுழைவு கட்டணமாக ரூபா: 5000.00 அறவிடப்படும்.

ASIA ASSET FINANCE PLC
The unconventional finance company
Muthoot Finance

பொது முகாமையாளர் (கடன்மீட்பு)
இல. 76/1, தர்மபால மாவத்தை, கொழும்பு 03.
Hotline: 071-6531349
Tel: 0115-899300 / 0115-669922
Fax: 0112577477 Reg No: PB139

## பிறந்தநாள் வாழ்த்துக்கள்



இன்று 25.03.2019 இல் பிறந்தநாள் காணும்

**திரு. சின்னத்தம்பி ஏஸ்வரன்**

(சாரதி - பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை)

அவர்களை பன்னாலை சமுண்டா தேவி
ஞானவைரவர் அருளால்
சகல சௌபாக்கியங்களும் பெற்று
நீடூழி காலம்வாழ வாழ்த்துகின்றோம்.
அவரது சமூகப்பணிகள்
மேலும் மேலும் தொடரவும்
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
**பன்னாலை வாழ் மக்கள்**

## ஓராண்டு நினைவு அஞ்சலி



மண்ணில் 19 - 10 - 1958


விண்ணில் 25 - 03 - 2018

**சண்முகநாதன் தவச்செல்வி**

வேலணை மேற்கு வேலணை
6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த
சண்முகநாதன் தவச்செலவி கர்த்தருக்குள்
நித்திரையடைந்து
ஓராண்டு நிறைவு.

தந்தை ஐயாத்துரை, சகோதரி, சகோதரன் குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**சண்முகம் சர்வதமணன் (சாந்தன்)**

*(தபால் ஊழியர், காரைநகர்)*

பூதனடைப்பு காரைநகரை பிறப்பிடமாகவும் விபுலானந்தர் வீதி மாதகலை வசிப்பிட மாகவும் கொண்ட சண்முகம் சர்வதமணன் நேற்று (24.03.2019) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் லோகேஸ்வரிதம்பதிகளின் அன்பு மகனும் தங்கராசா இராஜேஸ்வரி தம்பதியிகளின் அன்பு மருமகனும் கலை யரசியின் அன்பு கணவரும்முதுவர்ஷன்,அக்ஷிதாஆகியோரின்பாசமிகுதகப்பனும் சர்மிஸ்டா,அனார்த்தனன்ஆகியோரின்சகோதரனும்சிவபாலனின் மச்சானும் சுரேகா, சாருலதா, மேகலா, மணிவண்ணன், மயூரன் ஆகியேரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.03.2019) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் விபுலானந்தர் வீதி மாதகலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் போதி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:குடும்பத்தினர்.**

# தாபரிப்பு பணம் செலுத்த தவறியவருக்கு சிறை

மன்னார், மார்ச் 25

நீண்ட காலமாக மனைவிக்கும் தனது பிள்ளைகளுக்கும் குடும்ப தாபரிப்பு பணம் செலுத்த தவறிய குடும்பத்தலைவர் ஒருவருக்கு மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா இரண்டு வருட காலத்துக்கு கடூழியச் சிறை தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் குடும்பத் தாபரிப்பு வழக்கு ஒன்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது மன்னார் பொலிஸ் நிலைய பிரிவுக்குள் உள்ள பனங்கட்டு கொட்டுக் கிராமத்தைச் சேர்ந்த குடும்பத் தலைவர் ஒருவர் நீண்ட காலமாக நீதிமன்ற தீர்ப்புக்கிணங்க குடும்பத் தாபரிப்பு பணம் செலுத்த தவறிய குற்றத்துக்காக அவருக்கு இரண்டு வருட காலத்துக்கு கடூழிய சிறைத் தண்டனையை நீதிபதி வழங்கினார்.

2006 ஆம் ஆண்டு தொடக்கம் தனது சுகவீனமுற்று இருச்கும் மனைவிக்கும்,தனது மூன்று பிள்ளைகளுக்கும் ஒவ்வொரு தவணைகளுக்கும் செலுத்தும் தவணைப் பணத்தை ஒழுங்காக செலுத்தத் தவறி வந்தமையால் நிலுவையாக 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டியிருந்தது.

இவருக்கு மன்று கால அவகாசம் வழங்கியும் இவர் கவனம் செலுத்தாமையாலேயே இவருக்கு இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக சட்ட உதவி ஆணைக்குழு சட்டத்தரணி எம்.என்.நஜாமி மற்றும் சட்டத்தரணி செல்வி ஜி.கௌமிக்கா ஆகியோர் முன்னிலை யாகியிருந்தனர்.

(க-60)

# சுவரொட்டிகள் ஒட்டத் தடை

*யாழ்ப்பாணம், மார்ச் 25*

*யாழ்ப்பாண நகரப் பகுதியில் பொது இடங்களில் விளம்பரங்களை (போஸ்டர்கள்) ஒட்டுவதற்கு முற்றாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளது என்று யாழ்.மாநகர முதல்வர் இ.ஆனேல்ட் அறிவித்துள்ளார்.*

அறிவிப்பை மீறி விளம்பரங்களை ஒட்டும் நிறுவனங்கள் நீதிமன்றங்களில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் முதல்வர் எச்சரிக்கை செய்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

யாழ்ப்பாண மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் எந்த ஒரு நிறுவனமாக இருந்தாலும் விளம்பரங்களைக் காட்சிப்படுத்துவதற்குத் தடைவிதிக்க வேண்டும் என்ற தீர்மானம் சபை உறுப்பினர் வ.பார்த்தீபனால் கொண்டுவரப்பட்டிருந்தது. அந்தத் தீர்மானம் இறுக்கமான முறையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

குறிப்பாக தனியார் அல்லது அரச நிறுவனங்கள், அரசியல் சார்ந்த கட்சிகள், திரையரங்குகள், கல்வி நிறுவனங்கள் போன்ற எந்த நிறுவனங்களாக இருந்தாலும் அவர்கள் சார்ந்த விளம்பரங்களைப் பொது மக்களுடைய மதில்கள், சுவர்கள், அரச திணைக்களங்களின் சுவர்களிலோ, பொது இடங்களின் சுவர்களிலோ ஒட்டுவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

குறித்த நிறுவனங்கள் அனைத்தும் இதுவரை காலமும் பொறுப்பற்ற விதத்தில் தாங்கள் நினைத்தபடி பொதுமக்களின் சுவர்களில் பசைகளைப் பூசி விளம்பரங்களை ஒட்டி வந்தார்கள். இனிவரும் நாள்களில் இவ்வாறு யாழ்ப்பாண நகரத்தை அசுத்தப்படுத்த அனுமதிக்க முடியாது. சுத்தமான பசுமையான நகரை உருவாக்க இவ்வாறான அதிரடி நடவடிக்கைகளை மாநகர சபை மேற்கொள்ளும்.

இந்த நடவடிக்கைகள் தொடர்பில் சகல நிறுவனங்களுக்கும் எழுத்து மூலமான உரிய அறிவிப்பை வழங்க உள்ளோம். அந்த அறிவித்தலை மீறிச் செயற்படும் நிறுவனங்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நீதிமன்றத்திலும் முற்படுத்தப்படுவார்கள்.

தேர்தல் காலங்களிலும் இந்த நடவடிக்கை கடுமையான முறையில் நடைமுறைப்படுத்தப்படும். இவ்வாறு விளம்பரப்படுத்தத் தேவையானவர்கள் மாநகர சபையுடன் தொடர்பு கொண்டால் அதற்கேற்ற நடவடிக்கை சபையால் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் - என்றார்.

(க)



## பிரதேச செயலருக்கு மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின் புதிய பிரதேச செயலராகக் கடமையேற்ற சாம்பசிவம் சுதர்சன் மதிப்பளிக்கப்பட்டார். யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரி மஹ்மூத் மண்டபத்தில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த பொது அமைப்புக்களால் மதிப்பளிக்கப்பட்டார்.

தொடர்ந்து முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த யாழ்ப்பாண மாநகர சபை முன்னாள் உறுப்பினர் சரபுல் அனாம் மீள் குடியமர்த்தப்பட்ட அனைத்து முஸ்லிம்களுக்கும் சமுர்த்தி உதவித்திட்டம் வழங்கப்படவேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார். இதன்போது இந்த விடயத்தை பரிசீலிப்பதாகப் பிரதேச செயலர் குறிப்பிட்டார்.

மீள்குடியேற்றதுக்கான காணிப் பிரச்சினை, வீட்டுத்திட்டப் பயனாளிகளின் பிரச்சினை, மக்களுக்கான சிறுகைத் தொழிலுக்கான வாழ்வாதாரம் தொடர்பிலும் அங்கு பேசப்பட்டது.

மேலும் சிவில்ப் பாதுகாப்புக் குழுவின் தலைவர் ஆஷிக் கருத்துக்கூறும் போது: "போதைப் பாவனையில் அதிகளவான இளைஞர்கள் ஈடுபட்டுள்ளனர். இதன் பின்னணியில் அதிகாரத்தில் உள்ளவர்களின் செல்வாக்குக் காணப்படுகிறது" எனக் குற்றஞ்சாட்டியதுடன் குடிதண்ணீர் பிரச்சினை, வடிகாலமைப்புப் பிரச்சினை தொடர்பாகவும் பிரஸ்தாபித்தார்.

இதற்குப் பிரதேச செயலர் முஸ்லிம் மக்களுக்கு ஏற்ற வாழ்வாதாரம் வழங்கப்படவேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டதுடன் அம்மக்களை நேரில் கண்டு அவர்களது பிரச்சினைகளைக் கேட்டு அதற்கான தீர்வுகளைக் கண்டறிய நடவடிக்கை மேற்கொள்வதாகக் கூறினார்.

(ஐ)

# ஒய்வூதியர் நம்பிக்கை நிதிய 15ஆவது வருடாந்தக் கூட்டம்

சாவகச்சேரி, மார்ச் 25

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய தென்மராட்சிப் பிரிவுச் சங்கத்தின் 15ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தென்மராட்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. சங்கத் தலைவர் செ.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்துக்கு முதன்மை விருந்தினராகப் பிரதேச செயலகக் கணக்காளர் திருமதி க.பிரதீபன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய செயலர் அ.அருந்தவநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர் .

சங்கத்தின் மூத்த உறுப்பினர்களான சு.விஜயந்தன், செ.சுப்பிரமணியம், செ.சிவஞானம், திருமதி தா.செல்வநாயகமலர், திருமதி வ.சிவபாக்கியம் ,ப.செல்லத்துரை, சி.தனபாலசிங்கம் ஆகியோர் பொன்னாடை போர்த்தி மதிப்பளிக்கப்பட்டனர். நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது. தலைவர் செ.சுப்பிரமணியம் , உப தலைவர் மு.பால சுப்பிரமணியம், செயலர் ப.கோடீஸ்வரநாதன், உதவிச் செயலாளர் இ.கிருஷ்ணபிள்ளை, பொருளாளர் சு.விஜயநாதன், நிர்வாக சபை உறுப்பினர்களாக ப.செல்லத்துரை, அ.திருநாவுக்கரசு ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். கூட்டத்துக்கு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட பிரதேச செயலக கணக்காளர் திருமதி க.பிரதீபன் உரையாற்றுகையில்,

பகிரங்க சேவைகள் ஓய்வூதிய நம்பிக்கை நிதியத்தின் தென்மராட்சிக் கிளையினர் அதிக அளவு உறுப்பினர்களைக் கொண்ட சங்கமாக திகழ்வது எமது பிரதேசத்துக்குப் பெருமை தரக்கூடியது. சங்க நிர்வாகத்தினர் உறுப்பினர்களின் நலனில் அக்கறை கொண்டு செயற்பட்டு வருவது சங்க வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ளது. சங்க உறுப்பினர்களாக பிரதேசத்தில் உள்ள அனைத்து ஓய்வூதியர்களையும் இணைத்து விருட்சமாகச் செயற்படவேண்டும்.

அரச சேவையில் உள்ளபோது தான் நலன்கள் கிடைக்கும் என்பது போல ஓய்வூதியரான பின்னரும் சங்கத்தில் இணைந்துள்ள உறுப்பினர்களுக்குச் சங்கத்தால் சிகிச்சைக்கொடுப்பனவு, மருத்துவமனைக் கொடுப்பனவு, அறுவை சிகிச்சைக் கொடுப்பனவு, பிள்ளைகளுக்கான புலமைப் பரிசில் திட்டம், கடன் வசதி, வெளிநாட்டு யாத்திரைக் கடன், சேமிப்புத் திட்டம், இறப்பு மானியக் கொடுப்பனவு போன்ற நலன்களை வழங்கி வருகின்றனர். அத்துடன் வயது அடிப்படையில் ஓய்வூதியர்களுக்குக் கடன்களை வழங்கி வருவது ஓய்வூதியர்களுக்குச் சங்கம் வழங்கும் சேவைகளாகக் கருதமுடிகிறது - என்றார் .

(க-9)



## வகுப்பறைத் தொகுதிக் கட்டடம் விரைவில் திறப்பு

தென்மராட்சி, மார்ச் 25

மிருசுவில், உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான வகுப்பறைத் தொகுதிக் கட்டடம் விரைவில் திறந்துவைக்கப்படவுள்ளது. புதிய கட்டடத்துக்கான பால் காய்ச்சும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை அதிபர் க.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது.

ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான வகுப்பறைத் தொகுதிக் கட்டடம் கடந்த வருடம் அமைக்கப்பட்ட போதிலும் நிரந்தர அதிபர் இன்மையால் மாணவர்களின் பயன்பாட்டுக்கு விடுவது தாமதமாகியது.

கடந்த மாதம் வித்தியாலயத்துக்குப் புதிய அதிபர் கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாகப் பால் காய்ச்சும் நிகழ்வு இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

விரைவில் சம்பிரதாயபூர்வமாகக் கட்டடம் மாணவர்களின் பாவனைக்காகத் திறந்து வைக்கப்படவுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டடது.

(ஐ-9)

# வலி.தெற்குப் பிரதேச சபையில் அதிக பார்த்தீனியச் செடிகள்

வலி.தென்மேற்கு, மார்ச் 25

வலி.தெற்குப் பிரதேச சபையின் முதன்மை வீதி உட்பட ஏனைய வீதியோரங்களையும் விவசாய நிலங்களையும் பார்த்தீனியச் செடிகள் ஆக்கிரமித்துள்ளன.

ஒரு அடியிலிருந்து 3 அடி உயரம் வரை வளர்ந்திருக்கும் இந்தச் செடிகளை அழிப்பதற்கு விவசாயத் திணைக்களமோ, பிரதேச சபையோ முன் வராதமை குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளார்கள்.

குடாநாட்டில் கடந்த பல வருடங்களாக மிக வேகமாகப் பரவி வரும் பார்த்தீனியச் செடிகளால் , மக்களுக்கு மட்டுமல்ல கால்நடைகளுக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது.

இவற்றை அழிப்பதற்கு மக்களின் ஒத்துழைப்பை நாடியுள்ள வடக்கு மாகாண சுகாதார முன்னாள் அமைச்சர் இந்தச் செடிகளைக் கண்டும் காணாமல் இருப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் பல பிரதேசங்களில் இந்தச் செடிகளை அழிக்க முன்வந்துள்ள பிரதேச சபைகள் மக்களின் உதவியுடன் இந்தச் செடிகளை அழிப்பதில் ஈடுபட்டு வருகின்றன.

வலி.தெற்குப் பிரதேசத்தில் முதன்மை வீதிகள் உட்பட ஏனைய வீதியோரங்களிலும் விதை நிலங்களிலும் ஒரு அடியிலிருந்து 3அடி உயரம் வரை வளர்ந்துள்ளன. சில தோட்ட நிலங்களில் பயிர்களுடன் போட்டி போட்டு வளர்ந்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

(க-115)

# அதிபர் பதவிக்கு விண்ணப்பம்

சாவகச்சேரி,மார்ச் 25

தென்மராட்சி கல்வி வலய வகை 11 பாடசாலையான மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தில் வெற்றிடமாக உள்ள அதிபர் பதவிக்கு இலங்கை அதிபர் சேவை தரம் 11 ஐச் சேர்ந்த தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தற்போது கடமையாற்றும் பாடசாலையில் 3 வருட சேவையை நிறைவு செய்தவராகவும் பாடசாலைக்கு நியமனம் வழங்கும் பட்சத்தில் தொடர்ச்சியாக 3 வருடங்கள் கடமையாற்றக்கூடிய வயதெல்லையைக் கொண்டவராகவும் இருத்தல் வேண்டுமெனவும் இலங்கை அதிபர் சேவை தரம் 11 ஐச் சேர்ந்த அதிபர்கள் விண்ணப்பிக்காத பட்சத்தில் அதிபர் சேவை தரம் 111 அதிபர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வித்தியாலயத்தில் கடமையாற்றிய இலங்கை அதிபர் தரம் 1 ஐச் சேர்ந்த அதிபர் க.உதயகுமாரன் பளை மத்திய கல்லூரி அதிபராக வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டதையடுத்து வெற்றிடம் ஏற்பட்டதெனத் தெரிவிக்கப்பட்டது.

(க-9)

# நிலத்தடி நீரைக் காப்பற்ற மக்கள் நேற்று போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

அளவுக்கதிமாக நிலத்தடி நீர் உறிஞ்சப்படுவதைக் கண்டித்து வலி.தென்மேற்குப் பிரதேச மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர். நேற்றுக் காலை 7.30 மணிக்கு பெரியவிளான் சந்தியில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.



வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட பெரியவிளான் கிராமத்தில் இருந்து காரைநகர் பிரதேசத்துக்கு குடி தண்ணீர் வழங்கும் போர்வையில் அளவுக்கதிகமான குடி தண்ணீர் உறிஞ்சப்பட்டு தினமும் கொண்டு செல்லப்படுகிறது. விவசாயத்தை பிரதானமாகவும் ஏனைய சிறு தொழில்களையும் வாழ்வாதாரமாகவும் கொண்ட இந்தக் கிராமத்தில் உள்ள நிலத்தடி நீர் கிராமத்தவர்களின் பாவனைக்கே போதுமானதாக உள்ளது. இவ்வாறிருக்க பெரியவிளானைச் சேர்ந்த ஒருசில குடும்பத்தாலும் காரை நகரைச் சேர்ந்த சமூக மட்ட அமைப்புக்களாலும் வியாபார நோக்கில் குடிதண்ணீர் அளவுக்கதிகமாக உறிஞ்சப்படுவதால் கிராமத்தவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறனர் என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

நீர் வழங்கல் சபையால் பிரதேசத்தில் இருந்து மாதகல் மற்றும் சாந்தை ஆகிய இடங்களுக்கு குடி தண்ணீர் வழங்கவும் இங்கேயே நீர் எடுக்கப்படுகின்றது. இவ்வாறு பல தரப்பாலும் அதிக நீர் உறிஞ்சி எடுக்கப்படுகின்றது என்றும் அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர். இந்தப் பகுதி மக்களின் முறைப்பாட்டை அடுத்து வலி தென்மேற்கு பிரதேச சபையில்எடுக்கப்பட்ட தீர்மானத்தை இரு பிரதேச சபைகளின் அதிகாரிகள் நடைமுறைப்படுத்தாதது கவலையையும் பிரதேச சபையின் அசமந்த போக்கையும் வெளிக்காட்டுகிறது என்றும் அவர்கள் கூறுகின்றனர். அளவுக்கு அதிகமாக நிலத்தடி நீர் உறிஞ்சப்படுவதால் அந்தப் பகுதி நீர் உவர் நீராக மாறி வருகின்றது என்றும், அதனால் குடி தண்ணீர் பிரச்சினை மற்றும் விவசாயம் பாதிக்கப்படும் நிலைமை ஏற்படும் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். அந்தப் பகுதியில் நிலத்தடி நீர் உறிஞ்சி எடுக்கப்படுவதைத் தடை செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-ரி)



## கவிஞர் மு. செல்லையாவின் படைப்புக்கள் வெளியீடு

வடமராட்சி,மார்ச் 25

அல்வாயூர் கவிஞர் மு.செல்லையாவின் படைப்புக்கள் நூல் வெளியீட்டு நிகழ்வு கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் அண்மையில் பேராசிரியர் மா. கருணாநிதி தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா, பேராசிரியர் கி. விசாகரூபன், கலாநிதி அ. புஸ்பநாதன், கலாநிதி சு. குணேஸ்வரன், சமூகவியற்றுறைத் தலைவர் இ.இராஜேஸ்கண்ணன், சி. வன்னியகுலம், மா. செல்வதாஸ், சுதர்சனா சர்வேசன் ஆகியோர் உரையாற்றினர். (ஜ-26)

## நகரசபைக்கு சொந்தமான வாகனம் தீப்பிடிப்பு



வவுனியா,மார்ச் 25

வவுனியா நகரசபை வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பெக்கோ வாகனம் நேற்றுமுன்தினம் இரவு தீ பிடித்து எரிந்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை பணிகளை முடித்துக் கொண்டு குறித்த வாகனம் நகரசபை வளாகத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இரவு 10 மணியளவில் குறித்த வாகனத்தில் தீ பற்றி எரிந்துள்ளது. எனினும் தீயணைப்பு துறையினர் தீயை அணைத்துள்ளனர். மின்சார ஒழுக்கே தீ விபத்துக்கு காரணமாக இருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-110)



சிறுநீரக நோய் தொடர்பான வீடியோ விளம்பர கருத்திட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர் அணி தேசியரீதியில் இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளது. அரச தலைவர் செயலகமும் கல்வி அமைச்சும் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கிடையில் இந்தப் போட்டியை நடத்தின. (ஜ-70)

## விபத்தில் குடும்பத் தலைவர் காயம்

சாவகச்சேரி, மார்ச் 25

ஒழுங்கையிலிருந்து முதன்மைச்சாலைக்குள் நுழைந்த இரு சக்கர உழவு இயந்திரத்தடன் முதன்மைச்சாலையில் வந்த உந்துருளி மோதியதில் அதில் பயணித்த குடும்பஸ்தர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை மீசாலை புத்தூர்ச் சந்தியில் இடம்பெற்றது. மீசாலை வடக்கு சியாமளா மில் ஒழுங்கையில் பொருள்களைப் பறித்துவிட்டுத் திரும்பிய லான்ட்மாஸ்ரர் வாகனம் முதன்மைச் சாலைக்குள் நுழைந்தபோது எதிரே வந்த உந்துருளி மோதியதெனத் தெரிவிக்கப்பட்டது..

மிருசுவில் வடக்கைச் சேர்ந்த நாகலிங்கம் மோகனதாஸ் (வயது -34) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-9)

## கிளிநொச்சி கண் அறுவை சிகிச்சைக்கு கண் மருத்துவர் மலரவன் உதவுவார்

### யாழ்ப்பாணம் மருத்துவமனைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவிப்பு

கிளிநொச்சி,மார்ச் 25

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் கண் சத்திர சிகிச்சைக்கு வடக்கின் பிரபல கண் சத்திர சிகிச்சை நிபுணர் மருத்துவர் மலரவனின் உதவியும் ஒத்துழைப்பும் கிடைக்கும் என யாழ் போனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.



கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் முதன் முதலாகக் கண் சத்திர சிகிச்சை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் போது கருத்துத் தெரிவித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் கண் சத்திரசிகிச்சை ஆரம்பித்து வைக்கப்பட்ட நிகழ்வு மகிழ்ச்சியானது.

இதற்காக உழைத்த அனைவரும் நன்றிக்குகரியவர்கள். ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள கண் சத்திர சிகிச்சைக்கு தேவை ஏற்படுகின்ற போது, உதவிகளையும் ஒத்துழைப்புக்களை கண் சத்திரசிகிச்சை நிபுணர் மலரவன் வழங்குவதற்கு தயாராக உள்ளார். ஏற்கனவே அவர் உதவிகளையும் வழங்கியிருக்கின்றார். எதிர்காலத்தில் அவரின் உதவி நிச்சயம் கிடைக்கும் எனவும் தெரிவித்தார்.

சிறப்புக் கண் சத்திர சிகிச்சை நிபுணர் கிரிதரன் கிளிநொச்சி மருத்துவமனைக்கு அண்மையில் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (க-214)

## வரி அறவிடுவதற்கு நடமாடும் சேவை

கொடிகாமம், மார்ச் 25

சாவகச்சேரி கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட கமக்கார அமைப்புக்களுக்குரிய வயற் காணிகளுக்கான ஏக்கர் வரியினை அறவிடுவதற்கான நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தால் கீழ்வரும் இடங்களில் குறிப்பிட்ட திகதிகளில் நடைபெறவுள்ளன.

இன்று திங்கட்கிழமை உசன் கமக்கார அமைப்புக்கு உசன் பொது நோக்கு மண்டபத்திலும், வரணி வடக்கு கமக்கார அமைப்புக்கு கும்பிட்டான் பிள்ளையார் ஆலய முன்பாகவுள்ள மண்டபத்திலும் நடைபெறும்.

நாளை செவ்வாய்க்கிழமை நாவற்காடு கமக்கார அமைப்புக்கு நாவற்காடு பொது நோக்கு மண்டபத்திலும், சரசாலை வடக்கு சரசாலை தெற்கு ஆகிய பிரிவுகளுக்கு சரசாலை வடக்கு சனசமூக நிலையத்திலும், தாவளை இயற்றாலை பிரிவுக்கு தாவளைஇயற்றாலை பொது நோக்கு மண்டபத்திலும், கரம்பகம் கெற்பேலி பிரிவுக்கு கரம்பகம் பொது நோக்கு மண்டபத்திலும் மந்துவில் வடக்கு,கிழக்கு பிரிவுக்கு மந்துவில் வடக்கு பொது நோக்கு மண்டபத்திலும் மிருசுவில் வடக்கு பிரிவுக்கு மிருசுவில் வடக்கு பொது நோக்கு மண்டபத்திலும் இடம்பெறும்.

நாளை மறுதினம் புதன்கிழமை மட்டுவில் வடக்கு பிரிவுக்கு கண்ணகை சனசமூக நிலையத்திலும் 28ஆம்திகதி வியாழக்கிழமை எழுதுமட்டுவாழ் வடக்கு பிரிவுக்கு எழுதுமட்டுவாழ் வடக்குப் பொது நோக்கு மண்டபத்திலும் நடைபெறவுள்ளது. விவசாயிகள், வயற்காணி உரிமையாளர்கள் இவ்வாண்டுக்குரிய ஏக்கர் வரியை செலுத்துமாறு கோரப்பட்டுள்ளது. (ஜ-159)

## தெரு மின் குமிழ்கள் பொருத்தல்

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் நிதியின் கீழ் வீதி அபிவிருத்தி திணைக்களம் ,மற்றும் அதிகார சபையின் வீதிகளுக்கு 50 வால்ட் மின் சக்தி கொண்ட தெரு மின் குமிழ்கள் பொருத்தப்பட்டு வருகின்றன. பிரதேச சபை உறுப்பினர்களுக்குச்சபையால் ஒதுக்கப்பட்ட மின் குமிழ்களுக்கு அமைவாக தொல்புரம் பிரதான வீதிகளில் இந்த மின் குமிழ்கள் பொருத்தப்பட்டுவருகின்றன. (க-7)

# காணிகள் அற்ற மக்களுக்கு அரச காணிகளை வழங்குக

## சாவகச்சேரி பிரதேச சபையில் கோரிக்கை

கொடிகாமம், மார்ச் 25

சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பயன்பாடின்றி காணப்படும் அரச காணிகளை காணி அற்றோருக்கு வழங்கி அவற்றை வளம்படுத்த வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் காணிகள் இல்லாதவர்களின் எண்ணிக்கை காணப்படுகின்ற போதிலும் பல அரச காணிகள் தரிசு நிலங்களாக காணப்படுகின்றன.

இவற்றை காணியற்றவர்களுக்கு வழங்கி, அங்கு வீட்டுத் திட்டங்களையும் அமைத்தால் பல குடும்பங்களின் காணி வீடு இல்லாப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படுவதுடன் அப் பகுதிகளும் வளம் நிறைந்த பகுதியாக மாறும்.

இவ்வாறுகடந்தவியாழக்கிழமை நடைபெற்ற சாவகச்சேரி பிரதேச சபை அமர்வில் தவிசாளர் க.வாமதேவன் முன் மொழிவைச் சமர்ப்பித்திருந்தார்.

சபை எல்லைக்குட்பட்ட மிருசுவில் கரம்பகம், சரசாலை. வரணி, மந்துவில்.நாவற்குழி. தனங்களப்பு. மறவன்புலவு போன்ற இடங்களில் அரச காணிகள் காணப்படுகின்றன.

இவற்றில் காணிகளற்ற குடும்பங்களை இனங்கண்டு அவற்றைவழங்கிதென்மராட்சி பிரதேச உதவியுடன் வீட்டுத் திட்டங்களை வழங்க வேண்டும். அத்துடன் காணி மற்றும் வீட்டுத்திட்டம் பெறுவதற்கான தகைமைகள் இருந்தும் பிரதேசசெயலகத்தினால்இவற்றை வழங்க நிராகரிக்கப்பட்டவர்கள் தொடர்பாகவும் பிரதேச செயலருடன் கலந்துரையாடி வீட்டுத் திட்டம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கரம்பகம் மற்றும் சரசாலை ஆகிய பிரிவுகளில் மாதிரிக் கிராமங்கள் அமைப்பது தொடர்பான முன்மொழிவுகளை தயாரித்து வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாசவிடம் கையளிக்க முடியும் எனவும் உரையாற்றினார். (க-159 , 9)



## ஈருருளி வழங்கல்

சாவகச்சேரி, மார்ச் 25

தென்மராட்சி பிரதேசத்தில் பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி சிவன் கோவில் சாலையில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் ஈருருளிகள் வழங்கப்பட்டன.

வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கேசவன் சயந்தனால் கடந்த வருடம் ஒதுக்கப்பட்ட மாகாண மக்கள் பிரதிநிதிகள் நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட ஈருருளிகளே மாணவர்களுக்கு கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி நகரசபை தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் சபை உறுப்பினர்கள் சாவகச்சேரி பிரதேச சபை உப தவிசாளர் செ.மயூரன் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (க-9)

## விபத்தில் சிக்கிய மூவர் மருத்துவமனையில்

சாவகச்சேரி, மார்ச் 25

சாலை விபத்துக்களில் சிக்கி காயமடைந்த மூதாட்டி உட்பட மூவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நுணாவில் பகுதியில் நடந்து வந்த கைதடி நுணாவிலைச் சேர்ந்த 65 வயது மூதாட்டியை அவ்வழியே வந்த உந்துருளி மோதித் தள்ளிவிட்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளது. நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த மூதாட்டி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

சாவகச்சேரிப் பகுதியில் நேற்றுக் காலை சாலையின் குறுக்கே ஓடிய நாயுடன் உந்துருளி மோதியதில் அதில் பயணித்த மல்லாவியைச் சேர்ந்த 21 வயது மற்றும் 19 வயது இளைஞர்கள் காயமடைந்த நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டனர். (க-9)

## போசாக்கு உணவு வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 25

வவுனியாவில் வறுமைப்பட்ட 4 காச நோயாளருக்கான போசாக்குணவு மாவட்ட சமூக சேவை அலுவலகமூடாக கடந்த 23ஆம் திகதி வழங்கப்பட்டது.

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் காச நோயாளர்களுக்கு வருடாந்தக் கொடுப்பனவு வழங்கி வருகிறது. வவுனியா பொது மருத்துவமனையின் மார்பகச் சிகிச்சைப்பிரிவு மருத்துவர் ஹரிஹரன் கேட்டுக்கொண்டதற்கிணங்க வி3 பவுண்டேசன் நிறுவனம் இதனை வழங்கியது. (து-222)



## தொற்றாநோய் சிகிச்சை முகாம்


சாவகச்சேரி, மார்ச் 25

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவின் அல்லாரைக் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கான தொற்றாநோய் சிகிச்சை முகாம் கடந்த வெள்ளிக்கிழமை அல்லாரை கிராமச் செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

மேலதிக சுகாதார மருத்துவ அதிகாரி தலைமையில் நடைபெற்ற மருத்துவமுகாமில் 35 வயதுக்கு மேற்பட்ட நூற்றுக்கணக்கான இருபாலாரும் கலந்து கொண்டு பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

பரிசோதனையின் போது தொற்றா நோய்களுக்கு இலக்கானவர்கள் இனங்காணப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக மருத்துவமனைக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் பிரிவு பொது சுகாதார பரிசோதகர் மேற்பார்வை குடும்பநல அலுவலர் பிரிவு கிராம மட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். (க-9)



## மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தின் மாணவர் நாடாளுமன்ற இறுதி அமர்வு

கொடிகாமம் மார்ச் 25

மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான மாணவர் நாடாளுமன்ற இறுதி அமர்வு கடந்த 9 ஆம் திகதி சனிக்கிழமை செயலர் நாயகம் தலைமையில் நடைபெற்றது.

இந்த அமர்வில் மாணவர் நாடாளுமன்ற அமைச்சர்கள் கடந்த காலங்களில் தங்களால் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளை முன் வைத்தனர். அதில் சில செயற்பாடுகள் செய்யப்படவில்லை என்ற வாதங்களும் முன் வைக்கப்பட்டன. பதிலுரைத்த மாணவ நாடாளுமன்ற அமைச்சர்கள் அடுத்த நாடாளுமன்ற தேர்தலில் தாம் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் அதனை நிறைவேற்றுவதாக உறுதியளித்தனர். அதனைத் தொடர்ந்து அவைத் தலைவரின் வேண்டுகோளுக்கு இணங்க சபாநாயகரினால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு மார்ச் 12 ஆம் திகதியிலிருந்து பாடசாலையில் 3 வதுநாடாளுமன்றத்துக்கான வேட்புமனு கோரப்பட்டு எதிர்வரும் 22 ஆம் திகதி மாணவர் நாடாளுமன்ற தேர்வு இடம் பெறுமென அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட பாடசாலையின் ஓய்வுபெற்ற ஆங்கிலப் பாட ஆசிரியரான வசந்தா விக்கினேஸ்வரன் உரையாற்றுகையில் மாணவர்கள் பாடசாலையில் செய்ய வேண்டிய செயற்பாடுகளை உணர்ந்து அவற்றைச் செய்வதாக உறுதியளித்துள்ளனர் அவர்களைப் பிரதிச் செயலர் நாயகங்கள் நல்ல முறையில் வழிப்படுத்த வேண்டும் எனக் கேட்டு கொண்டார். (க-159)

## தகவல்கள் தொழில்நுட்ப இணையப் பரீட்சை வெற்றி

யாழ்ப்பாணம் மார்ச் 25

முதன் முறையாக இணையத்தளம் மூலமாக நடத்தப்பட்ட உயர்தர மாணவர்களுக்கான தகவல்கள் தொழில்நுட்ப பரீட்சை வெற்றியளித்துள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் செயற்பாடுகளை நவீனமயப்படுத்துவதற்காக 2017 ஆம் ஆண்டு குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்த குழுவின் முன் மொழிவுக்கு ஏற்ப கல்வி பொது தராதர உயர்தர வகுப்பு தரம் 12 மாணவர்களுக்காக நடத்தப்படும் பொது தகவல்கள் தொழில்நுட்ப பரீட்சை இணையத்தளம் மூலம் நடத்துவதற்கு நடவடிக்கை இந்த முறை மேற்கொள்ளப்பட்டது.

இந்தப் பரீட்சைகள் கடந்த 11ஆம் திகதி தொடக்கம் 18 ஆம் திகதி வரை நடைபெற்றன. நாடு முழுவதிலும் உள்ள 655 கணினி மத்திய நிலையங்களில் 1 லட்சத்து 86 ஆயிரம் மாணவர்கள் இந்த பரீட்சைக்குத் தோற்றினர்.

கணினிஆய்வுகூடம்ஒன்றில்இணைய வழி மூலம் நடைபெற்ற இந்த பரீட்சை வெற்றியளித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது . (க-7)

## நூறாவது ஆண்டு பாடசாலைத் தினம்

கொடிகாமம் மார்ச் 25

வரணி கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலையின் நூறாவது ஆண்டு பாடசாலைத் தினம் ஏப்ரல் முதலாம் திகதி வித்தியாலய முன்றலில் மாலை 4 மணிக்கு நடைபெறும்.

அதிபர் க. இளங்கோவன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தினர் பழைய மாணவர் சங்கத்தினர் பெற்றோர்கள் நலன் விரும்பிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

கலாசார பொங்கல் நிகழ்வும் பாரம்பரிய கலை நிகழ்வுகளும் நடத்தப்படும். (க-159)



## கட்டுரை தமிழ் போட்டியில் சகானா தவீஸ்வரனுக்கு விருது

கொடிகாமம், மார்ச் 25

உலக நீர் தினத்தை முன்னிட்டு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட கட்டுரை தமிழ் போட்டியில் சாவகச்சேரி கல்வயல் சிறிசண்முகானந்தா வித்தியாலய மாணவி செல்வி சகானா தவீஸ்வரனின் ஆக்கத்துக்கு இரண்டாம் இடம் கிடைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆக்கத்துக்கான பரிசு கடந்த 22 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் வழங்கப்பட்டது.

நகரத் திட்டமிடல் நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் லகீ ஜெயவர்த்தனவினால் இந்தப் பரிசு வழங்கப்பட்டது. (க-159)

# கட்டுக்கரைக் குளத்தில் மீன் குஞ்சு விட ஏற்பாடு

மன்னார்,மார்ச் 25

கட்டுக்கரைக் குளத்தினுள் மீன் குஞ்சுகளை விடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகனிடம் கட்டுக்கரை நன்நீர் மீன்பிடியாளர் சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

விவசாயம் இல்லாத நாள்களில் கட்டுக்கரை நன்நீர் மீன் பிடியை வாழ்வாதாரமாகக்கொண்டு ஏழு கிராமங்களில் 800 தொழிலாளர்கள் உள்ளதாகவும் மீனினம் பெருகுவதற்கு இது பொருத்தமான காலம் என்றும் அவர்கள் தெரிவித்தார்கள்.
கிராமசக்தி வேலைத்திட்டத்துக்கான அனுமதிக் கடிதங்களை மக்களிடம் கையளிப்பதற்காக மன்னார் செம்மண்தீவுக்கு வருகைதந்திருந்த போது சிவமோகன் எம்பியிடம் இந்த வேண்டுகோளை கட்டுக்கரை நன்நீர் மீன்பிடியாளர் சங்கத்தினர் விடுத்தார்கள்.
இது பற்றி அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:
இன்னும் சில நாள்களில் மன்னாரில்.பெரும்போக அறுவடை முடிவுறும் நிலையில் உள்ளது. அதன் பின் கட்டுக்கரைக்குளத்துக்கு கீழ் உள்ள இரட்டைக்குளம், கற்கிடந்த குளம், செம்மண்தீவு, மாவிலங்கேணி, மாளிகைப்பிட்டி, பரப்பாங்கண்டல், குருவில் போன்ற ஏழு கிராமங்களில் உள்ள மக்களுக்கு பிரதான வாழ்வாதார தொழிலாக நன்நீர் மீன்பிடியே காணப்படுகிறது. எனவே அதிகளவான மீன்குஞ்சுகளை இட்டு எமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கட்டுக்கரை நன்நீர் மீன்பிடி சங்கத்தினர் கேட்டுக்கொண்டனர்.
மீனவர்களுக்கு பதிலளித்த சிவமோகன் எம்.பி வடமாகாண ஆளுநருடன் பேசி தீர்வை வெகுவிரைவில் தருவதாக உறுதியளித்தார். (க-213)



## ஊரக எழுச்சித் திட்ட கலந்துரையாடல்

கிளிநொச்சி மார்ச் 25
ஊரக எழுச்சி வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் கரைச்சி பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.
கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் எல்லைக்குள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் சிபாரிசில் நடைபெற்றுவரும் ஊரக எழுச்சி வேலைத்திட்டம் பற்றிய கலந்துரையாடல் அண்மையில் பிரதேச செயலக மண்டபத்தில் திட்டமிடல் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது.
அங்கு வேலைகளின் தரம் மற்றும் வீதிகளின் அகலம் ஒப்பந்ததாரர்களுக்கான நிபந்தனைகள் பற்றியும் ஆராயப்பட்டன. இது இரண்டாம் கட்ட வேலைத் திட்டம் எனவும் இந்த முறை 200 மில்லியன் ரூபாய் இந்த வேலைத் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டது எனவும் தவிசாளர் கலந்துரையாடலில் தெரிவித்தார்.
இந்த வேலைத் திட்டத்துக்கு அந்தப் பகுதிகளிலுள்ள மக்களும் பொது அமைப்புகளுமே பொறுப்பு.
காரணம் பொருள்களின் தரம் மற்றும் பாதுகாப்பு, தொழில்நுட்ப அலுவலரோ மேற்பார்வையிட வராத வேளையிலும் நீங்களே பொறுப்பு ஏனெனில் அது உங்களுக்கான வீதிகள் எனவும் கூறினார்.
இந்தக் கலந்துரையாடலில் பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன், அபிவிருத்தி அலுவலர், தொழில்நுட்ப அலுவலர், பிரதேச சபை உறுப்பினர் சிவநேசன் மற்றும் ஒப்பந்ததாரர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-6)



## பயிற்சிப் புத்தகங்கள் வழங்கல்

வவுனியா,மார்ச் 25
வவுனியா - மதியாமடு விவேகானந்த வித்தியாலத்ததில் தரம் 5 இல் கல்வி பயிலும் புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு நேற்றுப் பயிற்சிப் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.
லண்டனில் வசித்து வரும் கந்தப்பிள்ளை திலீபன் தமது துணையாரான திலீபன் அமுதாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு "புல்மைப் பரிசில் கடந்தகால வினாத்தாள் விடைகளுடன்" பயிற்சி புத்தகத்தை வழங்கி வைத்துள்ளார். (க-222)

## கற்றல் உபகரணம் கையளிப்பு

கிளிநொச்சி,மார்ச் 25
கிளிநொச்சி இராமகிருஷ்ண வித்தியாலயத்தின் அனைத்து மாணவர்களுக்கும் பெறுமதிமிக்க கற்றல் உபகரணப் பொதிகளைத் தங்கவேல் மற்றும் அவரது நண்பர்கள் இணைந்து வழங்கியுள்ளனர்.
இந்தப் பொதிகளை அவரது உறவினர்களான யாழ்.பல்கலைக்கழக ஓய்வு பெற்ற பேராசிரியர் நடராஜசுந்தரம் மற்றும் வடமாகாண திறைசேரியின் பிரதம கணக்காளர் ஜெயராஜா. குடும்பஉறுப்பினர்கள் இணைந்து வழங்கி வைத்தனர். (க-222)

## 52 மில்லியன் ரூபாவில் 62 திட்டங்கள்

மன்னார்,மார்ச் 25
கிராம எழுசச்சி துரித அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டில் மன்னார் மாவட்டத்தில் 52 மில்லியன் ரூபாவுக்கான 62 வேலைத்திட்டத்துக்கான அனுமதிக்கடிதத்தை நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சிவமோகன் நேற்றுமுன்தினம் உத்தியோக பூர்வமாக மக்களிடம் கையளித்தார்.
இந்த வேலைத்திட்டங்கள் மன்னார் நகரம், நானாட்டான். மாந்தைமேற்கு, ஆகிய பிரதேசங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.
துரித அபிவிருத்தி வேலைத் திட்டத்தில் ஆலயம்,பாடசாலை, விளையாட்டு மைதானம் சீரமைப்பு, மற்றும் சிறுவர் பூங்கா, அறநெறிப் பாடசாலை என்பனவற்றுக்கும் செலவிடப்படவுள்ளது. (க-213)



### கிளி. பெண்கள் வாழ்வுரிமைக் கழகத்தால்

## பெண்கள்தினம் கடைப்பிடிக்கப்பட்டது

கிளிநொச்சி, மார்ச் 25
கிளிநொச்சி மாவட்ட பெண்கள் வாழ்வுரிமைக் கழகத்தின் ஏற்பாட்டில் பன்னாட்டுப் பெண்கள் தினம் நேற்றுமுன்தினம் கொண்டாடப்பட்டது.
கிளிநொச்சி கூட்டுறவுச்சபை மண்டபத்தில் காலை 10.30 மணிமுதல் நிகழ்வுகள் நடைபெற்றன. 'பெண்களின் குரல்' எனும் தொனிப்பொருளில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் அரச, அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர். இதன்போது பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் 12 தலைப்புக்களில் கருத்துரைகளும் இடம்பெற்றன. (ம-6)

## இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப்போட்டி

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப்போட்டி அண்மையில் மணியளவில்கல்லூரியின் மைதானத்தில்கல்லூரியின் பீடாதிபதி க.சொர்ணராஜா தலைமையில் நடைபெற்றது.
நிகழ்வில்முதன்மைவிருந்தினராகவவுனியா மாவட்ட செயலர்எம்.ஹனீபா,கலந்துகொண்டிருந்தார். (க-110)



### சர்வ மதப் பேரவையில் இருந்து

## இந்து அமைப்புக்கள் விலகுவதை பரிசீலனை செய்யக் கோரிக்கை

மன்னார் சர்வமதப் பேரவையில் இருந்து விலகிக் கொள்வதாக அறிவித்துள்ள இந்துசமயச் சகோதரர்கள் தமது முடிவை மீள் பரிசீலனைசெய்து மீண்டும் மன்னார் சர்வமதப் பேரவையில் இணைந்து செயலாற்ற முன்வரவேண்டுமென மன்னார் சர்வமதப் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.
மன்னார் மாவட்டத்தில் பல்லின பல்சமய மக்கள் பல நூற்றாண்டு காலமாக ஒற்றுமையாக, அமைதியாக வாழ்ந்துவந்துள்ளனர். போருக்குப் பின்னரான காலப்பகுதியில் தமிழ் பேசும் மக்கள் எதிர்கொண்ட பல்வேறு பிரச்சினைகளில் மதம் சார்ந்த, இனம் சார்ந்த பிரச்சினைகளும் உள்ளடங்கும். அண்மைக் காலங்களில் மன்னார் மாவட்டத்தில் மதம் சார்ந்த பல்வேறு பிரச்சினைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இது மிகவும் கவலை அளிக்கும் ஒரு யதார்த்தமாக உள்ளது.
அண்மையில் திருக்கேதீச்சரம் மாந்தைச் சந்தியில் நிறுவப்பட்ட அலங்கார வளைவு தொடர்பான பிரச்சினை ஊடகங்கள் வாயிலாக முழு நாட்டையும் சென்றடைந்த பிரச்சினையாக உள்ளது. சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் விரும்பும் அனைவருக்கும் இப்பிரச்சினை மிகவும் கவலை அளிக்கும் ஒன்றாக அமைந்துள்ளது.
மன்னார் சர்வமதப் பேரவையில் இருந்து விலகிக் கொள்வதாக அறிவித்துள்ள இந்துசமயச் சகோதரர்கள் தமது முடிவை மீள் பரிசீலனை செய்து மீண்டும் இப்பேரவையில் இணைந்து செயலாற்ற முன் வரவேண்டுமென அன்புடன் வேண்டுகோள் விடுக்கின்றோம். எனத் தங்கள் ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளனர். (க-60)

## வசந்த மண்டபம் அமைப்பதற்கு அடிக்கல் நடல்

முல்லைத்தீவு,மார்ச் 25
பச்சிலைப்பள்ளி பிரதேசத்தின் வண்ணாங்கேணி சிறி துர்க்கை அம்மன் ஆலயத்தின் வசந்த மண்டபம் அமைப்பதற்கு அடிக்கல் நடப்பட்டுள்ளது.
நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனின் ரூபா ஒரு மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் மூலம் இந்த அடிக்கல் நேற்று வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பசுபதிப்பிள்ளையால் நட்டுவைக்கப்பட்டது. ஆலய நிர்வாகத்தினரின் நீண்ட நாள் வேண்டுகோளுக்கு அமைய ஊரெழுச்சி வேலைத்திட்டத்தினூடாக குறித்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
இங்கு வடக்கு மாகாண முன்னாள் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் குருகுலராசா , கரைச்சி பிரதேச சபை தவிசாளர் வேழமாலிகிதன் , பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சுரேன், உபதவிசாளர் கஜன் உறுப்பினர்களான ரமேஷ் வீரபாகுதேவர் , கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் ஜீவராஜா ஆலய நிர்வாகத்தினர் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க)



# வரலாறு தெரியவில்லை என்று தயாசிறிக்கு ஆனோல்ட் பதில்!

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ்ப்பாணப் பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பறைகளைக்கூட பராமரிக்கத் தெரியாத சபை தான் யாழ்ப்பாணம் மாநகர சபை, என்று சுதந்திரக் கட்சியின் செயலர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தமை, அவருக்கு வரலாறும் தெரியாது நாட்டில் என்ன நடக்கின்றது என்பதும் தெரியாது கட்சியில் என்ன நடக்கின்றது என்பதும் தெரியாது என்பதனையே எடுத்துக்காட்டுகின்றது.

இவ்வாறு யாழ்ப்பாண மாநகர முதல்வர் இ. ஆனோல்ட் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வில் உரையாற்றும்போது மாநகர சபையைச் சாடியிருந்தார். அதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே யாழ்ப்பாணம் மாநகர சபை முதல்வர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

தயாசிறி ஜயசேகரா அவ்வாறு தெரிவித்தமை அவருக்கு வரலாறும் தெரியாது. நாட்டில் என்ன நடக்கின்றது என்பதும் தெரியாது. கட்சியில் என்ன நடக்கின்றது என்பதும் தெரியாது. என்பதனையே எடுத்துக்காட்டுகின்றது. ஏனெனில் அந்தப் பேருந்து நில்லயச் சூழல் கடந்த காலத்தில் மாநகர சபையின் அதிகாரத்தின் கீழ் இல்லாமல் இருந்தது. அதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியினரும் காரணம். அன்றிலிருந்து அங்கேயுள்ள பேருந்து சேவையை விட வியாபார சேவையை நடத்துவதனால் எழுந்த சர்ச்சையால் அந்தப் பகுதியில் உள்ள கழிப்பறை பராமரிப்பும் பேருந்து நிலையத்தினரின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. இவரின் கூற்றுமூலமாக ஒன்று தெளிவாகியுள்ளது என்னவென்றால், இவ்வாறான சேவைகளை போக்குவரத்துச் சபையால் நடத்த முடியாது என்பதே. அதனை ஜயசேகரா ஏற்றுக்கொள்கின்றார்.

முன்னைய அரச தலைவர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழர்களை தங்கத் தாம்பாலத்திலா வைத்தீர்கள்? வகை தொகை இன்றி கொன்றொழித்தமையை மறந்து அல்லது மறைத்துப் பேச முற்படக்கூடாது.

செம்மணி முதல் நவாலி வரையென்று இறுதிப் போரில் ஒரு லட்சம் பேர் வரையில் கொன்றொழித்தது உங்கள் கட்சி. ஐ.தே. கட்சியும் சரி சுதந்திரக் கட்சியும் சரி இரண்டுமே கறை படிந்த கட்சியாகவே உள்ளது. இதில் யார் அதிகளவில் கொன்றொழித்தீர்கள் என்பதே உங்கள் பிரச்சினை. அவர்கள் மோதகம் என்றால் நீங்கள் கொழுக்கட்டை இதுதான் வேறுபாடேயன்றி இரண்டுமே ஒரு குட்டையில் ஊறிய மட்டைகள்தான்.

**எமது இனத்தின் கோடரிக் காம்பு**

எமது சபையின் செயற்பாடுகளைத்திறம்பட நடத்த முடியாமல் தற்போது இருப்பதற்கு தங்கள் கட்சியும் ஒரு காரணகர்த்தா. இவ்வாறுள்ள நிலையில் வரலாறும் தெரியாது, நாட்டில் என்ன நடக்கின்றது என்பதும் தெரியாது, கட்சியில் என்ன நடக்கின்றது என்பதும் தெரியாது. வாயில் வந்தவற்றை உரையாற்ற முடியாது. இவ்வாறான தேசிய வாதக் கட்சிகளின் கூற்றை நம்பிச் செல்லும் எமது இனக் கோடாரிக் காம்புகளையும் எண்ணி மனம்நோக வேண்டியுள்ளது -என்றார்.

இந்த நிகழ்வு சு.கவின் நியமன நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜனின் பங்கேற்பில் நடைபெற்றிருந்தது.

(த-105)



## யாழ்ப்பாணத்துக்கு வந்து காதல் கீதமிசைத்த தயாசிறி

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன்தினம் வந்திருந்த சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் தயாசிறி ஜயசேகர தென்னிந்திய திரைப்படப் பாடல் ஒன்றைப் பாடி அசத்தினார்.

தனது உரையை அடுத்து பாட்டுப்பாடவேண்டும் என்று ஆசையாக உள்ளது என்று தெரிவித்த தயாசிறி, ரோஜா எனும் திரைப்படத்தில் கவிஞர் வைரமுத்துவின் வரியில், ஏ.ஆர் ரகுமான் இசையமைத்து எஸ்.பி. பாலசுப்பிரமணியம் பாடிய, காதல் ரோஜாவே எங்கே நீ எங்கே... என்ற பாடலைப் பாடினார்.

முழுமையாகவே அந்தப் பாடலைப் பாடி முடித்தார். கூட்டத்தில் இருந்தவர்கள் கைகளைத் தட்டிப் பாராட்டுத் தெரிவித்தனர். ஒளிப்படங்கள் எடுத்துக் கொண்டனர்.

"சு. கவை கிராம மட்டத்திலிருந்து எழுச்சி பெறச் செய்வோம்" எனும் திட்டத்துக்கமைய மன்னார்,வவுனியா,முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான கூட்டம் வவுனியா நகர சபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதிலும் தயாசிறி ஜயசேகர கலந்துகொண்டார். (த-21)

# ஆசிரிய ஆள் சேர்ப்பில் அநீதி என்று குற்றச்சாட்டு

*கொக்கட்டிச்சோலை, மார்ச் 25*

*கிழக்கு மாகாணத்தில் நிலவுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக, பட்டதாரி பயிலுநர்கள், ஆசிரிய உதவியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். அதற்கான நடவடிக்கையாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் விண்ணப்பம் கோரியுள்ளார். இது தமக்கு அநீதி இழைக்கப்படுவதாக அமைந்துள்ளது என்று பட்டதாரிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.*

இது பட்டதாரிகள் மற்றும் கல்விப்பொதுத்தராதர உயர்தரத்தில் கற்றவர்களுக்கு வாய்ப்பேட்டிருக்கின்றமை வரவேற்தக்கதாக இருந்தாலும், கடந்த காலத்தில் ஆசிரியர் நியமனத்துக்காக விண்ணப்பித்து பரீட்சையில் சித்தியடைந்த தமக்கு இதுவரை நியமனம் வழங்கப்படாது புறக்கணிப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் தெரிவிக்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் நிலவிய வெற்றிடங்களுக்கு அமைய மாவட்ட அடிப்படையில் பட்டதாரிகள், ஆசிரியர் சேவை வகுப்பு3 - 1(அ)இல் இணைக்கப்பட்டனர். இந்தப்பரீட்சையில் சித்தியடைந்து நியமனம் பெறுவதற்குத் தகுதிபெற்ற நிலையில் பல பட்டதாரிகள் இருந்தபோதிலும், குறிப்பிட்டளவிலானவர்களுக்கே நியமனங்கள் வழங்கப்பட்டன. சித்தியடைந்த ஏனைய பட்டதாரிகளுக்கு மாகாணத்தில் ஏற்படுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களுக்கேற்ப நியமனங்கள் வழங்குவதாகவும் கிழக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் குறிப்பிட்டிருந்தார். அந்தக் காலப் பகுதியில், பரீட்சையில் சித்தியடையாத பட்டதாரிகள் பலருக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. சித்தியடைந்த பட்டதாரிகள் வெகுவாக பாதிக்கப்பட்டிருந்தனர். தொடர்ச்சியாகவும் தங்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தியிருந்தனர். இதுவரை பரீட்சையில் சித்தியடைந்த பட்டதாரிகளுக்கு கிழக்கு மாகாணசபை நியமனங்களை வழங்காத நிலையில், தற்போது ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் நேர்முகத் தேர்வை நடத்தி பட்டதாரி பயிலுநர்களாக இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என்று குறிப்பிடுகின்றமை கவலையளிக்கின்றது என்று பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் கூறுகின்றனர்.

கடந்த காலங்களில் விண்ணப்பம் கோரப்பட்ட வரலாறு, குடியியல், நாடகமும் அரங்கியலும், தமிழ், எனப் பல பாடங்களுக்கும் மீண்டும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அந்தப் பாடங்களுக்காக பரீட்சையிலே சித்தியடைந்தவர்கள் இருக்கின்றபோது, மீண்டும் நேர்முகத்தேர்வு நடத்தி நியமிப்பதானது; தம்மை மீண்டும் மீண்டும் அவமதிக்கும் செயலாகவே கருதுகிறோம் என்று பாதிக்கப்பட்ட பட்டதாரிகள் கூறிநிற்கின்றனர்.

(த)

## ஓ/எல் பரீட்சை பெறுபேறு அடுத்த வாரம் வெளியாகும்

யாழ்ப்பாணம்,மார்ச் 25

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அடுத்த வாரம் வெளிவரும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

2018 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 6 லட்சத்து 56 ஆயிரத்து 641 பரீட்சாத்திகள் 4 ஆயிரத்து 661 நிலையங்கள் ஊடாக தோற்றியிருந்தனர். இவற்றின் பெறுபெறுகள் அடுத்த வாரத்தில் வெளியிடப்படவுள்ளன. பெறுபேறுகள் எதிர்வரும் 28 ஆம் ஆம் திகதி அளவில் வெளியிடப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (க-7)

## கொட்டியாரப்பற்றை தனியான பிரதேச சபையாக உருவாக்குக

*திருமலை மாவட்ட அமைப்பாளர் கோரிக்கை*

மூதூர்,மார்ச் 25

மூதூர் தேர்தல் தொகுதியில் தமிழ்க் கிராமங்களை உள்ளடக்கிய கொட்டியாரப்பற்று என்ற தனியான தமிழ் பிரதேச செயலர் பிரிவு உருவாக்கப்பட வேண்டுமெனத் தமிழ் மக்கள் கூட்டணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் சி.நந்தகுமார் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

நிர்வாக ரீதியில் திருகோணமலை மாவட்டமானது கிழக்கு மாகாணத்துக்குரியது .திருகோணமலை மாவட்டம் 11 பிரதேச செயலக பிரிவுகளை உள்ளடக்கி உள்ளதோடு, 230 கிராம அலுவலர் பிரிவுகளையும், 645 கிராமங்களையும் கொண்டுள்ளது.நிலப்பரப்பு அடிப்படையில் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலர் பிரிவின் நிலப்பரப்பை விட மூதூர் பிரதேச செயலர் பிரிவின் நிலப்பரப்பு அதிகமாகும். மேலும் தற்போது உள்ள மூதூர் பிரதேச செயலர் பிரிவுக்குள் உள்ளடங்கும் தமிழ்க் கிராமங்கள் கடந்த காலங்களில் பல்வேறு காரணங்களைக் காட்டி அபிவிருத்தியில் புறக்கணிக்கப்பட்டே வந்தது.

அத்தோடு மூதூர் பிரதேச செயலர் பிரிவின் உள்ள தமிழ்க் கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதியும் இந் மக்களின் வாழ்க்கைத்தரமும் மிகவும் பின்தங்கிய நிலையிலே காணப்படுகின்றன.

எனவே எதிர்காலத்தில் இந்தத் தமிழ் கிராமங்களின் நன்மை கருதி மூதூர் பிரதேச செயலர் பிரிவுக்குள் உள்ளடங்கும் தமிழ்க் கிராமங்களை உள்ளடக்கி கொட்டியாரப்பற்று என்னும் தமிழ்ப் பிரதேச செயலர் பிரிவொன்றைத் தனியாக புதிதாக அமைக்க வேண்டுமென தமிழ் மக்கள் கூட்டணி திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் சி.நந்தகுமார் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (க-40)

## தவக்கால தியானங்கள்

### மன்னிப்பு உறவுக்கான தழைச்சத்து

மன்னிப்பு என்பது வெறும் உணர்வல்ல. இறைவன் காட்டும் இரக்கமுள்ள அன்புபோல் எம்மைப் பகைத்தோரையும் வெறுப்பை விதைத்தவர்களையும் மன்னிக்க நாம் எடுக்கும் முடிவு.

மனதார மன்னிக்க வேண்டியதன் அவசியத்தை உணராமையால்தான் இவ்வுலகில் கவலைகள், சோர்வுகள், உடல் நோய்கள், போர்கள், பழிவாங்கல்கள் அதிகரித்து வருகின்றன. நாம் மகிழ்ச்சியாக வாழ்வதற்குத் தடையாக இருப்பதுகூட மனதார மன்னிக்காமையே.

ஒரு செயலைத் திரும்பத் திரும்பச் செய்யும்போது அந்தச் செயல் அடிப்படைப் பழக்கமாகி விடுகிறது. இதனால்தான் ஏழு மூறையல்ல எழுபது முறை மன்னிக்க வேண்டும் என்று மன்னிப்பின் எல்லையற்ற தன்மையை விளக்கி மன்னிப்புப் பண்பாட்டைப் பரவலாக்க அழைப்பு விடுக்கின்றார் இயேசு. மன்னிப்பது கோழைத்தனமுமல்ல வெட்கமான செயலுமல்ல. அது ஒரு புதிய சமத்துவத்துக்கான தழைச்சத்து. எப்போது மன்னிக்கும் மனநிலை உதயமாகிறதோ அப்போதே மகிழ்ச்சியின் பதையில் எமது வாழ்க்கையில் பயணம் புறப்படும். இதயம் எவ்வளவு உறுதியானதாக இருக்கிறது. என்பதைவிட மன்னிப்பதற்குரிய மனம் இருக்கின்றதா என்பதே முக்கியம். மன்னித்து உறவாட கிடைக்கும் சந்தர்ப்பங்களை உதறித்தள்ளி புறக்கணிப்பை, வெறுப்பை வெளிப்படுத்தி தீராத பகையை வளர்ப்போர் சமூகத்தில் எத்னைபேர். மன்னிக்கத் தெரியாதவர் 'நான் இயேசுவின் சீடர்' என்று சொல்லும் தகுதியை இழக்கின்றார். தாராள மனதுடனும் பாச உணர்வுடனும் மன்னிப்பின் நற்செய்தியாக நாம் வாழ்வோம்.

**எஸ்.யேசுதாஸ்,**
***கொழும்புத்துறை.***

# தேசியபாடசாலையாக்கும் விடயத்தில் தன்னிச்சையாக முடிவெடுக்க முடியா

## மாவை. சேனாதிராசா எம்.பி. சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், மார்ச் 25

**தே**சியப் பாடசாலைகளை அதிகரிக்கும் நடவடிக்கைக்கு முன்னர் உள்ளூர் கல்வியியலாளர்கள், வெளிநாடுகளில் உயர் கல்வி நிபுணத்துவம் பெற்ற, வெற்றியாளர்களுடன் கலந்து பேச வேண்டும். முதலில் இங்குள்ள கல்வியியலாளர்களுடன் பேச வேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சோ.சேனாதிராசா.

இந்த விடயம் தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் உள்ளதாவது;

வடக்கு ஆளுநர் வடக்கில் 14 தேசியப் பாடசாலைகள் உருவாக்கப்படும் என்று அறிவிப்பதற்கு முன் யாரிடம் ஆராய்ந்து தீர்மானித்தார் என்ற கேள்வி எழுகின்றது. யார் இந்த வேண்டுகோள்களை ஆளுநரிடம் முன்வைத்தார்கள் என்பதும் அறிய வேண்டியுள்ளது. இவ் விடயங்களிலும் ஆளுநர் தன்னிச்சையாகச் செயல்பட முடியாது.

இலங்கையில் இனப் பிரச்சினைத் தீர்வு விடயத்தில் மாநிலங்களுக்கு அதிகாரங்கள் முழுமையானதும், திருப்பிப் பெறப்பட முடியாததுமான சுயாட்சி கட்டமைப்பில் அதிகாரங்கள் பகிர்ந்து கையளிக்க வேண்டுமென்பது அடிப்படையான விடயமாகும். இதில் தமிழ்த் தேசிய இனத்தின் கல்வியும் கொள்கையும் நிர்வாக ஆளுமையும் முக்கியமானதாகும்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தமும், மாநிலங்கள் பல்கலைக் கழகம் வரை உருவாக்கவும், பரிபாலிக்கவும் அதிகாரமுள்ளதாக வரையப்பட்டுள்ளது. ஏற்கனவே மாநிலங்களுக்கு பகிரப்பட்டுள்ள கல்விக் கொள்கையின்படி பாடசாலைகள் முதல் பல்கலைக்கழகங்கள் வரையுள்ள நிறுவனங்கள் அதிகாரங்களை குவிக்க மத்திய மயப்படுத்த அனுமதிக்க முடியாது. முழுமையான அதிகாரப் பகிர்வு இடம் பெறும்பொழுது தேசிய பாடசாலைகள் மாநிலங்களுக்குள் இணைக்கப்பட வேண்டும்.

உயர்தர வகுப்புக்களுக்கும், பல்கலைக்கழகக் கல்விக்கும் மாணவர் ஏதோ சந்தர்ப்பவசமாக பாடங்களைத் தேர்ந்து எடுத்திருக்கின்றனர். பயிலும் பாடங்கள் உயர்தர வகுப்பின் அடுத்து பல்கலைக்கழகக் கல்வியில் மருத்துவம், பொறியியல், விஞ்ஞானம், தொழிநுட்பம், வர்த்தகம், கலைப் பிரிவு என்றவாறு பல பாடங்களுக்கு அனுமதி பெறுகின்றனர். குறிப்பாக 60 - 65 வீத மாணவர்கள் கலைப் பிரிவு, சார்ந்த பாடங்களுக்குச் செல்கின்றனர். வேலை வாய்ப்புக்காக தாங்கள் கற்ற பாடங்களுக்கேற்ற தொழில்துறையில் வேலைவாய்ப்புப் பெறமுடியாமலும், வேலையில்லாமலும் 45வயது வரையும் போராடிக் கொண்டிருக்கின்றனர். ஆசிரியர், மாணவர், பாடசாலைகள், ஏற்றத்தாழ்வு தரவேறுபாடுகளால் உளரீதியாகப் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். கலைப் பிரிவு மட்டும் கற்பிக்கும் பாடசாலைகளில் தங்கள் பாடசாலைகளில் விஞ்ஞான பாடங்களில்லை, வர்த்தகப் பாடங்களில்லை என்பதால் தங்கள் பாடசாலைகளுக்கு ஏனைய பாடங்கள் பயிற்றுவிக்க ஏற்பாடு செய்யுங்கள் என்று பெற்றோர், ஆசிரியர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். மாணவர்கள் திட்டமற்ற செயற்பாடுகளினால் தம் எதிர்காலத்திலுள்ள சந்தர்ப்பங்களை இழக்கின்றனர்.

இதற்கான தீர்வு தான் என்ன? பாடசாலைகள் சிலவற்றை சில வேளைகளில், அரசியல் செல்வாக்கால் தேசிய பாடசாலைகள் ஆக்கிவிடுகின்ற சந்தர்ப்பங்களும் ஏற்படுகிறன. தாம் விரும்பியவாறு உயர் கல்வி கற்பதற்கு ஆண்டுதோறும் வெளிநாடுகளில் பெரும் கோடிக் கணக்கில் பணச்செலவில் மருத்துவராக, பொறியியலாளராகப் பட்டம் பெறுகின்றனர். குறிப்பாக முப்பது ஆண்டுகள் போர் நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்கள், அழிந்த பாடசாலைகள், புலம்பெயர்ந்த மக்கள், கல்வி கற்க வசதிவாய்ப்பு அற்றவர், கணிசமான அளவு உடல் உள தகுதியற்றவர்களாயுள்ளனர்.

மறுபக்கத்தில் சிறு வயதில் கல்வியில் ஆர்வமற்ற, தேர்ச்சியற்ற மாணவர் உயர் வகுப்புக்கு வரும் போது தொழில்துறைக்குச் சென்ற போது நிபுணர்களாகவும், செல்வாக்கு, செல்வம், உயர் தலைமைத்துவம்பெற்று விளங்குபவர்களாயும் மிளிர்கின்றனர். இவ்வளர்ச்சிகளை புலம்பெயர்ந்த எம் குடும்பப் பிள்ளைகள், வளர்ந்தவர்களிடம் காணமுடிகின்றது.

எம் கருத்து என்னவெனில் தேசிய பாடசாலைக்கு என்ன வளங்கள் வழங்கப்படுகிறதோ அந்த வளங்களைச் சமச்சீராக உயர்வகுப்பு அனைத்துப் பாடசாலைகளுக்கும் வழங்க வேண்டும். பல்கலைக்கழக கல்விக்கு அப்பால் கல்வி பயில தேர்வு பெறும் பட்டம் பெறுவோர் நிபுணத்துவம், பல துறைகளிலும் கலாநிதி பட்டம், ஆராய்ச்சித் துறைகளில் உயர் கல்வித் துறைகளை உருவாக்கலாம்.

நாட்டின் கல்வித்துறையில் திட்டமிடல் மிக முக்கியமானதாகும். அரசு உயர் கல்வித்துறையையும், திட்டமிடும் முறையையும் உலக தரத்தில் இணைத்து செயல்படுத்த வேண்டும். எட்டாம் வகுப்புக்கும் பத்தாம் வகுப்புக்கும் அதற்கு மேல் உயர்தர வகுப்புக்குச் சென்ற பொழுதும் பல்கலைக் கல்வியில் நுழைவதற்கு முன் அந்த மாணவர்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். அதற்கு வழிகாட்டல் முறையை கட்டாயமாக்கப்பட வேண்டும். எந்தெந்த துறைக்கு மாணவர் உயர் கல்வி, பல்கலைக்கழகக் கல்வி பெறுவது என்று வழிகாட்டப்படவேண்டும். கல்வியை முடித்த பின் அடுத்த நாளே அந்தத் துறைகளில் வேலைவாய்ப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இலங்கையில் இராணுவச் செலவீனம் 30 வீத ஒதுக்கீட்டை 6 - 7 வீதமாகக் குறைக்கப்பட வேண்டும். வளர்ந்து வரும் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புதிய பொருளாதார கொள்கை உலக மயமாக்கல் சந்தைப் பொருளாதாரத்துக்கேற்ப பாடங்களும், பட்டங்களும் இடம்பெற வேண்டும். வர்த்தகத்துறையில் உலகத்திலுள்ள பல்கலைக்கழகங்களில் 23 முதல் 27 பாடங்கள் கற்பிக்கப்படுகிறன. மருத்துவத் துறையில் எட்டுப்பாடங்கள் கற்பிக்கப்படுகிறன. கலைத்துறைக்கு 30-35 வீத மாணவர்களும் 65 - 70 வீத மாணவர் வழிகாட்டு முறையில் உயர் கல்வித்துறையில், பல்கலைக்கழகக் கல்வியில் ஏனைய துறைகளுக்கும் உள்வாங்கப்பட வேண்டும்.

கொழும்பு, பேராதெனியா தேசியப் பல்கலைக்கழகங்களாகவும் ஏனைய பல்கலைக் கழகங்கள் பிராந்தியப் பல்கலைக் கழகங்களாகவும் அனைத்துப் பீடங்களும் கொண்டதாகவும் அந்தந்தப் பிராந்தியங்களிலிருந்தே குறைந்தது 75 வீத மாணவர்கள் பிராந்திய பல்கலைக் கழகங்களில் அனுமதிக்கப்படவும் வேண்டும். இதனால் பிராந்தியங்களின் சமூகக் கட்டமைப்பு பிரதிபலிக்கவும், பாதுகாக்கப்படவும் முடியும். இம் முறை ஜப்பான் கல்வி முறையில் இருப்பதாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் குறிப்பிட்டார்.

இந்த வழிமுறைகளை 2017ஆம் ஆண்டு நாடாளுமன்ற வரவு - செலவுத் திட்ட விவாதத்தின் போது உரையாற்றியிருந்தேன். உயர் கல்வி அமைச்சர் கிரியெல்ல, பல்கலைக் கழகங்கள் மானிய ஆணைக்குழுத் தலைவர், உதவித் தலைவர் அடுத்த வாரத்திலேயே என்னுடன் சில மணி நேரங்கள் கலந்துரையாடி அந்த முறையை ஒப்புக் கொண்டிருந்தனர்.

தேசியப் பாடசாலைகளை அதிகரிக்கும் அறிவிப்பு நடவடிக்கைக்கு முன்னர் உள்ளூர் கல்வியாளர், வெளிநாடுகளில் உயர் கல்வி நிபுணத்துவம்பெற்ற, வெற்றியாளர்களுடன் கலந்து பேச வேண்டும். முதலில் எம்மிடமுள்ள கல்வியாளர்களுடன் கலந்துபேச ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளேன்.

மாநிலங்களுக்கு அரசமைப்பில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுகையில் அந்தப் பிராந்தியங்களின் கட்டமைப்பு பிரதிபலிக்க பிராந்தி யங்களுக்கு கல்வி, உயர் கல்வி முக்கியமாகக் கையளிக்கப்பட வேண்டும். மத்தியில் அதிகாரங்களை குவிக்கக் கூடியதாய் இடமளிக்க முடியாது. இந்த விடயத்தைத் தீர்மானிப்பதில் இத்துறையில் ஆழ்ந்த பட்டறிவும் நிறைந்த அனுப மும் உதவ வேண்டும். - என்றுள்ளது.

(எ)

# தேசிய பாடசாலைகளாக்கும் முடிவை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது

## சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

மாகாணப் பாடசாலைகளை தேசியப் பாடசாலைகளாக மாற்றுவது ஏற்றுக் கொள்ளப்பட முடியாததொன்று. மாகாணப் பாடசாலைகளைத் தேசிய பாடசாலைகளாக மாற்றுமாறு முன்வைத்த கோரிக்கை விண்ணப்பங்களை மீளப் பெற்றுக் கொள்ள வேண்டும். மத்தியிலிருந்து மாகாணத்துக்கு வழங்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கத்தை நாமே மீள மத்திக்குக் கொடுக்கக் கூடாது. இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கட்டப்பிராயில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வடக்கு மாகாணத்தில் ஆயிரத்து 10 பாடசாலைகள் இருக்கின்றன. அவற்றில் 22 தேசிய பாடசாலைகள் இருக்கின்றன. அதனை விட தனியார் பாடசாலைகளாக 6 பாடசாலைகள் இருக்கின்றன. இப்பொழுது 8 பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக மாற்றுமாறு கோரி வடக்கு மாகாண ஆளுநருக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே 22 பாடசாலைகள் இங்கு தேசிய பாடசாலைகளாக இருக்கின்றன.

இலங்கையில் அதிகாரப் பகிர்வு என்றொரு விடயம் தமிழ் மக்களுடைய போராட்டத்தின் காரணமாக மாகாணத்துக்கு அதிகாரங்கள் பகிரப்பட்டது. இதில் கல்வி சம்மந்தமாக பாடசாலைக் கல்வி என்பது மாகாண சபைக்கு உரித்தான ஒரு விடயமாக மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் அதே சமயம் பாடசாலைக் கல்வியை தேசிய பாடசாலைகள் என்றும் மாகாண பாடசாலைகள் என்றும் பிரிக்கப்பட்டும் இருக்கின்றது தேசிய பாடசாலைகளுக்கும் மாகாண பாடசாலைகளுக்கும் இடையில் பாடவிதானங்கள் சம்மந்தமாகவோ அல்லது வேறு வழிகளிலோ எந்தவிதமான வித்தியாசங்களும் கிடையாது. தேசிய பாடசாலைகளுக்கு அரசாங்கம் ஏதோ கூடுதலான நிதி ஒதுக்குகின்றதென்ற காரணத்தைக் காட்டி பல பாடசாலைகள் தங்களைத் தேசிய பாடசாலைகளாக ஏற்றுமாறு கோரிக்கைகளை விடுத்து வருகின்றன. தேசிய பாடசாலைகளாக மாற்றுவதாக இருந்தால் மாகாணப் பாடசாலைகள் என்பன மீண்டும் கொழும்பு அரசுக்குக் கொடுக்கப்பட்டு தேசிய பாடசாலைகளாக அவற்றை மாற்றுகின்ற ஒரு சூழல்தான் ஏற்படும்.

தமிழ் மக்கள் தங்களது அதிகாரத்துக்காக சுயநிர்ணய உரிமைக்காக ஒரு முழுமையான அதிகாரம் வேண்டுமென்று கேட்டுப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். முழுமையான கல்வி அதிகாரம் மாகாணங்களுக்கு வேண்டும். வெறுமனே பாடசாலைக் கல்வி மாத்திரமல்லாமல் உயர் கல்வி கூட மாகாணத்தின் கட்டுப்பாட்டிலே வர வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளுக்காக இன்னும் போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

எமது அதிபர்களோ அல்லது பாடசாலையின் பெற்றோர் மற்றும் ஆசிரியர் சங்கங்களோ இவர்கள் இந்த அதிகாரப் பகிர்வு என்று சொன்ன இந்த விடயங்களை விளங்கிக் கொள்ளாமல் கொழும்பு அரசுக்குக் கீழ் தேசிய பாடசாலைகளாக வந்தால் ஏதோ தமக்குச் சிறப்பானது என்ற பார்வை இருக்கின்றது. அனால் அது முற்றிலும் தவறானதொரு பார்வை. ஆகவே முதலாவதாக அதிபர்களும் ஆசிரியர்களும், பெற்றார் ஆசிரியர் சங்கங்களும் தயவு செய்து இதனைப் புரிந்து கொள்ள வேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இருக்கக் கூடிய அதிபர்கள், ஆசிரியர்கள் பாடசாலைப் பெற்றோர்கள், பழைய மாணவர் சங்கங்கள் எல்லோரும் இந்த அதிகாரப் பகிர்வு என்ற விடயத்தைப் புரிந்து கொண்டு உங்களுடைய பாடசாலைகளுக்கு தேவையான அளவிற்கு மேலதிகமான நிதியை வளங்களைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள். ஆனால் உங்கள் பாடசாலைகளை தேசிய பாடசாலைகள் என்ற பெயரில் கொழும்பு அரசிற்கு ஒப்படைப்பதற்கு ஒத்துக் கொள்ளாதீர்கள். - என்றார்.

(எ)

# அரசை ஏற்படுத்தவும் கவிழ்க்கவும் ஊடகங்களால் நிச்சயமாக முடியும்

## அதற்காகத் தவறான பரப்புரை வேண்டாம் என்கிறார் இராஜாங்க அமைச்சர் மன்னப்பெரும

கொழும்பு, மார்ச் 25

அரசு ஒன்றை ஏற்படுத்தவும் வீழ்த்தவும் ஊடகங்களால் முடியும். அதனை ஊடகங்கள் நேர்மையாகச் செய்யவேண்டும். யாருடைய தேவைக்காகவும் பொய்ப் பரப்புரைகளை மேற்கொள்ளக் கூடாது. வில்பத்து வன பிரதேசத்தில் ஒரு அங்குலமேனும் காடழிக்கப் படவில்லை என்பதைப் பொறுப்புடன் தெரிவிக்கின்றேன்.

இவ்வாறு தெரிவித்தார், இராஜாங்க அமைச்சர் அஜித் மன்னப்பெரும. நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்கராஜ காடு அழிக்கப்படுவதாக ஊடகங்களில் பரப்புரை செய்யப்பட்டது. அது தொடர்பாகத் தேடிப்பார்த்தேன். எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை. அதனால் ஊடகவியலாளர் குழுவொன்றை சிங்கராஜ காட்டுக்கு அழைத்துச்சென்று காண்பித்தபோது, அங்கு ஒரு பகுதியில் 2001 - 2005 காலப்பகுதியில் ஏற்பட்ட மண் , சரிவில் ஏற்பட்ட சேதம், காடழிப்பு இடம்பெற்றுள்ளதுபோல் தெரிகின்றது. அதனைத்தான் ஊடகங்கள் சிங்கராஜ வனாந்திரத்தில் காடழிப்பு இடம்பெறுவதாகப் பரப்புரை செய்தன.

வில்பத்து வனப்பிரதேசத்துக்கும் 2012இல் குடியமர்த்தப்பட்டிருக்கும் பிரதேசத்துக்கும் தொடர்பில்லை. வில்பத்து இருப்பது புத்தளம், அநுராதபுரம் மாவட்டத்தில். ஆனால் மக்கள் குடியமர்த்தப்பட்டிருப்பது மன்னார் மாவட்டத்தில்.

பசில் ராஜபக்ச அமைத்த குழுவின் பரிந்துரைக்கமைய ஆயிரத்து 700 ஏக்கர் காடழிப்புச் செய்து மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. நாங்கள் அங்கு சென்று அளந்து பார்த்தபோது ஆயிரத்து 950 ஏக்கர் காணி வழங்கப்பட்டுள்ளது தெரியவந்தது. 2013ஆம் ஆண்டுக்குப் பின்னர் அங்கு ஓர் அங்குலமேனும் காடழிக்கப்படவில்லை. வில்பத்துவில் காடழிப்பதாக ஊடகங்களில் காட்டப்படும் வரைபடம் 2011இல் எடுக்கப்பட்ட கூகுள் வரைபடம்.

ஆனால் காட்டை அழித்து மக்களுக்கு காணி வழங்கிய பசில் ராஜபக்சவின் பெயரைப் பயன்படுத்துவதில்லை - என்றார்.

(த-31)

# 20ஆவது அரசமைப்பைத் திருத்த ஜே.வி.பிக்கு முழு ஒத்துழைப்பு

## அமைச்சர் மத்தும பண்டார தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 25

நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசதலைவர் முறையை நீக்கும் நிலைப்பாட்டிலேயே ஐக்கிய தேசியக் கட்சி உள்ளது. அதற்காக 20 ஆவது அரசமைப்புத் திருத்தத்தைக் கொண்டுவருவதற்கான மக்கள் விடுதலை முன்னணியின் முயற்சிக்கு ஒத்துழைப்புப் பெற்றுக்கொடுப்போம்.

இவ்வாறு பொது நிர்வாக மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

குறித்த அதிகாரத்தை நீக்குவது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளுடனும் கலந்துரையாடல்களை மேற்கொள்கின்றமை தொடர்பில் வினவியபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவதாகக் கூறி சிறிசேன ஆட்சிப் பொறுப்பு ஏற்றிருப்பினும் அதற்கான எவ்வித செயற்பாடுகளையும் முன்னெடுக்கவில்லை.

சிறிசேன 2015 ஆம் ஆண்டு நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவதாகக் குறிப்பிட்டு அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டிருப்பினும் தற்போது தயக்கம் காட்டி வருகின்றார். நிறைவேற்று அதிகாரம் எந்தவித வரையறைகளுமின்றித் தொடர்ந்து நீடிக்குமானால் மக்களுக்குப் பாதகத்தை ஏற்படுத்தும். நிலையான ஆட்சியை உருவாக்குவதிலும் சிக்கல் வரும்.

அது மாத்திரமின்றி தனிநபர் தீர்மானமாக முன்வைக்கப்பட்டுள்ள 20 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பான யோசனைக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் ஆதரவையும் பெற்றுக்கொள்ள வேண்டும். எஞ்சியுள்ள குறுகிய காலத்தில் அனைவரினதும் ஆதரவுடனும் நிறைவேற்று அதிகாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தவே எதிர்பார்த்துள்ளோம்.

கடந்த வெள்ளிக்கிழமை மக்கள் விடுதலை முன்னணி ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரைச் சந்தித்து 20 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டமூலம் கலந்துரையாடலொன்றை மேற்கொண்டிருந்தது - என்றார். (த-61)

## விடுதி சுற்றிவளைப்பு: 7 பெண்கள் மறியலில்

கொழும்பு, மார்ச் 25

விபச்சார விடுதி நடத்தியமை, விபச்சாரத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டுக்களில் 7 பெண்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். வெலிக்கடைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோட்டே வீதி, எதுல்கோட்டே, இராஜகிரிய என்ற முகவரியில் ஆயுள்வேத மசாஜ் நிலையம் என்ற பெயரில் இயங்கி வந்த நிலையம் சுற்றி வளைக்கப்பட்டு அவர்கள் கைது செய்யப்பட்டனர். நிலையத்தின் முகாமையாளரான பெண் உட்பட 7 பெண்கள் சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 28 வயதுடைய இருவர், 25, 28, 29, 32 மற்றும் 48 வயதுகளையுடைய பெண்களே கைது செய்யப்பட்டுள்ளனர். புதுக்கடை நீதிவான், அவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(த-22)

# சிங்கள, பௌத்தர் அல்லாதவரின் ஊடகங்கள்மீது புலி முத்திரையா?

## பிரதி அமைச்சர் புத்திக்க பத்திரன கேட்கிறார்

கொழும்பு, மார்ச் 25

சிங்கள பௌத்தர் அல்லாத எவரும் ஊடகங்களை ஆரம்பித்தால் அவர்களுக்குப் புலி முத்திரை குத்துவது ஏன் எனுன்று சபையில் கேள்வி எழுப்பிய பிரதி அமைச்சர் புத்திக்க பத்திரன, ஊடகங்களும் மக்களைத் தூண்டி விடும் வகையில் செய்திகளை வெளியிட வேண்டாம் எனவும்வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் ஊடகங்கள் வேறு கைகளுக்கு மாறும்போது அல்லது சிங்களவர் அல்லாத எவரும் ஊடகங்களை இயக்கும்போது அந்த ஊடகங்களுக்குப் புலி முத்திரை குத்தும் அரசியல் கலாசாராம் இங்கு உள்ளது. இலங்கையில் சிறிது காலமாகத் தனியார் நிறுவனம் சிலவற்றை அவ்வாறே புலி முத்திரை பொறித்து வருகின்றனர். ஏன், இலங்கையில் சிங்கள பௌத்தர் அல்லாத எவரும் ஊடகங்களை இயக்கக்கூடாது என்ற கட்டாயம் உள்ளதா? இன்று தமிழ் ஊடகங்களைப் புலிகள் என்று கூறுவதைப்போல நாளை முஸ்லிம் ஒருவர் ஊடகம் ஒன்றை இயக்க ஆரம்பித்தால் அவர்கள் இஸ்லாமிய பயங்காரவாத அமைப்பு என்று கூறுவார்கள். இந்த நிலைமைகளை மாற்றியமைக்க வேண்டும்.

அதேபோல் ஊடகங்களும் செய்திகளைக் கையாள்வதில் மாற்றங்கள் உருவாக்க வேண்டும். அண்மையில் நியூசிலாந்தில் பள்ளிவாசல் இரண்டில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தை அந்த நாட்டு ஊடகங்கள் மிகவும் பொறுப்புடன் வெளி யிட்டன. குற்றவாளியை வெளிப்படுத்தாது பாதிக்கப்பட்ட நபர்களின் சொந்த விவரங்களைவெளியிடாது உண்மைகளைக் கண்டறியவும் பதட்டநிலையைக் குறைக்கவுமே ஊடகங்கள் பொறுப்புடன் செயற்பட்டன. ஆனால் இலங்கையில் ஊடகங்கள் அவ்வாறு செயற்படுகின்றனவா? என்ற கேள்வி உள்ளது. இங்கு மறைகாணிகளையும் இரகசிய காணொலிப் பதிவுகளையும் பிரசுரித்து மக்களைப் பதறவைக்கும் வகையில் மிகவும் மோசமான வகையில்தான் இங்கு செய்திகள் வெளியிடப்படுகின்றன.

கள்ளர்கள், குற்றவாளிகள் நீதிமன்றுக்குச் சென்று வெளியில் வரும் வேளையில் ஊடகங்கள் அவர்களிடம் எப்போது அரசியலுக்கு வருகின்றீர்கள்? நீங்களா அரசதலைவர் வேட்பாளர் என்ற கேள்விகளையே கேட்கின்றனர். எதற்காக நீதிமன்ற வழக்குத் தொடரப்பட்டுள்ளது, என்ன குற்றம் என்ற காரணிகளை மூடி மறைக்கும் வகையில் ஊடகங்கள் மிகவும் மோசமான வகையில் செயற்பட்டு வருகின்றன. இந்தக் கலாசாரம் மாற்றப்பட வேண்டும் - என்றார்.

(த-31)

see more news in newuthayan.com

# ஊடகங்கள் பொறுப்புடன் நடந்துகொள்கின்றனவா?

## பிரதி அமைச்சர் கேட்கிறார்

கொழும்பு, மார்ச் 25

செய்திகளை, முந்திக் கொண்டு தாங்கள்தான் தெரிவிக்கின்றோம் எனக் குறிப்பிடும் ஊடகங்கள் பொறுப்புடன் செய்திகளை வெளியிடுகின்றோம் எனத் தெரிவிப்பதில்லை - என்று பிரதி அமைச்சர் கருணாரத்ன பரணவிதாரண தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் பாதீடு பற்றிய குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

ஊடக சுதந்திரத்தை எமது அரசு உறுதிப்படுத்தியுள்ளது. கடந்த காலங்களில் ஊடகங்கள் எதிர்கொண்ட நெருக்கடிகள் எதுவும் இன்று இல்லை. என்றாலும் ஊடகங்கள் பெற்றுக்கொண்ட சுதந்திரத்தை முறையாகப் பின்பற்றுகின்றதா என்ற சந்தேகம் இருக்கின்றது. ஊடகவியலாளர்கள் இன்று கடத்தப்படுவதில்லை, கொலை செய்யப்படுவதில்லை.

ஊடக ஒழுக்கக்கோவை அமைக்கப்பட வேண்டும் என்று நாங்கள் தெரிவிக்கும்போது, ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதாக பரப்புரை செய்யப்படுகின்றது. அச்சு ஊடகங்களுக்கு ஒழுக்கக்கோவை இருக்கின்றது. இலத்திரனியல் ஊடங்களுக்கு அது இல்லை. அவர்கள் சுயமாக தணிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். என்றாலும் இலத்திரனியல் ஊடகங்களின் ஒளிபரப்புக்கள் பொதுமக்களின் ஜனநாயக உரிமையைப் பாதுகாக்கின்றனவா என்ற கேள்வி எழுகின்றது.

சமூக வலைத்தளங்களின் செயற்பாடுகள் இன்று பெருமளவில் விமர்சிக்கப்பட்டு வருகின்றன. இனவாதத்தைத் தூண்டும் கருத்துக்களைப் பிரசுரிக்கும்போது அதனைக் கட்டுப்படுத்த எந்தச் சட்டமும் இல்லை. ஆனால் ஜேர்மன் போன்ற நாடுகளில் இனவாதத்தைத் தூண்டும் கருத்துக்களைத் தெரிவிக்கும் சமூக வலைத்தளங்களுக்கு எதிராகச் சட்டம் இருக்கின்றது. ஊடக ஒழுங்கு பொறிமுறை ஒன்றை ஏற்படுத்துவதன் மூலமே ஒழுக்கமுள்ள ஊடக கலாசாரத்தை ஏற்ப டுத்தலாம் - என்றார். (த-31)

# ஜெனிவாத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துங்கள்

## யோகேஸ்வரன் எம்.பி. வலியுறுத்து

செங்கலடி, மார்ச் 25

ஜெனிவாவில் தற்போது கொண்டுவரப்பட்ட 40/1 தீர்மானத்தை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இதைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 13 பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த 6ஆயிரத்து109 பேருக்கு காணி அனுமதிப்பத்திரங்களும், ஆயிரத்து 97 பேருக்கு காணி உறுதிப்பத்திரங்களும் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு வெபர் விளையாட்டு அரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் நீடித்து நிலைத்திருக்கும் அரசியல் தீர்வு விரைவாகக் கிடைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் இந்த அரசுக்கு நாங்கள் ஆதரவு வழங்கியுள்ளோம்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக முன்னைய அரசு கூறியதைப் போன்று இந்த அரசும் படைவீரர்களைக் காட்டிக் கொடுக்க மாட்டோம் என்று கூறினால் தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகமாகவே அமையும். - என்றார்.

(த)

# கூட்டரசின் காலத்தில் வடக்கில் தொழிற்சாலை அமைத்தீர்களா?

## என்னதான் செய்தீர்கள் என்று கேட்கிறார் எதிர்க்கட்சி உறுப்பினர் குணவர்த்தன

கொழும்பு, மார்ச் 25

கூட்டரசு அரசமைத்த 4 ஆண்டுகளில் வடக்கில் ஒரு கைத்தொழில் பேட்டையாவது உருவாக்கப்பட்டுள்ளதா? இந்த ஆட்சியில் வடக்கு மக்களுக்கு அரசு செய்தது என்னவென்று கூற முடியுமா? - என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன சபையில் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் பலமாகச் செயற்பட்ட கூட்டுறவுத்துறை இன்று பலவீனமடைந்து ஊழல்,மோசடிகளால் நிறைந்து போயுள்ளது. இவை பற்றி எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கூட்டுறவுத்துறையின் சொத்துக்கள் விற்கப்படுகின்றன. கூட்டுறவுத்துறை வீழ்ச்சியடைந்துள்ளது. கூட்டுறவுத்துறையில் திருடுவதற்கு இடமளித்துவிட்டு உயரதிகாரிகள் தூங்குகின்றனர். எனவே கூட்டுறவுத்துறைச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும். அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் பன்னாட்டு வர்த்தக அமைச்சுக்கும் கைத்தொழில் வாணிப அலுவல்கள் கூட்டுறவு அமைச்சுக்கும் இடையில் தொடர்புகள் இல்லை. எப்படிக் கைத்தொழில் முயற்சிகளை ஊக்குவிக்க முடியும்?

வடக்கில் கைத்தொழில் துறையும் கூட்டுறவுத்துறையும் பலம்பெற்றிருந்தது. கண்ணாடித் தொழிற்சாலை உட்படப் பல தொழிற்சாலைகள் இயங்கின. தற்போது வடக்கில் ஒரு கைத்தொழில் பேட்டையாவது உருவாக்கப்பட்டுள்ளதா? தமிழ் மக்களுக்காக இந்த அரசு ஏதேனும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளதா - என்றார். (து-31)

# மகிந்தவைக் காட்டிலும் மைத்திரி நல்லவராம்

## அங்கஜன் எம்.பி பாராட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 25



எமது நாட்டில் எத்தனையோ அரச தலைவர்கள் இருந்துள்ளனர். அவர்கள் அத்தனை பேருக்கும் அப்பால் மக்களுடைய பிரச்சினைகளை அறிந்து தீர்த்துவைக்கும் ஒரே ஒரு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனதான். மைத்திரிபால சிறிசேனவை 2020ஆம் ஆண்டிலும் சுதந்திரக்கட்சி சார்பில் அரச தலைவர் ஆக்குவதே நோக்கம். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் இ. அங்கஜன் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மறுசீரமைப்புச் செயற்றிட்ட மாநாடு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் தட்டாதெருப் பகுதியில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சிக்கு அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டபோது இங்குள்ள பிரச்சினைகள் தெரியாதவர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆனால் சுகந்திரக்கட்சியின் செயலராக தயாசிறி ஜயசேகர நியமிக்கப்பட்டதன் பின்னர் இங்குள்ள பிரச்சினைகளைத் தெரிந்தவர்கள் அமைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். சுதந்திரக்கட்சி என்ற பெயரில் பணம் சம்பாதிப்பவர்களை நாங்கள் தடுத்துள்ளோம். அவர்கள் கொழும்பில் எங்கள் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர். மக்களுடைய பிரச்சினைகள் ஏராளமாக இருக்கின்றன. காணிவிடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய பிரச்சினைகள், அபிவிருத்தி சார்ந்த பிரச்சினைகள் என ஏராளமான பிரச்சினைகள் இருக்கின்றன ஆனால் எமது மக்கள் பிரதிநிதிகள் என்று கூறப்படு வோர் எங்கு நிற்கின்றனர்.

அவர்கள் ஜெனிவாவில் நிற்கின்றனர். இப்போது என்ன நடந்தது ஒன்றும் இல்லை. எமது அரச தலைவர் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்துவருகிறார். இலங்கையில் அரசதலைவராக இருந்தவர்களிலேயே மைத்திரிபால சிறிசேனதான் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தவர். மைத்திரிபால சிறிசேனவை 2020ஆம் ஆண்டும் அரசதலைவர் ஆக்குவோம்.

இன்றைய இந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மக்களின் தீர்மானமாக இதை நாங்கள் சுகந்திரக்கட்சியின் செயலருக்குக் கூறுகின்றோம் - என்றார்.

மகிந்த ராஜபக்ச அரச தலைவராக இருந்தபோது, சுதந்திரக்கட்சி என்ற பெயரில் அவருடன் இணைந்து கடந்த காலங்களில் அங்கஜன் யாழ்ப்பாணத்தில் பரப்புரைக் கூட்டங்களை நடத்தியிருந்தார். மகிந்த ராஜபக்சவுடைய ஒளிப்படம் தாங்கிய பதாகையையும் அவர் தனது அலுவலகத்துக்கு முன்னால் அமைத்திருந்தார். மகிந்த ராஜபக்ச யாழ்ப்பாணத்துக்கு வரும்போது அங்கஜனுடைய அலுவலகத்துக்குச் செல்லாத நாள்கள் இல்லை. அங்கு மகிந்தவுக்கு வழங்கப்படாத உபசரிப்புக்களும் இருந்ததில்லை. கடந்த அரச தலைவர் தேர்தலில் அரச தலைவராக மைத்திரிபால சிறிசேன தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் மகிந்தவுக்கு ஆதரவாக இருந்த அங்கஜன் மைத்திரி பக்கம் தாவினார்,

கட்சி அலுவலகத்துக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்த மகிந்தவின் ஒளிப்படப் பதாகை அகற்றப்பட்டு, மைத்திரியின் ஒளிப்படப்பதாகை வைக்கப்பட்டிருந்தது. சுகந்திரக்கட்சியில் யார் அரச தலைவரானாலும் அவரை ஆதரிப்போம் என்று தெரிவித்த அங்கஜன் சுதந்திரக்கட்சிதான் எமது கட்சி என்றும் தெரிவித்திருந்தார். இவ்வாறான ஒரு நிலையிலேயே நேற்று இதுவரை இருந்த அரசதலைவர்களிலேயே மைத்திரி சிறந்தவர் என்று தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பில் இருக்கும் அரசதலைவரே கடந்த நான்கு ஆண்டுகளாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த மறுக்கும் இந்தச் சூழலில் மக்களுடைய பிரச்சினைகளை மைத்திரி தீர்த்துவைத்துள்ளார் என்று அங்கஜன் கூறியது வேடிக்கையானது. என்று சமூக ஆர்வலர்கள் விசனித்துள்ளனர். அரசியல் இலாபத்துக்காக ஒருவரை ஒருவர் மாறிமாறி மக்களை ஏமாற்றும் வித்தையே இது என்றும் மக்கள் தூற்றிக் கொண்டனர். (ஜ-21)

# கோரமாக வெட்டி கணவன் கொலை: மனைவி கைது!

கொழும்பு, மார்ச் 25

கொட்டாவ , பன்னிப்பிட்டியவில் வர்த்தகர் ஒருவர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். கொலைக் குற்றச்சாட்டில் அவரது மனைவி கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பன்னிப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடையவரே கொல்லப்பட்டார். மனைவியுடன் குறித்த நபருக்கு கருத்து மோதல் ஏற்பட்டுள்ள நிலையில் இந்தச் சம்பவம் ஏற்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உடல் முழுவதும் வெட்டுக் காயங்களுக்குள்ளான கணவன் ஆபத்தான நிலையில் ஹோமாகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (து-22)

# கோத்தா போட்டியிட்டால் தமிழர் ஆதரவளிப்பராம்!

## செஹான் சேமசிங்க எம்.பி. கண்டுபிடிப்பு

கொழும்பு, மார்ச் 25

பொதுமக்கள் முன்னணியின் அரசதலைவர் வேட்பாளராக முன்னாள் பாதுகாப்புச்செயலர் கோத்தபாய ராஜபக்ச போட்டியிட்டால் தமிழ், முஸ்லிம் மக்கள் முழுமையான ஆதரவு வழங்குவார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

முன்னணியின்அரசதலைவர் வேட்பாளர்களை தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் ஒருபோதும் ஆதரிக்க மாட்டார்கள். அதிலும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச அரசதலைவர் வேட்பாளராக போட்டியிட்டால் அது ஐக்கிய தேசிய கட்சிக்கு சாதகமாக அமையும் என ஆளும் தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர்.

அரசின் செயற்பாடுகளை அனைத்து மக்களும் எதிர்க்கும்போது தமிழ் மக்கள் சிங்கள மக்கள் என்ற வேறுபாடுகள் கிடையாது. கோத்தபாய ராஜபக்ச அரச தலைவர் வேட்பாளராக போட்டியிட வேண்டும் என்பது அரசியல் மட்டத்தில் குறிப்பிடப்பட்ட விடயமல்ல, மக்களே தங்களின் அரசியல் அபிப்பிராயங்களை வெளிப்படுத்தும் விதமாக இந்தத் தீர்மானத்தை குறிப்பிட்டுள்ளார்கள். அனைவரது எதிர்பார்ப்பும் வெற்றி பெற வேண்டும்.

கோத்தபாய ராஜபக்சவை தமிழ் மக்கள் புறக்கணிக்கின்றார்கள் என்று குறிப்படுவதற்கான முறையான காரணிகள் ஏதும் கிடையாது. 30 வருட பயங்கரவாதப் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும். என தமிழ் மக்களும் எதிர்ப்பார்த்தார்கள். அவர்களின் நோக்கமும் நிறைவேற்றப்பட்டது.

2015 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி இனவாதக் கருத்துக்களை பரப்புரையாக முன்னெடுத்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியது. இம்முறையும் அதனையே முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவுடன் தொடர்புப்படுத்தி வெற்றி கொள்ள முயற்சிக்கின்றது.

2020 ஆம் ஆண்டு எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்சவின் நிர்வாகத்தை அனைத்து இன மக்களும் ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. ஆட்சி மாற்றத்தை இன்று அனைவரும் எதிர்ப்பார்க்கின்றார்கள். எமது நாட்டின் தேசிய உற்பத்திகளை மேம்படுத்தவும், நாட்டின் சுயாதீன இறையாண்மையை பேணும் சிறந்த தலைவரை அனைவரும் ஒன்றிணைந்து தெரிவு செய்ய வேண்டும். அதிக வருமானத்தை ஈட்டும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் தேர்தல் வாக்குறுதியை வழங்க ஆரம்பித்து விட்டது.

2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வருவதற்காக கார் உற்பத்தி தொழிற்சாலைகளை இலங்கையில் அமைப்பதற்காகவும், 10 இலட்சம் தொழில்வாய்ப்புக்களை வழங்கல், வறுமையை ஒழித்தல், வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு வாக்குறுதிகளை ஐக்கிய தேசியக் கட்சி வழங்கியது. வழங்கப்பட்ட வாக்குறுதிகள் இன்று நிறை வேற்றப்பட்டுள்ளதா? அனைத்தும் பொய்யாக்கப்பட்டுள்ளதுடன், மக்கள் பொருளாதார ரீதியில் பின்தங்கப்பட்டுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் பொய்யான பரப்புரைகளுக்கு நாட்டு மக்கள் இனியும் ஏமாற மாட்டார்கள் - என்றார். (க-61)

# நாளாந்தம் 650 கருக்கலைப்பு

கொழும்பு ,மார்ச் 25

இலங்கையில் நாளாந்தம் 650 பாதுகாப்பற்ற கருக்கலைப்புக்கள் இடம்பெறுகின்றன என்று கணிக்கப்பட்டுள்ளது.

இது சிசு இறப்பு வீதங்களின் அதிகரிப்புக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளதுடன், தாய்க்கும் பாதிப்பேற்படுத்துவதாக உள்ளது. கருக்கலைப்பு மற்றும் குடும்பக்கட்டுப்பாடு தொடர்பில் தெற்காசிய நாடுகளில் போதிய விழிப்புணர்வற்ற தன்மையே நிலவுகின்றது. இவை ஒரு தனிமனிதனில் இருந்து தொடங்குபவை என்பதுடன், அவை தனிமனித உரிமைகளும் ஆகும் என ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி ரிட்சு நிக்சன் தெரிவித்தார்.

குடும்பக்கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பற்ற கருக்கலைப்பு என்பன தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியத்தினால் முன்னெடுக்கப்படும் எப்.பி 2020 செயற்றிட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பெத் ஸ்க்லெக்டர் நாட்டுக்கு வந்திருக்கின்றார்.

அதனையொட்டி கடந்த வெள்ளிக்கிழமை பௌத்தாலோக மாவத்தையிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு எப்.பி 2020 செயற்திட்டப் பணிப்பாளர் ஸ்க்லெக்டர் கூறுகையில்;

எம்மால் முன்னெடுக்கப்பட்ட எப்.பி 2020 செயற்றிட்டம் நடைமுறைப் படுத்தப்பட்ட 69 நாடுகளில் சுமார் 119 மில்லியன் எதிர்பாராத கருத்தரிப்புக்கள், 20 மில்லியன் பாதுகாப்பற்ற கருக்கலைப்புக்கள், 137 ஆயிரம் பிறப்பின் போதான இறப்புக்கள் என்பன தடுக்கப்பட்டுள்ளன.

குடும்பக்கட்டுப்பாடு, பாதுகாப்பற்ற கருக்கலைப்பு என்பன சனத்தொகையைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படுவன அல்ல. மாறாக ஒவ்வொரு தனிமனிதனுக்குமான உரிமையாகும். எனவே இவ்விடயம் குறித்த விழிப்புணர்வு பரவலாக ஏற்படுத்தப்படுவதன் மூலம் பாதுகாப்பற்ற கருக்கலைப்பினால் தாய்க்கும், சேய்க்கும் ஏற்படத்தக்க ஆபத்துக்களைத் தவிர்த்துக்கொள்ளலாம் - என்றார். (க-61)

# பிணைமுறி மோசடிகளுக்கும் ரணிலுக்கும் சம்மந்தமில்லை

## சபை முதல்வர் கிரியெல்ல தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 25
மத்திய வங்கி பிணைமுறி ஊழலுக்கும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் கடுகளவேனும் தொடர்பு இல்லை, பிணைமுறி ஊழல் மோசடியை ஆராய அரசதலைவர் நியமித்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் தலைமை அமைச்சர் குற்றவாளி இல்லையென்றே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்று சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகால இடம்பெயர்ந்தோர் மீள்குடியமர்வு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, வெகுசன ஊடகத்துறை பற்றிய அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சு மீதான விவாதம் இடம்பெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திசாநாயக்க, மத்திய வங்கி பிணைமுறி ஊழல் விவகாரத்துடன் தொடர்புபட்ட "பேர்ப்பச்சுவல் ட்ரசரிஸ்ட்" நிறுவனத்தின் பணிப்பாளராக கடமையாற்றிய ரஞ்சன் உலுகல்ல தற்போது லேக் ஹவுஸ் நிறுவனத்தின் நிதிப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அவரின் நியமனக் கடிதத்தில் அவர் ஏற்கனவே பணிப்பாளராக இருந்த "பேர்ப்பச்சுவல் ட்ரசரிஸ்ட்" குறித்த உண்மைகள் மறைக்கப்பட்டுள்ளன. அரசு மத்திய வங்கி ஊழல் விவகாரத்தில் கையும் மெய்யுமாகப் பிடிபட்டுள்ள நிலையிலும் அச்சமின்றி இன்றும் ஊழல் மோடிகளில் ஈடுபடுகின்றனர் என்பது தெரிகின்றது.

மோசடி பற்றி கோப் குழுவில் ஆராயவிருந்த நிலையில் அந்தக் குழுவின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களை அலரிமாளிகைக்கு வரவழைத்து தலைமைஅமைச்சரும் அப்போதைய மத்திய வங்கி ஆளுநரான அர்ஜுன மகேந்திரனும் சந்தித்து கோப் குழுவில் எவற்றைக்கூறவேண்டும் எவ்வாறு மத்திய வங்கி பிணைமுறி ஊழலை மூடி மறைக்க வேண்டும் என்று ஆலோசனை வழங்கியுள்ளனர். இவ்வாறே இவர்கள் ஊழலை மறைக்க செயற்பட்டுள்ளனர்" என்று குற்றம் சுமத்தினார்.

இதற்குச் சபையில் கருத்து தெரிவித்த சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்ல, மத்திய வங்கி பிணைமுறி ஊழல் குறித்து ஆராய அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன ஆணைக்குழு ஒன்றை அமைத்தார். அந்த ஆணைகுழு விசாரணைகள் நடத்தி அறிக்கையை அரசதலைவருக்குக் கையளித்துள்ளது- என்றார். (த-31)

# வெளிநாட்டு உரங்களால் 15,000 புற்று நோயாளர்கள்

கொழும்பு, மார்ச் 25
வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் உரங்களைப் பயன்படுத்துவதன் விளைவாக, இந்த ஆண்டில் 15 ஆயிரம் புற்று நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர் அதுரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

அடுத்த அரச தலைவர் தேர்தலில், நஞ்சற்ற விவசாயக் கொள்கையை கொண்ட அரசதலைவரே வெற்றி பெறுவார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இந்த ஆண்டுக்கானவரவு - செலவு திட்டத்தின் கமத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்தொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சுமீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது
உர மானியம் என்ற பெயரில் மிகவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் உரங்களே இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. விஷத்தன்மை அதிகம் கொண்ட உரங்களே ஆரம்பத்தில் இறக்குமதி செய்யப்பட்டன.

குறிப்பாக கிளைபோர் செர்ட் கிருமிநாசினி இலங்கையில் இறக்குமதி செய்யப்பட்ட போதும் ,2016 ஆம் ஆண்டு அதனை முழுமையாக நிறுத்தினோம். பின்னர் தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களில் மாத்திரம் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டது.

இது இலங்கையில் பயன்படுத்தப்படும் கிளை போர் செர்ட் கிருமி நாசினியில் 6 வீதம் மட்டுமேயாகும்.

இந்தக் கிருமிநாசினியைத் தடுத்ததால் எமக்கு ஆரோக்கியமான விவசாய நடவடிக்கைகளை முன்னெடுக்க முடிந்தது. இந்த ஆட்சியிலும் உர மானியம் வழங்கப்படும் என்று கூறப்பட்ட போதும் ஆரோக்கியமான உரங்களை கொடுப்பதாக அதுவும் இலங்கையில் உருவாக்கும் இயற்கை உரம் அதிக முக்கியத்துவம்கொடுக்கப்படும் என்று கூறப்பட்ட போதிலும் இன்றுவரை அதற்கான வாய்ப்புகள் இருக்கவில்லை.

அடுத்த அரசதலைவர் தேர்தலில் விசமில்லாத விவசாயத்தை உருவாக்கும் அரசதலைவர் வேட்பாளரை நிறுத்துவோம். அதுவே எமதுஇலக்காகும். இந்தமாதம் 30 ஆம் திகதி விவசாயப் புரட்சிக்கான போராட்டத்தை நாம் செய்யவுள்ளோம். இந்த நிகழ்வுக்கு இலட்சக்கணக்கான பொதுமக்கள் வரவுள்ளனர். ஆகவே அடுத்த அரசதலைவர் தேர்தலில் விஷமற்ற விவசாய கொள்கை கொண்ட அரசதலைவரே அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவார். அதற்கான புரட்சியை நாம் ஆரம்பிப்போம் என்றார். (க-31)

# எதிர்ப்பதற்கோ வரவேற்பதற்கோ ஏதுமற்றதே ஜெனிவாத் தீர்மானம்

## டக்ளஸ் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 25
ஜெனிவாக் கூட்டத் தொடர், எதிர்ப்பதற்கும் வரவேற்பதற்கும்ஏதுமற்ற தீர்மானங்களை நிறைவேற்றி விட்டு, முடிவுற்றுள்ளது. வாடகை வீடு மாறுவதுபோல், 30/1லிருந்து, 40/1க்கு மாறியிருக்கின்றது. 30/1லிருந்த அதே பொருள்களுடன், 40/1க்கு நான்கு புதிய பொருள்கள் மாறியிருக்கின்றன என்றே கூற வேண்டும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் அவர் மேலும் தெரிவித்ததாவது:
மேற்படி யோசனைகளில் தெரிவிக்கப்பட்டிருப்பவை எதுவுமே இந்த நாட்டுக்குள், இந்த நாட்டு அரசால் செய்ய முடியாதவை என்று இல்லை. இன ரீதியிலான பாகுபாடு முற்றாகக் களையப்பட்டால், அந்த யோசனைகளை நி[illegible]ந்தனைகள் என்ற பெயரி[illegible] அன்றி, இந்த நாடு, போ[illegible]க்குப் பின்னரான காலகட்[illegible]த்தில் சுயமாகவே செய்ய வேண்டிய கடப்பாடு என்[illegible] வகையில் அவற்றை செ[illegible]யற்படுத்த முடியும் - என்[illegible]றார். (த)

# வில்பத்து நில ஆக்கிரமிப்பு கடுமையான வாக்குவாதம்

கொழும்பு, மார்ச் 25
வில்பத்து வனப்பாதுகாப்பு பகுதி நில ஆக்கிரமிப்பு விவகாரம் குறித்து அமைச்சர் ரிஷாத் பதியுதீனுடன் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

காடழிப்புடன் நானோ எனது முஸ்லிம் மக்களோ தொடர்பில்லாதவர்கள். காடுகளை கைப்பற்றியுள்ளேன் என ஆதாரபூர்வமாக நிருபிக்க முடியுமானால் தண்டனையைப் பெற்றுக் கொள்ள நான் தயாரென அமைச்சர் ரிஷாத் சபையில் தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற அமர்வுகளின் போது 27/2 இன் கீழ் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க, புல்மோட்டை கனியமணல் கூட்டுத்தாபனத்தை பன்னாட்டு நிறுவனம் ஒன்றுக்கு விற்க நடவடிக்கை எடுப்பதாகவும், வில்பத்து வனப்பிரதேசத்தை அழித்து வருவதாகவும் முதன்மையான இரண்டு குற்றச்சாட்டுக்கள் குறித்து சபையில் கேள்வி எழுப்பினார்.

இதன்போது, கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்ட காலம் இடம்பெயர்ந்துள்ளவர்களின் மீள்குடியமர்வு, கூட்டுறவு அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் மீது இரண்டு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

இதில் கனியமணல் விற்பனை கடந்த காலங்களில் ஊடகங்களின் மூலமாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. அரச வளங்களை தனியார்நிறுவனம் ஒன்றுக்கு விற்க அமைச்சரவையில் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா? அல்லது வேறு ஏதாவது அரச பேச்சு முன்னெடுக்கப்பட்டுள்ளதா? அதேபோல் வனஜீவராசிகள் திணைக்களத்துக்குச் சொந்தமான வில்பத்து காட்டுப் பகுதியில் 2 ஆயிரத்து 800 ஏக்கர் நிலப்பரப்பை விடுவிக்க கடந்த ஆட்சியில் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. எமது நாட்டின் மிகவும் அவசியமான ஒரு பகுதியே இந்தக் காட்டுப் பகுதியில் விடுவிக்கப்பட்டது.

இன்று மீண்டும் அதே பிரச்சினை எழுந்துள்ளது. ஆகவே அரசு இது குறித்து தெளிவுபடுத்த வேண்டும் என்று சபையில் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதில் தெரிவித்த அமைச்சர் ரிஷாத் பதியுதீன்:
புல்மோட்டை கனியமணல் கூட்டுத்தாபனத்தை நான் பொறுப்பேற்கும்போது 300 மில்லியன் ரூபாவே நிலையான வைப்பில் இருந்தது. இன்று 3 ஆயிரம் மில்லியன் ரூபாவாக அதனை அதிகரித்துள்ளோம். அதேபோல் இந்த நிறுவனம் ஒரு போதும் தனியார் நிறுவனங்களுக்கு விற்க நடவடிக்கை எடுக்கவில்லை. அமைச்சரவையில் கூட அது குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனினும் மணல் சார் சில உற்பத்திகளுக்கு அந்தப் பகுதியில் இடம் மாத்திரம் ஒதுக்கித்தரப்படும், ஆர்வமுள்ள நிறுவனங்கள் வரலாம் என அமைச்சரவை அங்கீகாரத்துடன் அறிவித்தல் விடுத்தோம்.

இதில் 12 பன்னாட்டு நிறுவனங்கள் ஆர்வம் காட்டின. இறுதியாக இரண்டு நிறுவனங்களே அங்கீகரிக்கப்பட்டன.

ஆனால் இன்றுவரை எந்த இறுதித் தீர்மானமும் எடுக்கவில்லை. விலை மனுக்கோரலுக்கு விடுத்தே இறுதித் தீர்மானம் எடுப்போம். இது குறித்துச் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை - என்றார். (க)

# பிரச்சினைகளை எதிர்கொள்ளும் அம்பாறை மாவட்ட மீனவர்கள்

அம்பாறை,மார்ச் 25
அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. அவர்களின் பிரச்சினையை விரைவில் தீர்த்துவைக்க ஒலுவில் துறைமுக பிரச்சினையை தீர்த்து வைத்து விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இந்த வருடத்துக்கான வரவு-செலவு திட்டத்தின் கமத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சு மீதான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது :
அம்பாறை மாவட்ட ஆள்கடலில் கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு தொலைத்தொடர்பு பரிவர்த்தனை (வாகேக்கி டோக்கி) உபகரணங்களை சலுகை அடிப்படையில் பெற்றுக் கொள்ள முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். 300 க்கும் மேற்பட்ட மீனவர்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்களின் தேவையை விரைவாக நிறைவேற்றிக் கொடுக்க அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்துடன் அந்தப் பிரதேசத்தில் மீனவர்களின் காப்புறுதி தொடர்பாகவும் பிரச்சினை இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

செலிங்கோ நிறுவனத்தில் காப்புறுதி செய்யுமாறு மீனவ அதிகாரிகள் வற்புறுத்தி வந்தாலும் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு அதனூடாக சரிவர வந்து சேருவதில்லை என்ற குறைபாடும் இருந்து வருகின்றது.

அண்மையில் மரணித்த ஒருவருக்கு ஒரு மில்லியன் ரூபா வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தபோதும், ஆள் கடலுக்கு மீன் பிடிக்கச்சென்று மரணித்த மீனவர் ஒருவருக்கு வெறு[illegible] இரண்டு லட்சம் ரூபா மாத்திரம் வ[illegible]ழங்கப்பட்டிருக்கின்றது. அவயவயங்களை இழந்தவர்களுக்கு வழ[illegible]கப்படுவதாக தெரிவிக்கப்பட்டிருக்கு[illegible] காப்புறுதியும் உரிய வகையில் [illegible]வழங்கப்படுவதில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் அம்பாறை மாவட்டத்தில் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலுக்குச் செல்லும் மீனவர்களின் வள்ளங்களை ஒலுவில் துறை முகத்தில் தரித்து வைப்பது தொடர்பில் நீண்டகாலமாக பிரச்சினை ஏற்பட்டு வருகின்றது.

இதுதொடர்பாக கண்டறிய தலைமை அமைச்சரையும் அங்கு அழைத்துச் சென்று காட்டினோம். இதுதொடர்பா இரண்டு தினங்களுக்கு முன்னர் அந்த பிரதேசவாசிகளுடன் கலந்துரையாடி அமைச்சர் சாகல ரத்நாயக்கவுடனும் கலந்துரையாடினேன். இதன்போது ஒலுவில் துறைமுகத்தை கடற்றொழில் துறைக் கூட்டுத்தாபனத்துக்கு ஒப்படைப்பதற்கான இணக்கப்பாட்டுக்கு துறைமுக அதிகாரசபை வந்திருப்பதாக தெரியவந்தது என்று மேலும் தெரிவித்தார். (க-31)

# ஐ.நா. பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாவிடின் மோசமான விளைவை இலங்கை அரசு சந்திக்கும்!

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 25

ஐ.நா. தீர்மானத்தின் பரிந்துரைகளை காலவரையறைக்குள் இலங்கை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். இதை அரசு செய்யாமல் இருந்தால் அதன் விளைவுகள் வேறு விதமாக அதாவது மிகவும் பாரதூரமாக இருக்கும். இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கையின் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையில் 40/1 என்ற புதிய தீர்மானம் இலங்கை அரசின் இணை அனுசரணையுடன் வாக்கெடுப்பின்றி கடந்த வியாழக்கிழமை நிறைவேற்றப்பட்டது. இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்றிரவு 'உதயன்' பத்திரிகையிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மூன்றாவது தடவையாக இலங்கை அரசின் இணை அனுசரணையுடன் இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பொறுப்புக்கூறல், நீதி நியாயம், காணாமல்போனோர் விடயம், மீள் நிகழாமை, நல்லிணக்கம் மற்றும் அதிகாரம் சம்பந்தமாக எல்லாக் கருமங்களும் முதல் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமைக்கு அமைவாக நிறைவேற்றப்பட வேண்டும் என்ற அடிப்படையில் மூன்றாவது தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தப் புதிய தீர்மானத்தையும் நாம் வரவேற்கின்றோம். இதனை முன்னின்று நிறைவேற்றிய பிரிட்டன் தலைமையிலான உலக நாடுகளுக்கும் நாம் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இந்தத் தீர்மானத்தை இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும். அதில் உள்ள பரிந்துரைகளை காலவரையறைக்குள் நடைமுறைப்படுத்த வேண்டும். இதை அரசு செய்யாமல் இருந்தால் அதன் விளைவுகள் வேறு விதமாக அதாவது மிகவும் பாரதூரமாக இருக்கும். ஐ.நாவின் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டிய கட்டாயத் தேவை இலங்கை அரசுக்கு இருக்கின்றது - என்றார். (ஒ.22)

# புலிவேசம் போட்டு ஆடுகிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

## மகிந்த அணி சீற்றம்



கொழும்பு, மார்ச் 25

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் ஆட்டத்துக்கு எல்லாம் எம்மால் ஆடவே முடியாது. அவர்கள் புலிவேசம் போட்டு ஆடுகின்றார்கள் என்று தெரிவித்த மகிந்த அணியினர், ஐ.நா. தீர்மானத்தை இலங்கை அரசு குப்பையில் தூக்கிவீச வேண்டும். அதன் பரிந்துரைகள் அனைத்தையும் அடியோடு நிராகரித்து உலக நாடுகளுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பவேண்டும் என்று கூறியுள்ளனர்.

மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச இது தொடர்பில் தெரிவித்ததாவது:

ஐ.நாவின் புதிய தீர்மானத்துக்கு இலங்கை அரச குழு இணை அனுசரணை வழங்கியமை மகா தவறு. நாட்டின் அரச தலைவர் சுமந்திரன் அல்லர். மைத்திரிபால சிறிசேனவே அரச தலைவர். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் தான்தான் நாட்டின் அரச தலைவர் என்ற ரீதியில் ஜெனிவாவில் செயற்பட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் ஆட்டத்துக்கு எல்லாம் எம்மால் ஆடவே முடியாது. அவர்கள் புலிவேசம் போட்டு ஆடுகின்றார்கள். ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டது இலங்கைக்கு எதிரான போர்க் குற்றத் தீர்மானமே ஆகும். இதனை வெறும் தீர்மானமாக நாம் நினைக்கக்கூடாது. இந்தத் தீர்மானத்தை குப்பையில் தூக்கிவீச வேண்டும். குருதி சிந்தி நாட்டை மீட்டெடுத்த எமது இராணுவத்தை எவரும் தண்டிக்கவே முடியாது என்றார். (ஒ.5.22)

# வவுனியா பிரதேச இந்து ஒன்றியம் உருவாக்கம்

வவுனியா,மார்ச் 25

வவுனியா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கோயில்கள் மற்றும் இந்து சமய நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டு வவுனியா பிரதேச இந்துக் கோயில் ஒன்றியம் நேற்று உருவாக்கப்பட்டுள்ளது.

வவுனியா பிரதேசசெயலக இந்துக் கலாசார அபிவிருத்தி அலுவலர் ச.குகனேஸ்வரசர்மா தலைமையில் குறித்த நிகழ்வு நடைபெற்றது.

இந்துக்கோயில்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மற்றும் மதமாற்றம் அறநெறி வகுப்புகளின் செயற்பாடுகள், திருக்கேதீச்சர ஆலயவளைவு உடைத்தவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்காமை என பலவிடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இதனைத்தொடர்ந்து வவுனியா பிரதேச செயலக இந்துக் கோயில்களின் ஒன்றியத்துக்கான நிர்வாக சபையினர் தெரிவு செய்யப்பட்டனர். (க-110)



# வடகிழக்கின் முன்னேற்றதுக்காக புதிய அரசமைப்பு என்பது பொய்

## கோத்தா தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 25

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களின் முன்னேற்றத்துக்காகவே புதிய அரசமைப்பு உருவாக்கப்படுவதாகக் கூறப்படுவது பொய். இவ்வாறு முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்தார்.

கொலன்னாவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அரசின் மீதான பற்று குறைவடைந்துள்ளமையின் காரணமாக அனைத்துத் தரப்பினரும் தான் தோன்றித்தனமாகச் செயற்படுகின்றனர். ஜெனிவா விவகாரத்தில் அரசின் தீர்மானம் ஒரு தனிநபருடையதாகும்.

அரச தலைவருக்கும், தலைமை அமைச்சருக்கும் இடையில் போட்டித் தன்மையான உறவுநிலை காணப்படுகின்றது. இவ்வாறான நிலமைகள் ஒருபோதும் சிறந்த நிர்வாகத்தை ஏற்படுத்தாது. பலவீனமான அரசு பலவீனமான நாட்டை உருவாக்கும் நடைமுறையில் இந்த நிலைகள் காணப்படுகின்றன.

வடக்கு மற்றும் கிழக்குக்கு இந்த அரசு எவ்வித சுய அபிவிருத்திகளையும் முன்னெடுக்கவில்லை. 30 ஆண்டு காலப் பயங்கரவாத போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதை தொடர்ந்து 13 ஆயிரம் விடுதலை புலி போராளிகளுக்கு மறுவாழ்வு வழங்கப்பட்டு அவர்கள் சமூக வாழ்க்கைக்கு கொண்டு வரப்பட்டார்கள். கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டு மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டதுடனர், இம்மக்களின் தொழிற்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விதத்தில் சுய கைத்தொழில்கள் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன - என்றார். (ஒ.5)

# ஹெரோயினுடன் ஈரானிய கப்பல் நடுக் கடலில் மடக்கிப் பிடிப்பு

கொழும்பு, மார்ச் 25

ஹெரோய்ன் ஏற்றப்பட்ட ஈரானிய கப்பலை இலங்கையின் பாதுகாப்புத் தரப்பினர், தெற்குக் கடற்பரப்பில் வைத்துக் கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினரும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தினரும் கடற்படையினருடன் கூட்டாக மேற்கொண்ட நடவடிக்கையின்போதே இந்தக் கப்பல் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஹெரோய்னுடன் ஈரானிய குடிமக்கள் 9 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கப்பலில் சுமார் 600 கிலோகிராம் ஹெரோய்ன் இருந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் கப்பலில் இருந்தவர்கள் ஹெரோய்னின் ஒரு பகுதியைக் கடலில் எறிந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ.5)

# ஐ.நாவின் பொறிமுறையை விட்டால் வேறு வழியில்லை

## சாந்தி சிறிஸ்கந்தராசா எம்.பி தெரிவிப்பு

வவுனியா, மார்ச் 25

ஐ.நாவின் தற்போதைய பொறிமுறையை விட்டு இலங்கை வெளியில் வந்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தீர்வு இல்லாது போய்விடும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக்குக் கால நீடிப்பு வழங்குவது தொடர்பான பல்வேறு விதமான கருத்துக்கள் ஊடுருவிக் கொண்டிருக்கின்றன. அது கால அவகாசம் இல்லை. இலங்கையை நிலைமாறுகால நீதியின் கீழே கண்காணிப்பதற்கான ஒரு காலமாகத் தான் அதனை எடுத்துக் கொள்ள வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மையாக இருப்பதால் தான் மகிந்த ராஜபக்ச அணியினர் இதிலிருந்து வெளியில் வருவதற்குக் கடும் பிரயத்தனம் எடுக்கின்றார்கள். கால நீடிப்புக் காலத்தில் இருந்து இலங்கை வெளியில் வந்துவிட்டால் போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல் என்பவற்றுக்குப் பாதிக்கப்பட்ட மக்கள் ஒரு நியாயத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது போய்விடும் - என்றார். (த110)

# மகிந்த - சஜித் கோட்டையில் பிறந்தநாள் கொண்டாடிய ரணில்

கொழும்பு, மார்ச் 25

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் 70 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு நேற்று 'மெகா' அபிவிருத்தி திட்டங்கள் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

தலைமை அமைச்சரின் ஏற்றுமதி பொருளாதாரத்தை இலக்காகக் கொண்ட செயற்திட்டத்தின் கீழ் இதற்குரிய ஆரம்பக்கட்ட பணிகள் அம்பாந்தோட்டையில் முன்னெடுக்கப்பட்டன. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், அமைச்சர்கள், அதிகாரிகள் எனப் பல பலதரப்பினரும் கலந்துகொண்டனர்.

இதன்போது உரையாற்றிய தலைமை அமைச்சர், அம்பாந்தோட்டை மாவட்டத்தை அபிவிருத்தி வலயமாக மாற்றியுள்ளோம். எதிர்காலத்தில் இந்தியாவுடன் இணைந்து மத்தள வானூர்தி நிலையத்தையும் கட்டியெழுப்புவோம்- என்றார்.

அதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உட்பட மேலும் பல அரசியல் தலைவர்களும் தலைமை அமைச்சருக்கு தொலைபேசி ஊடாக வாழ்த்துகளைத் தெரிவித்தனர். (ஒ.5)

## வத்தளையில் தீ விபத்து

### வத்தளை - கொழும்பு பாதையும் மூடப்பட்டது

கொழும்பு, மார்ச் 25

வத்தளையிலுள்ள புடவைக்கடை ஒன்றில் ஏற்பட்ட தீ அந்தக் கடையின் தொடர்மாடியில் பரவியுள்ளது. அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நடவடிக்கையில் கடற்படையினரும் தீயணைப்புப் படையினரும் போராடி வருகின்றனர். இந்தச் சம்பவம் நேற்று இரவு 9.30 மணியளவில் இடம்பெற்றது. தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. கொழும்பு வத்தளை முதன்மை வீதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக வத்தளைப் பொலிஸார் அறிவித்துள்ளனர். நேற்று இரவு 11 மணிவரை தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படவில்லை. (ஓ.5)

## வடக்கில்

# மாற்று அரசியலுக்கு தலைமைதாங்க தயார் என்கிறார் கேணல் ரத்னபிரிய

கொழும்பு, மார்ச் 25

வடக்கில் மாற்று அரசியலுக்கு தலைமைத்துவம் வழங்குவதற்கு தயாராகவே இருக்கின்றேன் என்று முல்லைத்தீவு, விசுவமடு சிவில் பாதுகாப்பு படைப் பிரிவுக்கு முன்னர் பொறுப்பாக இருந்த லெப்டினென்ட் கேர்ணல் ரத்னபிரிய பந்து நேற்றுத் தெரிவித்தார்.

சிங்கள தொலைக்காட்சி சேவையான தெரணவுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இந்த அறிவிப்பை விடுத்தார்.



வசுவமடு சிவில் பாதுகாப்பு படைப்பிரிவுக்கு பொறுப்பாக இருந்த ரத்னபிரிய பந்துவுக்கு 2018ஆம் ஆண்டு ஜனவரியில் இடமாற்றம் வழங்கப்பட்டது. இதற்கு முல்லைத்தீவு பகுதி மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டதுடன், தாம் அவரை கடவுளாகவே கருதுவதாகவும் குறிப்பிட்டனர். இடமாற்றம் உறுதிபடுத்தப்பட்டது. இதையடுத்து மக்கள் கண்ணீருடன் அவருக்கு விடைகொடுத்தனர்.

இந்நிலையில் அதிருப்தி காரணமாக பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னரே இராணுவ சேவையிலிருந்து ரத்னபிரிய பந்து ஓய்வுபெற்றுள்ளார். இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அரசியலில், வடக்கு அரசியல் களத்தில் குதிப்பதற்கு விருப்பம் வெளியிட்டுள்ளார். (ஓ.5)

## கலப்பு...

வெளிநாட்டு நீதிபதிகளையும் உள்ளடக்கிய கலப்பு விசாரணைப் பொறிமுறையை ஏற்பதற்கு இலங்கை அரசு ஜெனிவாவில் மூன்றாவது முறையும் இணக்கம் வெளியிட்டுள்ளது. கலப்பு விசாரணைப் பொறிமுறையை இலங்கை அரசு அமைக்கத் தவறினால், பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் முன் செல்ல வேண்டிய நிலைமை ஏற்படும் என்று நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்திருந்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.

இது தொடர்பில் அரச தலைவரின் நிலைப்பாடு என்ன என்று வெளிநாட்டுச் செய்திச் சேவை ஒன்று கேள்வி எழுப்பியது.

அதற்குப் பதிலளித்த அரச தலைவர்,

இலங்கையை பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்த எவருக்கும் அதிகாரம் இல்லை. நாட்டின் அரசமைப்பை மீறி உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ எவரும் செயற்பட முடியாது.

இலங்கையின் நிலைப்பாட்டை நாட்டின் அரச தலைவரும் அரச குழுவினருமே தீர்மானிப்பர். இதை மீறி எவரும் செயற்பட முடியாது. நாட்டின் இறையாண்மையைப் பாதுகாத்தும் அரசமைப்பைக் கருத்தில் கொண்டும் நாம் செயற்படுகின்றோம். இதை மீறி நாம் ஒருபோதும் நடக்கமாட்டோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்துக்கள் நாட்டின் அரசமைப்பை மீறுகின்ற வகையில் உள்ளன. அவர்கள் தமிழ் மக்களின் மனங்களையும் புலம்பெயர் அமைப்புகளின் மனங்களையும் வெல்லும் வகையில் கருத்துக்களை வெளியிடுகின்றார்கள். ஆனால், நாம் நாட்டின் நலனையும் மூவின மக்களின் ஒற்றுமையையும் கருத்தில்கொண்டுதான் கருத்துக்களை வெளியிடுகின்றோம் - என்றார். (ஓ.5.22)

## எலிக்காய்ச்சல்...

பாதிக்கப்பட்ட விலங்குகளின் சிறுநீர் மூலமாகவே லேப்டோஸ்பைரோசிஸ் எனப்படும் எலிக்காய்ச்சல் நோய் பரவுகிறது. இந்த நோய் தொற்று நோயாகும். ஆரோக்கியமான மனிதர்கள் மற்றும் விலங்குகளுக்கு இது பரவும். இலங்கையில் ஏனைய மாவட்டங்களில் இந்த நோயின் தாக்கம் பரவலாகக் காணப்பட்டாலும் வடக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் சற்றுக் குறைவான தாகவே காணப்படுகிறது.

2017ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்தில் 108 பேர் பாதிக்கப்பட்டிருந்தனர். 2018ஆம் ஆண்டு 102 பேர் பாதிக்கப்பட்டிருந்தனர்.

காலாண்டின் நேற்று முன்தினம் வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் 19பேரும், வவுனியாவில் 26பேரும், முல்லைத்தீவில் 9பேரும், கிளிநொச்சியில் 13பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் கடந்த 2018ஆம் ஆண்டின் காலாண்டுடன் ஒப்பிடும் போது நடப்பாண்டின் காலாண்டின் பாதிப்பு அதிகரித்தே காணப்படுகிறது. (ஓ.5.21)

## இந்திய மீனவ...

டில தமிழக மீனவர்கள் 11பேர் நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் காங்கேசன்துறை கடற்படைத்தளத்துக்கு கொண்டுவரப்பட்டு விசாரணைகளின் பின்னர் யாழ்ப்பாணம் நீரியல்வளத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டனர். இராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற 16 மீனவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். மீனவர்கள் பயணித்த இரண்டு விசைபடகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட இரண்டு மாணவர்கள் உள்ளிட்ட எட்டு மீனவர்கள் தொடர்ந்தும் விளக்கமறியலில் உள்ள நிலையிலேயே நேற்று 11பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஓ.5.21)

## கசிப்பு...

பகுதியில் அதிகரித்து வரும் கசிப்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்த பொலிஸார் புது முயற்சியை மேற்கொண்டுள்ளனர். கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு நீதிமன்றால் தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு, மாற்றுத் தொழில் வழங்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் நேற்று இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

கசிப்பு உற்பதியைக் கைவிட்டு. விவசாய நடவடிக்கையில் ஈடுபட தொழில் உபகரணங்கள் வழங்குவது தொடர்பிலும் மாற்றுத் தொழில்களைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது. மாற்றுத் தொழில் நடவடிக்கையிலேயே ஈடுபட வேண்டும் என்றும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சட்டவிரோத தொழிலைச் செய்யக் கூடாது என்றும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிவுறுத்தியுள்ளார்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த ஆண்டு கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தியவர்களிடமிருந்து 54 லட்சத்து 28 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு முதல் மூன்று மாதங்களில் 50 கசிப்பு வழக்குகள் பதிவாகியுள்ளதுடன், 8 லட்சத்து 41 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளது. (ஓ.5.ரி3)

## தமிழ்க்...

வழங்கி, இந்த அரசு பதவியில் நீடிப்பதற்கு ஒத்துழைக்க முடியுமா என்பதே இப்போது எல்லோருக்கும் எழுந்துள்ள கேள்வி.

ரணில் விக்கிரமசிங்க தனது சுயரூபத்தை வெளிக்காட்டிவிட்டார். அவருக்கு நன்றி கூறுகின்றேன். இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பக்கம் பந்து இருக்கின்றது. கூட்டமைப்பு என்ன செய்யப்போகின்றது. கூட்டமைப்பில் இருக்கின்ற ஒவ்வொரு கட்சிகளும் சுயமாக முடிவெடுக்கவேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோவின் பொதுச் செயலர் ந.சிறீகாந்தா தெரிவித்தார்.

'ஐ.நா. தீர்மானத்துக்கு அனுசரணை வழங்கியதற்காக அதன் பரிந்துரைகளை முழுமையாக ஏற்பதாக அர்த்தமில்லை. வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றுக்கு ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். இலங்கையை பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றில் நிறுத்த முடியாது' இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருப்பது தொடர்பில், கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பில் இலங்கை அரசு தொடர்ந்தும் மண்ணைத் தூவுவதில் உறுதியாக உள்ளது என்பதையே ரணிலின் கருத்து வெளிப்படுத்துகின்றது. அவரின் கருத்து ஆச்சரியத்துக்கு உரியதல்ல. அவருக்கு முன்னர் ஆட்சியிலிருந்த சிங்களத் தலைவர்கள் போன்று அவரும் நடந்து கொள்ள முற்படுகின்றார்.

அரசைக் காப்பாற்றவும், ஆட்சியை நெறிப்படுத்தவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவைப் புதிய அரசமைப்பின் பெயரால் பெற்றுக் கொள்வதில் வெற்றி கொண்ட அவர், நாட்டின் அரசமைப்புக்கு தற்போது மதிப்பளிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்குஅறிவுரை கூறியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க தலைமை தாங்கும் அரசு தொடர்பில், கூட்டமைப்பில் யாருக்காவது மன மயக்கமோ, மதி மயக்கமோ இருந்திருந்தால் அது இனிமேலும் நீடிக்கப்பட முடியாது. அது கலைக்கப்படவேண்டும்.

உலக அரங்கில் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அரசைக் கடுமையாக விமர்சித்துக் கொண்டு உள்நாட்டில் அந்த அரசுடன் ஒட்டி உறவாடுவது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. அது நேர்மையான நடவடிக்கையும் இல்லை. ஒரு கையால் ரணில் அரசை அடித்துக் கொண்டு மறுகையால் அரவணைத்துக் கொண்டிருகின்ற அரசியலுக்கு விரைவில் முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்.

தமிழ் மக்கள் இறுதிப் போரில் நடந்தவை தொடர்பிலேயே விசாரணை கோருகின்றனர். அதையும் சவப்பெட்டிக்குள் போட்டு ஆணி அடித்து அதைக்குழியில் தோண்டிப் புதைக்கவேண்டும் என்ற அடிப்படையில் ரணில் விக்கிரமசிங்க செயற்படுகின்றார். பழைய நினைவுகளைக் கிளறவேண்டாம் என்கிறார். அது வன்முறைக்கு வழிவகுக்கும் என்று எச்சரித்துள்ளார். இதுவும் ஒரு வித வன்முறைதான்.

இந்தச் சூழலில் கூட்டமைப்பு என்ன செய்யப் போகின்றது. தமிழ்த் திரைப்படங்களில் கதாநாயகனாகவும், வில்லனாகவும் புகழ்பெற்ற மறைந்த எம்.ஜி.ஆர், நம்பியார் பாணியில் இனியும் நாடகமாடிக் கொண்டிருக்க முடியாது - என்றார். (ஓ.5)

## தமிழர்களை...

'போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் வலி எமக்குத் தெரியும். அவர்களின் மனதை நோகடிக்க நாம் விரும்ப வில்லை. பழையதை மறக்கவே அவர்கள் விரும்புகிறார்கள். இனியும் ஒரு போரை அவர்கள் விரும்பவில்லை.

ஆனால், தமிழ் அரசியல்வாதிகள் அவர்களை வைத்து தமது அரசியல் நடத்துகின்றார்கள். இதைத் தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். தமிழ் மக்கள் நிம்மதியாக சுதந்திரமாக வாழ வேண்டும். இதுவே எமது விருப்பம். அதற்கான வசதிகளை தமிழ் மக்களுக்கு நாம் ஏற்படுத்திக் கொடுத்து வருகின்றோம்' என்றார். (ஓ.5.22)

## இந்திய...

மீனவர்களின் படகுகள், மற்றும் மீன்பிடிச் சாதனங்களைச்சேதப்படுத்தியதுடன், இலங்கைக் கடற்படையினர் தங்களை அங்கிருந்து விரட்டியடித்துள்ளனர் என்று தமிழக மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இராமேஸ்வரத்திலிருந்து நேற்றுமுன்தினம் 576 விசைப்படகுகள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அந்தப் பகுதியில் சுற்றுக் காவல் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கடற்படையினர் நூற்றுக்கும் மேற்பட்ட படகுகளிலிருந்த பல லட்சம் மதிப்பிலான மீன்பிடிச் சாதனங்களை சேதப்படுத்தி விரட்டியடித்தனர் என்று தமிழக மீனவர்கள் குற்றம் சுமத்தினர்.

இலங்கை கடற்படையினரின் அத்துமீறலால் படகு ஒன்றிற்கு 30ஆயிரம் ரூபா முதல் ஒரு லட்சம் ரூபா வரை இழப்பு ஏற்பட்டுள்ளது என்று மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (ஓ.5.21)

## சுழற்சி...

11.30 மணி முதல் 2.30 மணி வரை, 2.30 மணி முதல் 5.30 மணி வரை, 6.30 மணி முதல் 7.30 மணி வரை, 7.30 மணி முதல் 8.30 மணி வரை மற்றும் 8.30 மணி முதல் 9.30 மணி வரை என்ற அடிப்படையில் மின்சாரம் துண்டிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஓ.5)

## பங்குத்...

மன்னார், மார்ச் 25

ஈழத்தில் பாடல் பெற்ற திருத்தலமான திருக்கேதீச்சர ஆலயத்தின் அலங்கார வளைவை உடைத்த விவகாரம் தொடர்பில் பங்குத் தந்தை ஒருவர் உள்ளிட்ட 10 பேர், சம்பவம் இடம்பெற்று 21நாள்களின் பின்னர் நேற்றுச் சரணடைந்தனர். அவர்கள் மன்னார் பதில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டு நேற்றைய தினமே பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

சிவராத்திரிக்கு முதல் நாள், மார்ச் 3ஆம் திகதி திருக்கேதீச்சர ஆலய வளைவு கிறிஸ்தவ மக்களால் உடைக்கப்பட்டது. இந்தச் சம்பவம் மன்னாரில் பெரும் மதப்பதற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. மன்னார் நீதிமன்றுக்கு உடனடியாக விவகாரம் எடுத்துச் செல்லப்பட்டது. நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக 4 நாள்கள் தற்காலிகமாக அலங்கார வளைவு அதேயிடத்தில் மீள நிறுவப்பட்டது. அலங்கார வளைவை உடைத்தவர்களை கைது செய்யுமாறு மன்னார் நீதிவான் ரி.சரவணராஜா பொலிஸாருக்குப் கடந்த 8ஆம் திகதி வழக்குத் தவணையின் போது பணித்திருந்தார்.

பொலிஸார், சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைது செய்யப் பின்னடிப்பதற்கு எதிராக பல்வேறு இந்து அமைப்புக்களும் கண்டன அறிக்கைகளை வெளியிட்டிருந்தன.

இந்த நிலையில் விடுமுறைதினமான நேற்று ஞாயிற்றுக்கிழமை, மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களான, பங்குத் தந்தை உள்ளிட்ட மூன்று பெண்கள் மற்றும் ஆறு ஆண்கள் மன்னார் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர். பொலிஸார் அவர்களிடம் வாக்குமூலங்களைப் பெற்றுக் கொண்டனர்.

உடனேயே பதில் நீதிவான் இ.கயஸ் பெல்டானோ முன்னிலையில் முற்படுத்தினர். பங்குத் தந்தையை சொந்தப் பிணையிலும், ஏனைய 9 பேரையும் ஒரு லட்சம் ரூபா ஆள் பிணையிலும் செல்வதற்கு பதில் நீதிவான் அனுமதித்தார். வழக்கு எதிர்வரும் 29ஆம் திகதி வரையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ஓ.5.56.213)

## கிறைஸ்ட்சேர்ச் படுகொலை எதிரொலி

# தானியங்கித் துப்பாக்கிகளுக்கு தடை விதித்தது நியூசிலாந்து!

கிறைஸ்ட்சேர்ச், மார்ச் 25

கிறைஸ்ட்சேர்ச் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து தானியங்கித் துப்பாக்கிகளுக்குத் தடை விதித்து நடவடிக்கை எடுத்தது நியூசிலாந்து.



நியூசிலாந்தில் கிறைஸ்ட்சைர்ச் நகரில் உள்ள அல் நூர் மசூதி மற்றும் லின்வுடன் பகுதியில் உள்ள மசூதிகளில் கடந்த வாரம் வெள்ளிக்கிழமை முஸ்லிம்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அங்கு வந்த மர்ம நபர்கள் தாங்கள் வைத்திருந்த துப்பாக்கியால் கண்மூடித்தனமாக பலரைச் சுட்டுக் கொன்றனர். இதில் 50 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 7 பேர் இந்தியர்கள். இந்தத் துப்பாக்கிச் சூட்டில் முக்கியக் குற்றவாளியான பிரெண்டன் டாரன்ட் கைது செய்யப்பட்டுவிசாரணைநடந்துவருகிறது. உலகையே இந்தச் சம்பவம் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இதையடுத்து தானியங்கித் துப்பாக்கிகளைத் தடை செய்து உத்தரவிட்டது நியூசிலாந்து அரசு. (ம)



## தெற்கு ஆபிரிக்க மக்களுக்கு உதவுவதற்கு முன்வாருங்கள்

### பன்னாட்டுச் சமூகத்தை அழைக்கிறார் பாப்பரசர்

உரோம், மார்ச் 25

தெற்கு ஆப்பிரிக்க நாடுகளில் 'இடாய்' புயல் தாக்கியதால் ஏற்பட்ட வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவும் ஆறுதலும் நல்கி உதவுமாறு பாப்பரசர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து வத்திக்கான் நகரின் செயின்ட் பீட்டர் சதுக்கத்தில் ஆயிரக்கணக்கனோர் மத்தியில் அவர் தெரிவித்ததாவது 'மொஸாம்பிக், சிம்பாப்வே மற்றும் மலாவி நாடுகளின் பல்வேறு பிராந்தியங்களில் மாபெரும் வெள்ளம் புகுந்து மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளமை மிகுந்த வேதனையைத் தந்துள்ளது. அந்த அன்பான மக்களுக்கு என் வேதனையையும் என் ஆறுதலையும் வெளிப்படுத்துகிறேன். வெள்ளத்தால் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை கடவுளின் கருணைக்காக ஒப்படைக்கிறேன். இந்தப் பேரழிவால் பாதிக்கப்பட்டவர்களுக்காக நான் ஆறுதலையும் ஆதரவையும் அளிக்கிறேன். வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவும் ஆறுதலும் நல்கி அனைவரும் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும்' - என்றார். தெற்கு ஆப்பிரிக்க நாடுகளில் இடாய் புயலின் பயங்கர தாக்குதலுக்கு கடந்த வாரம் சுமார் 700 பேர் உயிரிழந்துள்ளனர். மீட்புப் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. (ம)

## இரசாயன ஆலை வெடி விபத்தில் சாவு எண்ணிக்கை 64ஆக அதிகரிப்பு

பீஜிங், மார்ச் 25

சீனாவில் இரசாயன உரங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில் சாவு எண்ணிக்கை 64ஆக உயர்ந்துள்ளது. மேலும் சிலர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சீனாவின் ஜியாங்சு மாகாணம் யான்செங் நகரில் இரசாயன ஆலை உள்ளது. இங்கு கடந்த வெள்ளிக்கிழமை மதியம் பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது. இதனால் ஏற்பட்ட தீ, ஆலை முழுவதையும் சூழ்ந்துகொண்டது.


ஆலையில் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் அனைவரும் உள்ளே சிக்கிக்கொண்டனர்.

இதையடுத்து, 150க்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்களில் சுமார் ஆயிரம் வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். அவர்கள் பல மணி நேரம் போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

ஆனால் அதற்குள் பலர் தீயில் கருகி பலியாகினர். இந்த கோரவிபத்தில் 6 பேர் இறந்தனர் என முதற்கட்ட தகவல்கள் வெளியாகின. இரண்டாம் கட்டத் தகவலில் உயிரிழப்பு 47 என்று குறிப்பிடப்பட்டது. நேற்று வெளியான மூன்றாம் கட்டத் தகவலில் சாவு எண்ணிக்கை 64 என்று குறிப்பிடப்பட்டது. (ம)



## இடாய் புயல்



ஆபிரிக்காவில் அண்மையில் வீசிய இடாய் புயல் அங்கு பலத்த சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. மீட்புப் பணிகள் தொடர்ந்து வருகின்றன. அது தொடர்பான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான 'ரொயிட்டர்ஸ்' வெளியிட்டது. (ம)

## பாகிஸ்தான் தேசிய தினத்துக்கு வாழ்த்துத் தெரிவித்தார் மோடி!

இஸ்லாமபாத், மார்ச் 25



தேசிய தினம் கொண்டாடும் பாகிஸ்தான் மக்களுக்கு இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார்.

லாகூர் ஒப்பந்தத்தை நினைவுகூரும் வகையில் ஆண்டுதோறும் மார்ச் 23ஆம் திகதி பாகிஸ்தான் தேசிய தினம் கொண்டாடப்படுகிறது.

இதை முன்னிட்டு இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி பாகிஸ்தான் தலைமை அமைச்சர் இம்ரான்கானுக்கு வாழ்த்து செய்தி அனுப்பி உள்ளார். அதில், "தேசிய தினம் கொண்டாடும் பாகிஸ்தான் மக்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன். துணை கண்டத்தில் பயங்கர்வாதம் மற்றும் வன்முறை இன்றி ஜனநாயகம், அமைதி மற்றும் செல்வசெழிப்புடன் மக்கள் இணைந்து வாழும் நேரம் இது" என தெரிவித்துள்ளார்.

மோடிக்கு இம்ரான்கான் நன்றி தெரிவித்தார். அதில் "இந்தியாவுடன் பேச்சு தொடங்க இது ஒரு நல்ல தருணமாக கருதுகிறேன். அதன்மூலம் அனைத்து பிரச்சினைகளும் தீர்க்கப்படும். இருநாட்டு மக்களுக்கும் இடையே அமைதி, வளமையுடன் கூடிய புதிய உறவு தேவை" என்று தெரிவித்துள்ளார். (ம)

# நியூசிலாந்தின் மிகப்பெரும் ஜும்மா தொழுகை





கிறைஸ்ட்சேர்ச், மார்ச் 25

நியூசிலாந்து நாட்டில் மசூதிகளில் துப்பாக்கிச் சூடு நடந்த இடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மிகப்பெரும் தொழுகை இடம்பெற்றது.

இதில் ஜசிந்தா ஆர்ட்ரன் உள்பட பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கேற்றனர்.

நியூசிலாந்தின் கிறைஸ்ட்சேர்ச் நகரில் உள்ள மசூதியில் கடந்த 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 50 பேர் உயிரிழந்தனர்.

இதையடுத்து இஸ்லாமிய மக்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக நூர் மசூதி அருகேயுள்ள 'ஹாக்லே பார்க்' திறந்த வெளியில் கடந்த வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகை இடம்பெற்றது. இதில் சுமார் 20ஆயிரம்பேர்கலந்துகொண்டனர்.

இந்த தொழுகையில் நியூசிலாந்து தலைமை அமைச்சர் ஜசிந்தா ஆர்ட்ரனும் கலந்து கொண்டார். (ம)

# ஐ.எஸ். அமைப்பு வீழ்த்தப்பட்டது சிரிய ஜனநாயகப்படை அறிவிப்பு

டமஸ்கஸ், மார்ச் 25

சிரியாவில் இருந்து ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு முற்றிலுமாகத் தோற்கடிக்கப்பட்டது என்று அறிவித்தது அமெரிக்காவின் ஆதரவு பெற்ற சிரிய ஜனநாயகப் படை.



ஜிகாதியக் குழுவின் கடைசி கட்டுப்பாட்டு இடமாக இருந்த பாகூஸில், சிரியா ஜனநாயகப் படை ஆயுதப் போராளிகள் வெற்றிக் கொடிகளை உயர்த்தி கொண்டாடி வருகிறார்கள்.

சிரியா மற்றும் ஈராக்கில் 88 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் நிலப் பரப்பளவை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது.

தனது பிராந்தியத்தை அந்த அமைப்பு இழந்து வந்தாலும், இந்தக் குழு பன்னாட்டுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவே பார்க்கப்படுகிறது. ஏனென்றால் நைஜீரியா, ஏமன், ஆப்கானிஸ்தான் மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற பல நாடுகளில் ஐஎஸ் அமைப்பு தனது இருப்பை தக்கவைத்திருக்கிறது.

இறுதிப்போர் கிழக்கு சிரியாவில் உள்ள பாகூஸ் கிராமத்தில் மீதமிருந்த ஆயுததாரிகள் பதுங்கி இருந்த நிலையில், மார்ச் மாதத் தொடக்கத்தில் ஐஎஸ் மீதான இறுதித் தாக்குதலை குர்துக்கள் வழிநடத்தும் சிரியா ஜனநாயகப் படை தொடங்கியது. அந்தப் பகுதியில் அதிக அளவிலான பொதுமக்கள் இருந்ததால் தாக்குதல் இடையிடையே தடைப்பட்டது. இந்த நிலையில் நீண்ட போராட்டத்தின் பின்னர் இந்த வெற்றி கிட்டியுள்ளது. 'ஐ.எஸ் என்று கூறிக் கொண்ட அமைப்பு முற்றிலும் நீக்கப்பட்டு விட்டதை சிரியா ஜனநாயக படைகள் அறிவிக்கிறது. இந்த நாளில் வெற்றிக்கு வழிவகுத்த ஆயிரக்கணக்கான தியாகிகளை நாம் நினைவு கூர வேண்டும்' என்று தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது சிரிய ஜனநாயகப்படை. (ம)

## கொரிய கூட்டுறவில் இருந்து வெளியேறியது வடகொரியா!

பியாங்யாங், மார்ச் 25

கொரியத் தீபகற்பத்தில் போர் பதற்றத்தை தணிக்கும் வகையில் தென்கொரியாவில் அமைக்கப்பட்ட கூட்டுறவு அலுவலகத்தில் இருந்து வடகொரியா வெளியேறியது

பகைநாடான தென்கொரியாவுடன் இணக்கமான போக்கை கடைப்பிடிக்க விரும்பிய வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன், கடந்த ஆண்டு மனம்



மாறி வெள்ளைக்கொடி காட்டினார். தென்கொரியத் தலைநகர் சியோலில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் தொடருக்கு தனது நாட்டு அணியை அனுப்பியது, தென்கொரிய அரச பிரதிநிதிகள் குழுவுடன் பேச்சு நடத்தியது ஆகியவற்றின் மூலம் அனைவரின் புருவங்களை உயர வைத்தார்.

தென்கொரியாவில் உள்ள கேய்சோங் நகரில் இரு நாடுகளைச் சேர்ந்த உயரதிகாரிகள் சந்தித்து ஆலோசனை செய்ய கூட்டுறவு அலுவலகம் ஒன்றும் கடந்த செப்ரெம்பர் மாதம் அமைக்கப்பட்டது. அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப்புடன் சமீபத்தில் நடத்திய இரண்டாம் கட்ட பேச்சு தோல்வியில் முடிந்த பின்னர் வடகொரிய அதிபரின் மனப்போக்கில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில், கொரிய கூட்டுறவு அலுவலகத்தில் இருந்து வெளியேறுமாறு தங்கள் நாட்டு அதிகாரிகளுக்கு வடகொரிய அரசு உத்தரவிட்டுள்ளது. (ம)





ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போர் சிரியாவில் முடிவுக்கு வந்துள்ளது என்று சிரிய ஜனநாயகப் படை அறிவித்துள்ள நிலையில், இறுதிப்போர் தொடர்பான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டது. (ம)

# சோமாலியாவில் 'அல் சபாப்' தாக்குதல் துணைஅமைச்சர் உட்பட 6 பேர் சாவு



மொகடிஷூ, மார்ச் 25

சோமாலியத் தலைநகர் மொகடிஷூ நகரில் தொழிலாளர் நலத்துறை அமைச்சகத்தின் மீது 'அல் சபாப்' ஆயுதக்குழு நேற்று நடத்திய தாக்குதலில் துணை அமைச்சர் உட்பட 6 பேர் உயிரிழந்தனர்.

'அல் குவைதா' பயங்கரவாத இயக்கத்தின் ஆதரவாளர்களாக சோமாலியா நாட்டில் இயங்கிவரும் அல் சபாப் பயங்கரவாதிகள் அவ்வப்போது வன்முறை தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். சோமாலியத் தலைநகர் மொகடி நகரில் பொதுப்பணித்துறை மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சகத்தின் மீது அல் ஷபாப் ஆயுததாரிகள் நேற்று நடத்திய மகிழுந்து குண்டு தாக்குதலில் தொழிலாளர் நலத்துறை துணை மந்திரி சக்கர் இப்ராகிம் அப்தல்லா உள்பட 6 பேர் உயிரிழந்தனர். பலத்த காயங்களுடன் பத்துக்கும் அதிகமானவர்கள் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. (ம)



## இன்றைய நாள்

**மேடம்:** பெரியவர்களின் வழிகாட்டுதலை பின்பற்றுவதால் நன்மை நடக்கும். தொழில் வியாபாரத்தில் உபரி வருமானம் கிடைக்கும். வீட்டுக்குத் தேவையான பொருட்கள் வாங்குவீர்கள்.

**இடபம்:** சொல், செயலில் வசீகரம் வெளிப்படும். தொழில், வியாபாரத்தில் வருமானம் சீராக இருக்கும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் நன்மதிப்பை பெறுவர்.

**மிதுனம்:** மனதில் இருந்த திட்டம் செயல் வடிவமாகும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணியை நிறைவேற்றுவீர்கள் மேலதிக வரு மானம் கிடைக்கும்.

**கடகம்:** வெளி வட்டாரத் தொடர்பு தொந்தரவுதரலாம். சொந்தப் பணிகளை நிறைவேற்ற நல்ல நாள். தொழில், வியாபாரம் சுமாரான அளவில் இயங்கும். அளவான பணவரவு கிடைக்கும். உடல்நிலையில் கவனம் வேண்டும்..

**சிங்கம்:** சாதனை நிகழ்த்தும் வாய்ப்பு தேடி வரும். பணிகளை திறம்பட நிறைவேற்றுவீர்கள்.. தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும்.

**கன்னி:** ஏழைகளுக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி அடையும். கொடுக்கல், வாங்கலில் முன்னேற்றம் உண்டு. வெகுநாளாக வாங்க நினைத்த பொருளை வாங்குவீர்கள்.

**துலாம்:** நண்பர்கள் மீதான நம்பிக்கை குறையும். தொழில், வியாபாரத்தில் சற்று பின்தங்கும் நிலை வரலாம். முக்கியச் செலவுக்கு தேவையான பணம் கிடைக்கும். வெளியூர் பயணத்திட்டத்தில் மாறுதல் இருக்கும்.

**விருச்சிகம்:** அதிகம் பேசுவதை தவிர்க்க வேண்டும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கடுமையாக உழைப்பீர்கள். பணவரவில் தாமதம் இருக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும்..

**தனுசு:** தாமதமான செயல்கள் முடியும். உங்களின் தனித்திறமையை எல்லாரும் அறிந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டு.

**மகரம்:** உறவினர்கள் மனதில் உங்களைப் பற்றிய மதிப்பு உயரும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். உபரி வருமானம் கிடைக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**கும்பம்:** உறவினர்களுக்கு நன்மை செய்தாலும் பிரச்னை வரலாம். அடுத்தவர் விஷயத்தில் ஒதுங்கி இருப்பது நல்லது.

**மீனம்:** வாக்குறுதியை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படலாம். தொழில், வியாபாரம் கூடுதல் முயற்சியால் சீராகும். லாபம் மிதமாக இருக்கும். பெண்கள் ஆடம்பர எண்ணமுடன் செயல்படுவர்.

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 25

**நாமகள் கழக கால்பந்தாட்டம்**

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் வடக்கின் நாயகன் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து மானிப்பாய் ரெட் றேஞ்சர்ஸ் விளையாhட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி சில்வெஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கரப்பந்தாட்டம்**

வல்வை சனசமூக சேவா நிலையத்தின்பவளவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வல்வெட்டித்துறை உள்ளக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நொரோன் விளையுாட்டுக் கழக அணியை எதிர்த்து சிவகுமரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**வளர்மதி ச.ச.நி தாச்சித் தொடர்**

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் தாச்சித்தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் செவின்ஸ்ரார் அணியை எதிர்த்து தூர்க்கா அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவசக்தி அணியை எதிர்த்து சித்தி விநாயகர் விளை யாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## துர்க்கா அணி அசத்தலாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் த்தாச்சித் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் துர்க்கா அணி அபார வெற்றி பெற்றது.

வளர்மதி சனசமூக நிலைய மைதானத்தில் இரவு 8 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் துர்க்கா விளையாட்டுக்கழக பி அணியை எதிர்த்து கலைமகள் அணி மோதியது. 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் துர்க்கா அணி வெற்றிபெற்றது. (ம-23)



# குருநகர் பாடும்மீன் இறுதிக்குத் தகுதி


யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அண்ியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி மோதியது.

ஆட்டநேர முடிவில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

4:2 என்ற கோல் கணக்கில் பாடும்மீன் அணி வெற்றிபெற்றது. (ம-23)



## 3 இலக்குகளால் வென்றது யூனியன்

யாழ்ப்பாணம், மார்ச் 25

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தி வரும் 19 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் யூனியன் கல்லூரி அணி 3 இலக்குகளால் வெற்றி பெற்றது. யூனியன் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மன்னார் சித்தி விநாயகர் இந்து கல்லூரியை எதிர்த்து யூனியன் கல்லூரி அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடி 154 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி அணி 42 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. (ம-23)

# பாரதியை வீழ்த்தி சிவானந்தா மகுடம்

யாழ்ப்பாணம், மார்ச் 25

பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில்ான கால்பந்தாட்டத் தொடரில் கொற்றாவத்தை சிவானந்தா அணி சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இதன் இறுதியாட்டம் நெடியகாடு இளைஞர் விளையாட்டு கழக மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இறுதியாட்டத்தில் பொலிகை பாரதி அணியை எதிர்த்து அல்வாய் சிவானந்தா அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்ததல்ல என்பதை நிரூபிக்கும் முகமாக விளையாடிக் கொண்டிருந்தன. கோல்கள் இல்லாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியாட்டத்திலும் இரு அணிகளும் சமபலத்துடன் மோதின. சிவானந்தா அணியின் வீரரான சுமன் கோலொன்றைப் பதிவுசெய்ததை அடுத்து முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் சிவானந்தா அணி வெற்றிபெற்றது. (ம-422)



## மின்னொளி வென்றது!

யாழ்ப்பாணம், மார்ச் 25

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மின்னொளி அணி வெற்றிபெற்றது.

வளர்மதி சனசமூக நிலைய மைதானத்தில் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் அம்பிகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மின்னொளி விளையாட்டுக் கழக அணி மோதியது. 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மின்னொளி அணி வெற்றி பெற்றது. (ம-23)



## நியூவாரியர்ஸ் அணி இலகுவான வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 25

வல்வை சனசமூக சேவா நிலையத்தின் பவள விழாவை முன்னீட்டு நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரில் மல்லாகம் நியூவாரியர்ஸ் அணி நேர்செற் கணக்கில் வெற்றி பெற்றது.

வல்வெட்டித்துறை உள்ளக விளை யாட்டரங்கில் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் மல்லாகம் நியூ வாரியர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி கம்பன் விளையாட்டுக் கழக அணி மோதியது. 25:15, 2512 என்ற நேர்செற் கணக்கில் மல்லாகம் நியூ வாரியஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)

## காரைநகர் பிரதேச விளையாட்டு விழா

காரைநகர் மார்ச் 25

காரைநகர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு காரைநகர் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற உள்ளது.

காரைநகர் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கரவெட்டிப் பிரதேச செயலர் ஈ.தயாரூபன் கலந்துகொள்ள உள்ளார். (ம-250)




# ஆர்.சி.பிக்கு அடி பலமா?


ஹர்பஜன் ருவிற்

பெங்களூர்றோயல் சலஞ்சர்ஸுக்கு எதிரான முதலாவது ஆட்டத்தில் சென்னை அணியின் வெற்றிக்கு வித்திட்டு ஆட்டநாகனாகத் தெரிவு செய்யப்பட்ட ஹர்பஜன் சிங், பெங்களூர் அணியைச் சீண்டும் வகையில் தனது கீச்சகத்தில் பதிவிட்டுள்ளார்.

'என்ன ஆர்.சி.பி. இந்த ரவுண்டு அடி கொஞ்சம் பலமோ' என்றவாறாக அமைந்துள்ளது ஹர்பஜனின் கீச்சகப் பதிவு. இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் அணி வெறும் 70 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. ஹர்பஜன் 4 பந்துப்பரிமாற்றங்களில் 20 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 3 இலக்குகளைக் கைப்பற்றினார். கோஹ்லி, வில்லியர்ஸ், மொயின் அலி ஆகிய முக்கிய வீரர்களை வீழ்த்தியதால் ஆட்டநாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

சென்னை அணி தனது இரண்டாவது ஆட்டத்தை டெல்லி ஹப்பிட்டல்ஸ் அணிக்கு எதிராக நாளை விளையாடுகிறது. (ம)




புல்மாவில் அண்மையில் நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்த இந்திய இராணுவத்தினரின் குடும்பங்களுக்கு 2 கோடி ரூபா நிதியுதவி வழங்கியது சென்னை சுப்பர் கிங்ஸ் அணி. (ம)



# ரெய்னா 5,000

ஐ.பி.எல். தொடரில் 5 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த முதலாவது வீரர் என்ற அடைவை எட்டினார் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் ரெய்னா.

ஐ.பி.எல் தொடரைப் பொறுத்தவரை அதிக ஓட்டங்களை அடித்த வீரர்கள் பட்டியலில், முதல் 7 இடங்களிலுமே இந்திய வீரர்கள்தான் இருக்கின்றனர். அதில் முதல் இடத்தில் ரெய்னாவும், இரண்டாவது இடத்தில் விராட் கோஹ்லியும், மூன்றாவது இடத்தில் ரோகித் சர்மாவும் உள்ளனர். ஆனால் இதுவரை எந்த வீரரும் 5 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்ததில்லை என்ற கருத்து நிலவிய நிலையில் குறித்த மைல்கல்லை முதலாவதாக எட்டினார் ரெய்னா.

இரண்டாவது இடத்தில் கோஹ்லி 4 ஆயிரத்து 948 ஓட்டங்களையும், மூன்றாவது இடத்தில் ரோகித் சர்மா 4 ஆயிரத்து 493 ஓட்டங்களையும் பெற்றுள்ளனர். (ம)

# சி.எஸ்.கேயிடம் தோற்றதை மறப்பதற்கு விரும்புகிறோம்

கோக்லி மறுப்பல் கருத்து

ஐ.பி.எல். தொடரின் முதலாவது ஆட்டத்தில் சென்னை அணியிடம் தோற்றதை மறப்பதற்கு விரும்புகிறோம் என்று கருத்துத் தெரிவித்தார் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியின் தலைவர் விராட் கோக்லி.

ஆட்டம் முடிந்த பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சிஎஸ்கே அணியிடம் அடைந்த தோல்வியை நாங்கள் மறக்க விரும்புகிறோம். சாதமாக எடுத்துக்கொள்ள விரும்புகிறோம். தொடக்கத்திலேயே இதுபோன்ற மோசமான தோல்வியை அடைந்தது நல்லதுதான். இதன்மூலம் நாங்கள் விழித்துக்கொள்வோம். நாங்கள் இந்த



ஆடுகளத்தில் துடுப்பெடுத்தாட முடியாமல் சிரமப்பட்டோம். துடுப்பெடுத்தாடுவதும் எளிதானது அல்ல. இன்னும் ஆடுகளம் சிறப்பாக அமைக்கப்பட்டு இருக்கலாம். நாங்கள் 150 ஓட்டங்கள்வரை எடுப் போம் என்று நினைத் தோம் ஆனால் முடியவில்லை. 120 ஓட்டங்களைச் சேர்த்திருந்தால், நாங்கள் வெற்றிபெற்றிருப்போம். 3 வேகப்பந்து வீச்சாளர்கள் இன்று அணி யில் இருந்தும் சிறப்பாகப் பந்துவீசினார்கள். குறிப்பாக நவ்தீப் சைனி நன்றாகப் பந்துவீசினார்' எனத் தெரிவித்துள்ளார். (ம)

# ஆர்.சி.பி. இலகுவான அணியல்ல

கம்பீருக்கு விராட் கோக்லி பதில்

இந்திய அணித்தலைவர் விராட் கோக்லியையும், அவரின் தலைமைத்துவத்தையும், பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியையும் விமர்சித்து கம்பீர் பல்வேறு கருத்துக்களை வெளிப்படுத்திய நிலையில் அவற்றுக்குப் பதிலடி கொடுத்துள்ளார் கோக்லி.

கோக்லி பல சாதனைகளை நிகழ்த்தியதற்காக கொண்டாடப்படுவர் என்றாலும் இன்னமும் அவர் தலைமையில் ஐபிஎல் கோப்பையை ஆர்சிபி வெல்லவில்லை என்ற விமர்சனங்கள் சிறிது காலமாக அவர் மீது வலம் வந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக, டோனி, ரோகித் சர்மாதான் பெரிய தலைவர்கள், கோக்லி ஆர்சிபி அணியின் கேப்டனாக நீடிப்பது அவரது அதிர்ஷ்டம் என்று சாடியிருந்தார் கம்பீர்.

ஆனால் ஐபிஎல்கோப்பை வெல்லவில்லை என்பது எனக்கு ஏதோ வெறுப்பைக் கிளப்புகிறது என்று கூறுவது தவறு, அப்படியெல்லாம் ஒன்றுமில்லை என்று இந்தக் கருத்துகளை ஊதிவிட்டுள்ளார் விராட் கோக்லி. இது கம்பீருக்கான பதிலடி என்றே தெரிகிறது.

'நிச்சயம் ஐபிஎல் கோப்பையை வெல்ல வேண்டும் என்பதே விருப்பம். நான் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்கிறேன், ஆனால் ஐபிஎல் கோப்பையை வெல்வது அல்லது வெல்வதில்லை என்பதை வைத்து என்னை எடைபோட்டால் அது பற்றி கவலையில்லை என்றே கூறுவேன்.

அளவுகோல்களை நீங்கள் நிர்ணயிக்க முடியாது. நான் எப்பொதெல்லாம், எங்கெல்லாம் ஆடுகிறேனோ சிறப்பாக ஆடுவதுதான் என் வேலை.

எல்லா கோப்பைகளையும் வெல்ல ஆசைதான், ஆனால் பல வேளைகளில் அது நடப்பதில்லை. நாங்கள் ஏன் வெல்லவில்லை என்பதை எதார்த்தமாக யோசித்துப்பார்க்க வேண்டும். அழுத்த சூழ்நிலைகளில் மோசமான முடிவுகளை எடுத்ததால் தான் தோல்விகள் ஏற்பட்டன. வெளியிலிருந்து பார்ப்பவர்கள் போல் நான் செயல்பட்டால் 5 ஆட்டங்களுக்கு மேல் நான் தாங்க மாட்டேன். நான் வீட்டில்தான் இருக்க வேண்டும். சிலர் இது பற்றி பேசுவது எனக்கு தெரிகிறது, என்னைப் பற்றி பேசும் வாய்ப்பை அவர்கள் இறுகப் பற்றிக் கொள்கிறார்கள். ஆனால் எனக்கென்று பொறுப்பு உள்ளது, தலைவர் என்ற பொறுப்பு உள்ளது. ஐபிஎல் கோப்பையை வெல்வது எனக்கு பிடித்தமானது தான், இதனைச் சாதிக்க இந்த விமர்சனங்கள் உதவினால் நல்லது - என்று கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)

திரு.தொம்சன் அவர்களின் மூன்றுமாத
**SPOKEN ENGLISH** WITH DIPLOMA CERTIFICATE
அரச தனியார் ஊழியர்கள், ஆசிரியர்கள், இளைஞர் யுவதிகள், உயர்கல்வி மாணவர்கள் இணையமுடியும்
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் : 30.03.2019
1.காலை 8.00 - 10.00 2.மாலை 03-05
02.04.2019 வரை இணைவோருக்கு மூன்று மாத பயிற்சிக்கட்டணம் ரூபா 5500 3000 மட்டுமே.
செவ்வாய் வியாழன் பிரிவுகள் 02.04.2019
1.காலை 8.30 - 10.00 2.மாலை 03-05
SAAMSON
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர்
021 222 4282 077 621 4567

# உக்ரைனுடனான ஆட்டத்தை சமன்செய்தது போர்த்துக்கல்!

ஐரோப்பிய அணிகளுக்கு இடையிலான யூரோ கிண்ணத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டமொன்றை சமநிலையில் முடித்தது போர்த்துக்கல்.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் கோல்கள் எதையும் பதிவுசெய்யாததை அடுத்து ஆட்டம் சமநிலையில் முடிந்தது. ரொனால்டோ விளையாடிய போதிலும் பலம் வாய்ந்த போர்த்துக்கலால் உக்ரைனை வெற்றிபெற முடியாதமை விமர்சனங்களைத் தோற்றுவித்துள்ளது. (ம)



விசேடசலுகைகளுடன் இன்றே பெற்றுக்கொள்ளுங்கள்
HONDA

CD DREAM 110
CB TWISTER
CB UNICORN
CB SHINE
CB HORNET 160 R
CBR 250R
தொடர்புகளுக்கு: (வரை. ஸ்டபர்ட் மோட்டார் (தனியார்)
நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்.
RATNAM BROTHERS - JAFFNA
021 222 6185, 077 734 0056
RATNAM BROTHERS - KILINOCHCHI
021 228 3485
N.S. RATNAM BROTHERS
VAVUNIYA - 077 039 7725, 077 178 1151
MANNAR - 077 672 2084
MALLAVI - 077 257 1938

காசி யாத்திரை
ஆரம்பம் : 15.05.2019 யாத்திரீகர் : 10 நாள்கள் : 10
**தரிசிக்கும் இடங்கள்:**
டெல்லிநாராயணர் கோயில் வேறு இடங்களும் காசியில் 15 இடங்கள், கங்காபூசை, கயா, புத்தகயா, அலகாபாத், (கங்கா, யமுனா, சரஸ்வதி) திருவேணிசாங்கமம், சீத்தாமடி, ஆக்ரா(தாஜ்மகால்), மதுரா கிருஷ்ண ஜென்மபூமி, பிரேமந்திர், பிரமாண்டமான கிருஷ்ணர் கோயில், செங்கோட்டை, இராமேஸ்வரம், உத்திர கோசமங்கை, திருப்புலானி, நவபாஷானம், பஞ்சமுக ஆஞ்சநேயர், அப்துல்கலாம் மணிமண்டபம், மதுரை மீனாட்சி அம்பாளையும் தரிசிக்கலாம்.
**ஒரு நாள் சென்னையில் சொப்பிங்**
**பெற்றுக் கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை**
4 விமான பயணடிக்கட், மூன்று வேளை மடப்பள்ளி ஆள்கள் சமைத்த உணவு, காப்பி, ரீ, குடிநீர் 2 பேருக்கு, வெஸ்ரன் கொமட், குளியலறை, இணைந்த அறைகள், பயணம் முழுவதும் A/C வாகன வசதி, யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வரவும் திரும்ப யாழ் செல்லவும் வாகன வசதி ஒழுங்குகள் செய்து தரப்படும். பதிவு செய்யவும்.
**"சென்றவர்களைக் கேளுங்கள் சென்று வரலாம் வாருங்கள்"**
கலாநிதி.T.ஸ்ரீரெங்கநாதன் மகன் - ராஜன்
59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு - 11
077 768 0102/ 077 736 2154
Email: Sriranganathan2601@gmail.com
(IN 9608) (H.T)



பெற்றுகொள்ளக் கூடிய இடங்கள் : DAMRO | JKOA | SINGHAGIRI | SINGER | softlogic | Dialog | Telecom | daraz | WOW.lk
ரூ. 139,990 இலிருந்து.
இப்படத்தில் காண்பிக்கப்படும் பொருளின் விலை எவ்வித முன்னறிவிப்புமின்றி மாறுபடக்கூடும். மேலதிக தகவல்களுக்கு விநியோகஸ்தர்கள் மற்றும் விற்பனை முகவர்களை தொடர்பு கொள்ளவும். இங்கு காண்பிக்கப்பட்டுள்ள பொருளின் படங்கள், அம்சங்கள் மற்றும் விவரக்குறிப்பீடுகள் ஆகியன கட்புலனூடான தெளிவுப்பாட்டை வழங்கும் நோக்குடனே அமைந்துள்ளன. உண்மையான பொருள் இதிலிருந்து மாறுபடக்கூடும்.
SIMPLY DIAL
011 SAMSUNG 7267864
SamsungLankaOfficial
SamsungLankaOfficial

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்
அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்
1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.